
# கைகள் கோர்த்து...



இன்பா அலோசியஸ்


கைகள் கோர்த்து...
இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

# கைகள் கோர்த்து...

# Kaigal Korthu...

Author:

## இன்பா அலோசியஸ்

**Infaa Alocious**

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

பகுதி – 1

பகுதி – 2

பகுதி – 3

பகுதி – 4

பகுதி – 5

பகுதி – 6

பகுதி – 7

பகுதி – 8

பகுதி – 9

பகுதி – 10

பகுதி – 11

பகுதி – 12

பகுதி – 13

பகுதி – 14

பகுதி – 15

பகுதி – 16

பகுதி – 17

பகுதி – 18

பகுதி – 19

பகுதி – 20

பகுதி – 21
பகுதி – 22
பகுதி – 23

# பகுதி – 1

கடிகாரத்தில் ஒரு கண்ணும்..., சமையலறையில் ஒரு கண்ணும், மகன்மேல் ஒரு கண்ணுமாக காலை வேளையில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தாள் காவியா.

அலுவலகத்தில் நேற்றைக்கே அனுப்பியிருக்க வேண்டிய கடிதங்களை வேறு பெண்டிங் வைத்துவிட்ட செய்கை..., அதை இன்று காலையிலேயே அனுப்ப வேண்டிய கட்டாயம்..., 'அலுவலகத்துக்கு சீக்கிரம் போய்விட்டால் பரவாயில்லை...' எண்ணியவளுக்கு அது நிச்சயம் முடியும் என்றே தோன்றவில்லை.

ஓரவிழியாக தன் அத்தை வேணியைப் பார்த்தவளுக்கு..., 'இவர் ஏதாவது உதவி செய்தால் தேவலாம்...' இந்த எண்ணம் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

அதிகாலையில் குழந்தையும் கவனித்து, சமையலையும் செய்து, வீட்டுவேலைகளையும் முடித்து ஒற்றை ஆளாக அனைத்தையும் செய்ய தான் போராடுகையில், இவற்றை எல்லாம் பார்த்தாலும், கொஞ்சம்கூட சலனமே இல்லாமல், இவரால் எப்படித்தான் தொலைக்காட்சியில் மூழ்க முடிகிறதோ...?' சிந்திக்கையிலேயே சற்று வெறுப்பாக வேறு வந்தது.

அவரைப்பற்றி யோசித்தால் தன் வேலைகள் தடைபடும் என்பது புரிய, தன் வேலையில் கவனமானாள்.

"பிரதீப்..." தாயின் அழைப்பில்..., தன் தாமஸ் டிரெயினில் இருந்து கவனம் கலைந்தவன்..., "என்னம்மா...?" அங்கிருந்தே குரல் கொடுத்தான்.

"ப்ரெஷ் பண்ணிட்டியா...? ஸ்கூல்க்கு போக டைம் ஆகுது பார்..." வாணலியில் இருந்த பொரியலை கிண்டியவாறே கேட்டாள்.

“ம்…” அரை மனதாக முனகியவன், அங்கிருந்து அகன்றான். ப்ரதீப் எதற்கும் அனாவசியமாக அடம் பிடிக்கும் ரகம் கிடையாது. தன் வேலையை தானே செய்து கொள்வான். அவனது இரண்டரை வயதுக்கு அவனது பக்குவம் அதிகம் என்றே அவளுக்குத் தோன்றும்.

‘இவனது அப்பாவைப்போல் ப்ரதீப் இல்லை…’ சட்டென கணவனின் நினைவு தாக்க…, கூடவே அதீத வெறுப்பும், கோபமும் அவளை ஆக்கிரமிக்க, நொடியில் அதை உதறியவள், வேகமாக குளிக்கச் சென்றாள்.

எவ்வளவுதான் அரக்க பரக்க கிளம்பினாலும்…, வழக்கத்தைவிட பத்து நிமிடம் தாமதித்துவிட…, ப்ரதீப்பை ப்ளேஸ்கூலில் விட்டுச் சென்றால் இன்னும் தாமதமாகும் என்பதை உணர்ந்தவள், வேறு வழியின்றி தன் மாமியாரை அணுகினாள்.

காவியா அருகில் வரவே…, தொலைக்காட்சியில் ஆன்மீக நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்தவர், தன் பார்வையை அவள்பக்கம் திருப்பினார்.

‘என்ன…?’ என்ற பாவனை அதில் தொங்கி நிற்க,

“அத்தை…, எனக்கு ஆபீஸ்க்கு லேட் ஆகிடுச்சு. இன்னைக்கு மட்டும் ப்ரதீப்பை கொஞ்சம் ஸ்கூல்ல விட்டுடறீங்களா…?” வெகுவாக தயங்கியே கேட்டாள்.

“எனக்கு முட்டிவலின்னு உனக்கே தெரியுமே…, இதில் ரெண்டு தெரு தள்ளி நடந்து போவது என்றால்…, என்னால் முடியாது…” கறார் குரலில் உரைத்தவர், மீண்டும் தொலைக்காட்சியில் கவனமானார்.

அவர் இப்படித்தான் சொல்வார் என எதிர்பார்த்திருந்த பொழுதும், அதை அவர் வாயாலேயே கேட்க மிகுந்த கஷ்டமாகத்தான் இருந்தது. அவரை மௌனமாக வெறித்தவள்…, இங்கேயே இருந்தால் மேலும் தாமதமாகும் என உணர்ந்தவள், வீட்டைவிட்டு வெளியேறினாள்.

வண்டியை ஸ்டார்ட் செய்தவள்..., சிட்டாய் பறந்தாள்.

போகும் வேளையில்..., "அந்த பாட்டி எப்போம்மா போவாங்க...?" பிரதீப்பின் கேள்வி அவளை திகைக்க வைத்தது. 'இவன் இப்படி கேட்பவன் இல்லையே...' எண்ணியவள்..., "ஏம்மா அப்படிக் கேக்கற...?" இருக்கும் அவசரத்தை அவனிடம் திணிக்க மனமின்றி நிதானமாகவே கேட்டாள்.

"அவங்க என்னைய தாமஸ் பாக்கவே விட மாட்டேங்கறாங்க..., பிரதீபுக்கு தாமஸ் வேணும்..." விட்டால் அழுதே விடுபவன்போல் இருந்தான்.

அவனுக்கு இருக்கும் ஒரே சந்தோஷமே போகோ சேனலில் வரும் கார்டூன், தாமஸ் டிரெயின் பார்ப்பதுதான். அதுவும்..., மாமியார் வந்த இத்தனை நாட்களில் பறிபோவதை எண்ணி மனம் கலங்கினாலும், அதை வெளிக்காட்டாமல்..., "அவங்க நம்ம பாட்டிம்மா..., அப்படியெல்லாம் கேக்கக் கூடாது. அதான் அம்மா ப்ரவீனுக்கு தாமஸ் டிரெயின் வாங்கிக் கொடுத்திருக்கேனே..., நீ கொஞ்ச நாள் அதில் விளையாடு சரியா..." அவனை சமாதானப் படுத்தினாள்.

அவனுக்கு சமாதானம் சொல்லிவிட்டாலும்..., அவர் வந்த இத்தனை நாட்களில் அவளுக்கு வேலை இரட்டிப்பானதை நினைத்து மனம் சுணங்கினாலும், அதை மகனிடம் வெளிப்படுத்த அவள் தயாராக இருக்கவில்லை.

"ம்..., சரி..." அரைமனதாக அவன் தலை அசைக்க, மகனை ப்ளே ஸ்கூலில் விட்டவள்..., முறையாய் அவனிடம் விடைபெறக்கூட நேரமின்றி தன் அலுவலகத்துக்கு வண்டியை செலுத்தினாள்.

மாவட்ட புள்ளியியல் அலுவலகம்..., பெயின்ட் உதிர்ந்திருந்த பெயர்ப்பலகையைச் சுமந்த அந்த அலுவலகத்தின் முன்னால்..., மரத்தின் நிழலில் வண்டியை நிறுத்திவிட்டு, லஞ்ச் பேகையும் எடுக்க நேரமின்றி கிட்டத்தட்ட ஓடினாள்.

பத்துமணி அலுவலகத்துக்கு பத்து முப்பதுக்கு வந்து சேர்ந்தவள்..., மற்றவரின் கண்டனப் பார்வைக்கு ஆளானாள் என்பது சொன்னால் மிகையில்லை. அந்த அரசாங்க அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்த இரண்டே மாதங்களில் தாமதமாக வருவது இது இரண்டாம் முறைஎன்றால்..., அவர்கள் அப்படிப் பார்க்காமல் என்னதான் செய்வார்கள்.

அங்கே இருந்த லெஜ்ஜரில் சைன் போட்டவள்..., அன்று அனுப்ப வேண்டிய கடிதத்தை கையால் எழுதத் துவங்கினாள். கணினியில் எழுதி பழக்கப்பட்ட கைகள்..., கடிதத்தை..., அதுவும் தமிழில் எழுதிப் பழகவே அவளுக்கு சில நாட்கள் தேவைப்பட்டது.

முறையான பார்மெட்டில் கடிதம் எழுதி, எழுத்துப்பிழை இருக்கிறதா என சரிபார்த்து, திருப்தி ஏற்பட்ட பிறகு, அதை அங்கிருந்த டைப்பிஸ்ட்டிடம் கொடுக்க, மெல்லிய புன்னகையோடு அதை அவள் பெற்றுக் கொண்டாள்.

“என்ன காவியா..., இன்னைக்கும் லேட் போல...” அவள் சாதாரணமாக கேட்கிறாளா..., இல்லை குத்திக் காட்டுகிறாளா எனப் புரியாத மனநிலையில், அவளுக்கு ஒரு மெல்லிய சிரிப்பை பதிலாக்கியவள், தன் இருக்கைக்கு நகர்ந்தாள்.

டேபிள்மேல் இருந்த அறுபது ஃபயிலைப் பார்க்கையிலேயே சற்று மலைப்பாகத்தான் இருந்தது. அவள் ஒன்றும் வேலை செய்ய சோம்பல் படுபவள் கிடையாது..., ஆனால்..., இங்கே அவற்றை எப்படிச் செய்ய வேண்டும் என்பதில்தான் அவளது குழப்பமே.

இதற்குமுன் அவளது வேலையை, பொறுப்பு அதிகாரியாகப் பார்த்த மனோவிடம் அதைக் கேட்டு, ஒவ்வொரு ஃபயிலையும் ஸ்டடி செய்ய முயன்றாள்.

அதுவும் இந்த மாதத்தில் ஆண்டு கணக்கை தாக்கல் செய்ய வேண்டி இருந்ததால்..., புள்ளியியல் ஆய்வாளரான

அவளுக்கு வேலைப்பளு சற்று அதிகம்தான்.

அவள் தன் வேலையில் மூழ்கத் துவங்கிய வேளையில்..., தன் முதுகைத் துளைக்கும் ஒரு பார்வையை அவள் உணர்ந்தாள். ஒரு பெண்ணுக்கே உரிய பிரத்தியேக வரம் அது..., யாராவது தன்னை கூர்ந்து நோக்கினாலே அதை அவளால் உணர்ந்துகொள்ள முடியும்.

அப்படி இருக்கையில்..., தன்னை யாரோ அதிகமாக பார்வையில் தொடர்வதை சில நாட்களாக உணர்ந்தவளுக்கு, சட்டென தேகத்தில் ஒரு பரபரப்பும், பார்வையில் ஒரு கவனமும் குடிகொண்டது.

மற்றவர் கவனம் கலையாதவாறு தான் பார்த்துக்கொண்டிருந்த ஃபயிலில் இருந்து பார்வையை பிரித்தவள், சாதாரணமாக பார்ப்பதுபோல் அந்த அலுவலகத்தில் இருந்த மற்றவரைப் பார்த்தாள்.

அங்கே அவளோடு சேர்த்து மொத்தமே பதினைந்து பேர் இருந்தார்கள். ஆறு பெண்கள், மற்றவர்கள் அனைவரும் ஆண்கள். அவர்களைப் பற்றியும் அவளுக்கு அவ்வளவாகத் தெரியாது.

அங்கிருந்த ஆண்களில் முக்கால்வாசிபேர் நடுத்தர வயதைக் கடந்தவர்களாகத்தான் இருந்தார்கள். திருமணம் ஆகாத ஆண்களின் பார்வையும் தன்மேல் இருப்பதுபோல் இல்லை.

அப்படி இல்லாமல் இருந்திருந்தால் கூட..., தான் பார்த்தவுடன் தங்கள் பார்வையை மாற்றியிருந்தாலும், அவர்களது உடல்மொழியோ., இல்லையென்றால் தடுமாறும் பார்வையோ அவர்களைக் காட்டிக் கொடுத்திருக்கும்.

இப்படி எதுவும் இல்லாமல்..., அவளுக்கு சற்று பயமாகத்தான் இருந்தது. தான் உணரும் அந்த பார்வை..., அவளை தொல்லை செய்வதாகவோ..., அவள் அமைதியை

குலைப்பதாகவோ இருந்திருந்தால் கூட இவ்வளவு பயப்பட்டிருக்க மாட்டாள்.

ஆனால்..., எதையோ உணர்த்த துடிக்கும் பார்வை..., தன் அடி மனதை அசைக்கும் பார்வையாக அது இருப்பதைத்தான் அவளால் தாங்கிகொள்ளவே முடியவில்லை.

‘ஆண்டவா, இது என்ன சோதனை...?’ அந்த இக்கட்டில் மனம் கடவுளைத்தான் நாடியது.

***

# பகுதி – 2

பதினோரு மணிக்கு டீ பிரேக்குக்கு ஆண்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேற, சற்று ஆசுவாசமாக மூச்சு விட்டாள். சற்று நேரத்துக்கு தொல்லை இருக்காது என அவள் நினைக்க..., அந்த நேரம்..., இன்னும் அதிகமாக அந்தப் பார்வையை உணர்ந்தாள்.

அவள் இங்கே வந்தே முழுதாக இரண்டு மாதம் நிறைவடையவில்லை..., அதற்குள்ளாக இது என்ன சோதனை...? அதைவிட, தான் திருமணம் ஆனவள் என்பதும், இளம் விதவை கோட்டாவில்தான் இந்த பணிக்கு வந்திருக்கிறாள் என்பதும்..., கூடவே..., அவளுக்கு இரண்டரை வயதில் மகன் இருக்கிறான் என்பதும் அங்கே அனைவரும் அறிந்த உண்மை.

அப்படி இருக்கையில்..., தன்னை இப்படி ஒரு கண்ணோட்டத்தில் பார்ப்பவர் யார்? அதுவும்..., இங்கே..., இந்த அறைக்குள் ஆண்கள் யாரும் இல்லாத வேளையில் கூட, தான் அந்த பார்வையை உணர்வது என்றால்..., தன் பின்னால் இருக்கும் ஜன்னலை சட்டென திரும்பிப் பார்க்க, யாரோ அந்த மரத்தின் பின்னால் மறைவதை அவள் கண்டுகொண்டாள்.

‘அப்படியென்றால் என் உள்ளுணர்வு சொன்னது பொய்யில்லை..., அவன் இங்கே என்னுடன் வேலை பார்ப்பவன் இல்லையோ...? ஒரு வேளை..., இங்கிருந்து வெளியே சென்று பார்க்கிறானா...? ஏன்...? எதற்காக...?” அவளால் இயல்பாக இருக்க முடியவில்லை.

அவள் முகம் ஒரு மாதிரி மாறியதையும்..., அவள் முள்ளின்மேல் அமர்ந்திருக்கும் அவஸ்தையில் நெளிவதையும் கண்ட ஷீபா..., “காவியா..., உடம்பு எதுவும் சரியில்லையா...? ஏன் ஒரு மாதிரி இருக்க...?” இங்கே வந்த நாள் முதல், அவளிடம் அக்கறையும், பாசமும் கலந்து

உரையாடும் ஷீபா கேட்க, அவளுக்கு ஒரு நிமிடம் என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

ஷீபா அவளது உயரதிகாரி..., எஸ் ஓ..., ஆனால் ஒரு நாள் கூட அவளிடம் உயரதிகாரி என்ற பலத்தையோ, பதவியையோ அவளிடம் காட்டியவர் கிடையாது. அவளுக்கு வேலையில் ஏற்படும் சந்தேகங்களைக் கூட பொறுமையாக சொல்லிக் கொடுப்பவர்.

‘ஒரு வேளை இவரிடம் சொன்னால் தீர்வு கிடைக்குமா...?’ எண்ணியவள், வந்த சில நாட்களிலே இப்படிச் சொன்னால், அவர் என்னவென்று எடுத்துக் கொள்வார் என்ற யோசனை ஓட, அதை அப்படியே தடை செய்தாள்.

ஷீபா, இன்னும் நான்கு வருடங்களில் பணியிலிருந்து ஓய்வு பெறவிருக்கிறார். அங்கே இருப்பவர்களிலேயே அவர்தான் சீனியர். இரண்டு மகள், ஒரு மகன். இரண்டு மகள்களுக்கும் திருமணம் முடித்து விட்டார். மகன் எம்ஈ படித்துக் கொண்டிருக்கிறான்.

அவருக்கு காவியாவைப் பார்க்கையில் தன் மகள்போல் இருப்பதால்..., அவள்மேல் தனிக் கரிசனை எப்பொழுதும் உண்டு. காவியா தனக்கு கீழே, தான் கேட்பதை செய்து கொடுக்க வேண்டியவள் என்றாலும், அவள் கேட்காமலேயே தனக்குத் தெரிந்தவற்றை அவளுக்கு சொல்லிக் கொடுத்தவர், கொடுப்பவர்.

ஆனாலும்..., இப்படி ஒரு ஆதாரம் இல்லாத விஷயத்தை அவரிடம் சொல்லும் அளவுக்கோ..., தன் தனிப்பட்ட விஷயத்தை பகிர்ந்து கொள்ளும் அளவுக்கோ அவர்கள் இன்னும் நெருக்கமாகவில்லை என்பது அவளது எண்ணம். உயரதிகாரியிடம் எவ்வளவு நெருக்கம் காட்டலாம் என்பதை அவள் இன்னும் படிக்கவில்லையே..., அந்த தயக்கம்வேறு அவளை கட்டிப் போட்டது.

எனவே..., “இல்ல மேம்..., காலையில் டிபன் சாப்பிடலை..., அதான் கொஞ்சம் தலை சுத்துற மாதிரி இருக்கு...”

நிஜமாகவே அன்று காலையில் அவள் சாப்பிட அவளுக்கு நேரம் இருக்கவில்லைதான்.

இரவில் எப்பொழுதும் தாமதமாக உறங்கும் மகன்..., அவனை எதற்கும் கட்டாயப்படுத்தாத அவளது செய்கை..., காலையில் கூட ஏழு மணிக்கு பிறகே கண்விழிப்பதால்..., காலையில் எழுந்து, காபி போட்டு, முதல் வேலையாக மாமியாருக்கு கொடுத்துவிட்டு, வீட்டைப் பெருக்கி, சமைத்து, துவைத்து, ப்ரதீப்பை கவனிப்பது, சாப்பாடு ஊட்டுவது, குளிக்க, கிளப்ப என அவள் பம்பரமாக சுழல வேண்டி இருந்தது.

மாமியார் சுகர் பேஷன்ட் என்பதால்..., அவருக்காக காய் தனியாக சமைப்பது, அதை எடுத்து வைப்பது, காலையில் அவர் உண்டு முடித்த பிறகு, அந்த பாத்திரங்களை சுத்தம் செய்து வைப்பது என அவளுக்கு நிற்க கூட நேரம் இருக்கவில்லை.

இதில் எங்கிருந்து சாப்பிட..., தாமதமாகவே அப்படியே வந்துவிட்டாள். அவள் அவ்வாறு உரைக்கவே..., “என்ன பொண்ணும்மா நீ..., காலையில் ப்ரேக்பாஸ்ட்டை யாராவது ஸ்கிப் பண்ணுவாங்களா? முதல்ல வா..., கேண்டீன் போய் டீ, வடையாவது சாப்ட்டு வரலாம்...” உடனடியாக இருக்கையை விட்டு எழுந்துவிட்டார்.

தன் தாய்க்குப் பிறகு தன் வயிற்றைப் பற்றி கவலைப்படும் ஒரு ஜீவனைக் கண்ட காவியாவின் கண்கள் கலங்க..., மறுக்காமல் எழுந்து கொண்டாள்.

முதல் வேலையாக அவளுக்கு ஒன்று தெரிந்தே ஆகவேண்டி இருந்தது. அந்த மரத்தின் பின்னால் மறைந்தவன் யாரென்று. ஷீபாவிடம் எதையோ உரையாடியவாறு நடந்தாலும்..., பார்வையோ அந்த மரத்தையே சுற்றி வந்தது.

கண்களை சல்லடை போட்டு சலித்தாலும்..., மரத்தினடியில் இருந்த வாகனங்களைத் தவிர, வேறு ஒன்றையும்

அவளால் காண முடியவில்லை.

‘அது சரி..., நான் இருக்கையை விட்டு எழுந்ததை பார்த்த பிறகும் அவன் இங்கேயே இருப்பான் என்று நினைத்தது என் முட்டாள்த்தனம்’ எண்ணியவள் கேண்டீனுக்குள் நுழைந்தாள்.

ஆளுக்கொரு டீயை ஆடர் செய்தவர்கள் அதை பெற்றுக்கொள்ள நிற்க, “குட் மார்னிங் மேடம்...” தன் அருகில் ஒலித்த குரலில் சற்று திடுக்கிட்டு நகர்ந்தாள் காவியா.

“டேய் அர்ஜூன்..., காவியாவை இப்படி பயப்பட வச்சுட்டியே..., படவா..., என்ன ஒரு மாசமாஉன்னை அந்த பக்கம் ஆளையே பாக்க முடியலை..., நீ லீவில் போன மாதிரியும் இல்லை...” அவனை மெல்லியதாக கடிந்து கொண்டவர், தன் தேடலையும் அவனிடம் தெரிவிக்க மறக்கவில்லை.

அவன் பெயரைக் கேட்டவளுக்கு உள்ளுக்குள் ஒரு பிரளயம். அர்ஜூன் என்ற பெயரில் எப்பொழுதுமே அவளுக்கு ஒரு பிடித்தம் உண்டு. தனக்கு கணவனாக வரப்போகிறவனுக்கு இந்த பெயர் இருந்தால் நன்றாக இருக்கும் என அவள் ஆசைபட்டிருக்கிறாள்.

‘என்ன இது...? எனக்குள் என்னதான் நடக்கிறது...?’ சற்று விதிர்த்து போனாள்.

“ஐயோ..., நான் எதுவும் பண்ணலைங்கோ..., அவங்களா பயப்பட்டால் அதுக்கு நானா பொறுப்பு...?” அவரிடம் போலியாக பயத்தைக் காட்டியவன், தன் பார்வையை அவள்மேல் ஒரு நொடி நிலைக்கவிட்டு சட்டென பிரித்துக் கொண்டான்.

அந்த ஒரு நொடி இடைவெளியில், அவன் பார்வை தன்மேல் பதிந்த விதத்தை உணர்ந்தவளுக்கு, சட்டென ஒரு தாக்கம். தனக்குள்ளாகவே ஆயிரம் கட்டுக்களை போட்டு வைத்திருப்பவள், மறந்தும் யாரையும் அதில்

அனுமதிக்காதவள், அவள் போட்டிருக்கும் தடைகளை தகர்க்கச் செய்யும் அவன் பார்வையை பதட்டமாய் உள் வாங்கினாள்.

“இவங்க யார் புதுசா...? எந்த போஸ்ட்...?” ஷீபாவிடம் வினவினான். அவன், ஷீபாவின் கேள்விக்கு பதில் உரைக்காமல், அடுத்த விஷயத்துக்குத் தாவியதை குறித்துக்கொண்ட காவியா, அவனை நேர் பார்வை பார்த்தாள்.

அவள் பார்வையை தயங்காமல் எதிர்கொண்டவன்..., அறிமுக சிரிப்பொன்றை அவளிடம் உதிர்த்தான். முகத்திற்கு நேராக பார்த்து புன்னகைக்கும் அவனிடம் முகம்திருப்ப அவளால் முடியவில்லை. அவளும் மெல்லிய கீற்றாக புன்னகைக்க, கம்பீரமான ஆண்மகனின் சிரிப்பு வசீகரமாகத்தான் இருந்தது. ஒரு நொடி அதில் கவரப்பட்டவள், வேகமாக பார்வையை திருப்பிக் கொண்டாள்.

தன் கணவன் இப்படி சிரித்து தான் பார்த்ததில்லை என்ற நினைவு மனதுக்குள் ஓட, ‘இது என்ன சோதனை...?’ தானா இப்படி நினைத்தோம் என ஒரு நொடியில் விதிர்த்துப் போனாள்.

‘இவனிடம் ஏதோ வசியம் இருக்கிறது..., விலகியே இரு...’ மனம் எச்சரிக்க, பார்வையை அவன்மேல் இருந்து விலக்கிக் கொண்டாள்.

அதை உணர்ந்தவனுக்கோ..., இதழ் ஓரம் வெற்றிக்களிப்பில் ஒரு மெல்லிய புன்னகை கீற்று உதயமானது. அவளை, அவள் கட்டுக்களை ஒரு நொடிப்பொழுதில் தகர்த்தெறியும் வேகம் அவன் பார்வையில் இருந்தது. அதை ஓரவிழிப் பார்வையில் கவனித்தவள், சட்டென குனிந்து, தன் கையில் இருந்த கர்ச்சிப்பில் கவனம் செலுத்தி, அதை மடிக்கத் துவங்கினாள்.

“இவ காவியா..., என் பொண்ணு மாதிரி...” அவர் மேலே உரைக்கும் முன்னர்...,

“ம்கும்..., இங்கே இருக்க கல்யாணமாகாத எல்லாருமே உங்களுக்கு பொண்ணு பையன்தான்..., நீங்க மேலே சொல்லுங்க...” அவரை இடைமறிக்க,

“படவா..., உன் உருவத்துக்கும் பேச்சுக்கும் சம்பந்தமே கிடையாதுடா. நீ எப்படி இந்த கவர்மென்ட் பரீட்சையை எழுதி இப்படி ஒரு போஸ்ட்ல உக்காந்தன்னே எனக்கு ஆச்சரியம்தான்...”.

“யார் சொன்னா..., நான் பரீட்சை எழுதி பாஸ் பண்ணேன்னு...? இப்படியெல்லாம் தப்பு தப்பா உங்களுக்கு யார் தகவல் தரது...?” போலி அதிர்ச்சியில் அவன் வினவ, ஷீபா வாய்விட்டே சிரித்தார்.

அதற்குள் அவர்கள் ஆர்டர் செய்த டீ வரவே..., அவர்கள் டீயை பெற்றுக்கொள்ள, “நீங்க போங்க மேடம்..., நான் வடையை எடுத்துட்டு வரேன்...” அங்கே இருந்த பேப்பர் ப்ளேட்டில் அவர்களுக்கு வேண்டிய வடையை எடுத்து வைத்தவன், அவர்கள் இருந்த பெஞ்சுக்கு சென்று, அவர்கள் எதிரில் அமர்ந்தான்.

“நான் கேட்டதுக்கு நீங்க பதில் சொல்லவே இல்லையே...” காவியாவை பார்வையால் தொடர்ந்தவாறு அவன் கேட்க, அவனை நிஜமாகவே முறைத்தார்.

“எங்கே..., இவ என்ன போஸ்ட்ல இருக்கான்னு உனக்கு தெரியாதுன்னு சொல்லு பார்ப்போம்...” அவர் சவால்விட,

“நான்தான் ஒரு மாசமா உங்களைப் பார்க்க வரவே இல்லையே..., பிறகு எனக்கு எப்படித் தெரியுமாம்...?” அவரிடம் கேட்டவன்..., “வேண்ணா கெஸ் பண்ணவா...? புது எஸ்ஐயா? அந்த போஸ்ட் தான் ஆபீஸ்ல காலியா இருந்தது...” அவன் உரைக்க, அவனை நம்பாத பார்வை பார்த்தார் ஷீபா.

அதை உணர்ந்துகொண்டவன்..., சட்டென இமை சிமிட்டி சிரித்தவன், காவியாவின்மேல் பார்வையை அழுத்தமாக நிறுத்தி பிரித்தான்.

அவன் பார்வையின் பொருள் புரிந்தும் புரியாமல் அவர் திகைக்க, "எனக்கு ப்ளாக்ல கொஞ்சம் வேலை இருக்கு..., ஈவினிங் உங்களை வந்து பாக்கறேன்..." இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

"பாய் காவியா..., சீ யூ சூன்..." அவள் முகத்தின் முன்னால் கைகளை ஆட்டி, அவள் கவனத்தை தன் பக்கம் திருப்பியவன், மயக்கும் புன்னகையில் விடைபெற, அந்த புன்னகையில் இடறும் மனதை தடுக்க முடியாமல் பிரமித்திருந்தாள் காவியா.

***

# பகுதி – 3

அவர்களிடம் உரையாடிவிட்டு நகர்ந்தவனுக்கோ..., காவியாவிடம் பேசிவிடும் ஆவல் கொழுந்துவிட்டு எரிந்தது. ஆனால்..., அதைச் செய்ய முடியாமல் அவளது சூழல் அவன் வாயை கட்டிப்போட அவளை திரும்பியும் பாராமல் சென்றான்.

‘என் பார்வையை அவள் உணர்கிறாள்...’ நினைவே அடிநாக்குவரை தித்தித்தது.

அவள் இங்கே வேலைக்குச் சேர்ந்த அன்றே அவள் முன்னால் சென்று நிற்க அவன் கால்கள் இரண்டும் பரபரத்தது. எங்கே தன்னை மீறி அதை செய்துவிடுவோமோ என்ற பயத்திலேயே..., எஸ்ஓ ஷீபாவிடம் கொடுக்க வேண்டிய டீட்டெயில்களை கூட, வேறு பிஎஸ்ஐயிடம் கொடுத்து அனுப்பினான்.

பீல்டில்தான் அவன் வேலை என்றாலும்..., தினமும் ஒருமுறையாவது அவளைக் காண அவன் மறந்ததில்லை. மாதத்தில் இருமுறை அவன் அலுவலகம் வந்தே ஆகவேண்டிய வேளையில்..., அவளைக் காணும் ஆவலில் மணிக்கணக்காக அந்த மரத்தின் பின்னால் நின்றிருக்கிறான்.

ஏஎஸ்ஐயாக சேந்து..., பிஎஸ்ஐயாக பதவி உயர்வு பெற்றுவிட்ட இந்த நிலையில் கூட, என்னவோ டீனேஜ் பையன்போல் தான் செய்யும் செய்கையை நினைத்தால்..., அவனுக்கே வெட்கமாகத்தான் இருந்தது.

அதே நேரம்..., அவள் கணவன் செய்கையை நினைத்தவனுக்கு ஒரு பக்கம் ஆத்திரமும் கோபமும் ஒருங்கே எழுந்தது.

‘அவனால் இப்படி ஒரு செய்கையைச் செய்ய எப்படி முடிந்தது...?’ நினைக்கையிலேயே கை முஷ்ட்டி இறுகிப் போனது. அவன்மட்டும் இப்பொழுது தன் எதிரில்

இருந்திருந்தால்..., அவன் கழுத்தை தானே நெரித்துக் கொன்றுவிடும் ஆத்திரம்...,

‘நல்லவேளை..., தனக்கு இப்படி ஒரு இக்கட்டை ஏற்படுத்தாமல் போய்விட்டான்...’ கண்கள் ரத்தநிறம் கொண்டது.

‘இவனிடம்போய் எப்படி நட்பு பாராட்டினோம்...? அவன் ஒரு மனசாட்சி இல்லாத மனிதன் எனத் தெரிந்தும், அவனுக்கு எப்படி அப்படி ஒரு உதவியைச் செய்தோம்...?’ அவனால் நம்பவே முடியவில்லை.

கீழே அமுங்கியிருந்த உணர்வுகள் அனைத்தும் கோபமாக வெடிக்க..., அதை அடக்கும் வித்தை அவனுக்குத் தெரியவே இல்லை.

வேகமாக தன் அலைபேசியை எடுத்தவன்..., தன் தாய்க்கு அழைத்தான். அவன் அழைப்பை உடனே ஏற்றவர்..., “சொல்லு அர்ஜூன்..., என்ன இந்த நேரத்தில் கால் பண்ணியிருக்க...?” அவர் கேள்விக்கு அவன் அமைதியையே பதிலாக்க,

“அர்ஜூன்..., காவியாவை பாத்தியா...? பேசினியா...?” இறங்கிய குரலில் வினவ, அதற்கும் அவனிடம் பதில் இருக்கவில்லை.

“என்னப்பா..., நான் கேட்டுட்டே இருக்கேன்... பதில் சொல்லாம அமைதியா இருக்க...? அர்ஜூன்..., லைன்ல இருக்கியா...?” படபடத்தார்.

“எப்படிம்மா அவனால் இதைச் செய்ய முடிந்தது...? அவனுக்கெல்லாம் கொஞ்சம் கூட மனசாட்சியே கிடையாதா? அவன் தகுதிக்கு காவியா மாதிரி ஒரு பெண் கிடைத்ததே அதிகம். அப்படி இருக்கையில்..., காவியாவை என்னால் இப்படி பாக்க முடியலம்மா...” கோபத்தில் துவங்கிய அவன் குரல் இறுதியில் கலக்கத்தில் முடிய, கேட்டுகொண்டிருந்த பவானிக்கு மனது பாரமாகிப் போனது.

அவன் மனதுக்குள் இருக்கும் அழுத்தம் அனைத்தும் வெளியேறட்டும் என அமைதியானார்.

“கையில் குழந்தையோடு தனியா இருக்கும் வயசாம்மா அவளுக்கு...? அதைவிட, அந்த குழந்தையை..., அவனது சுயநலத்துக்காக கொடுத்துவிட்டு., என்னால் தாங்கவே முடியலம்மா. அவ அம்மா வீட்டிலாவது ஒரு ஆதரவு கிடைக்கும் என எதிர்பார்த்தால்..., அதுவும் இல்லாமல்..., என்ன சமூகம்மா இது?

“இவ அவளோட வீட்டில் இருந்தால்..., அவளோட தங்கைக்கு திருமணம் நடக்காதாம்..., அவன் அண்ணனுக்கு பொண்ணு கொடுக்க மாட்டாங்களாம், மனசாட்சியை அடகு வைத்துவிட்டு, நெஞ்சில் ஈரமே இல்லாமல் இவர்களால் எப்படி இவ்வளவு சுயநலமாக யோசிக்க முடிகிறது?

“அவ அவளோட கணவனின் நினைவில்..., அவன் காதலில் கரைந்து, வாழ்க்கையை இப்படியே நகர்த்திகொள்ள முடிவெடுத்தால் கூட என்னால் தாங்கியிருக்க முடியும். ஆனா..., அப்படி ஒரு சுயநல பிசாசின் நினைவை வெறுத்து ஒதுக்கி..., இப்படி தனியாக நிற்பதை பாக்கும்போது..., அதைவிட, அவளோட இந்த நிலைக்கு நானும் ஒரு காரணம் என்பதை நினைக்கும்போது..., என்னால் முடியலம்மா...” அவன் மனதின் கொந்தளிப்பை அவனால் அடக்கவே முடியவில்லை.

“அர்ஜூன்..., இதில் உன் தவறு எதுவும் கிடையாது. முதலில் அதைப் புரிந்துகொள். மனதுக்குள் இந்த குற்ற உணர்ச்சி வந்துவிட்டால்..., நீ செய்ய நினைக்கிற எதுக்குமே அர்த்தம் இல்லாமல் போய்டும்.

“நீ உன் எண்ணத்தை சொன்ன அன்னைக்கே நான் சொன்னேன். இதற்காக இது என முடிவெடுக்கும் விஷயம் கிடையாது. இதில் உன் வாழ்க்கை மட்டுமில்ல, காவியாவோட வாழ்க்கையும் அடங்கி இருக்கு. அவளோடு உன் மிச்ச வாழ்க்கையை பகிர்ந்துகொள்ளும் மனநிலையில் இருந்தால் மட்டும் மேலே செயல்படு.

“இல்ல…, நீ செய்த செயலுக்கு பிராயச்சித்தம் செய்யணும்…, அவளுக்கு வாழ்க்கை கொடுக்கபோறேன் என்ற முட்டாள்தனமான எண்ணம் எதுவாக இருந்தாலும்…, அதை இத்தோட மூட்டை கட்டி வச்சுடு புரியுதா…?

“அவளை உனக்கு புடிச்சிருக்கு…, அவளை உண்மையா நேசிக்கிற…, அவளுக்கு வாழ்க்கையின் அழகான பக்கங்களை உன்னால் அறிமுகப்படுத்த முடியும் என்றால் மட்டுமே இந்த அம்மா உன் செய்கைக்கு துணை இருப்பேன். புரியுதா…?” தன் தாயின் கோபமான பேச்சையே கேட்டிராத அர்ஜூனுக்கு…, அவரது இந்த கோபம் பெரும் வியப்பாக இருந்தது.

கூடவே…, தாயின் கோபத்தில் இருந்த நியாயமும், உண்மையும் புரிய, அமைதியாக அதை உள்வாங்கிக் கொண்டான்.

அவனது தாயும் ஒரு இளம் விதவையாக இருந்து, ஒற்றை ஆளாக இருந்து அவனை ஆளாக்கியவர் ஆயிற்றே. அவருக்கு ஒரு பெண்ணின் மனமும், எதிர்பார்ப்பும் தெரியாதா என்ன?

“அம்மா…, ஐ லவ் யூம்மா…, ஐ லவ் ஹெர்…, ஐ லவ் ஹெர் எ லாட்…, எனக்கு அவளை நல்லா பாத்துக்கணும்னு ஆசையா இருக்கு. இத்தனை வருடங்கள் அவள் இழந்த சந்தோஷத்தை…, நிம்மதியை அவளுக்கு திருப்பிக் கொடுக்க ஆசையா இருக்கும்மா…” குரல் அடைக்க…, தாயிடம் படபடத்தான்.

“என் மகனைப் பற்றி எனக்குத் தெரியாதா? நடந்து முடிந்த விஷயங்களைப் பற்றி கவலைப் படாமல், இனிமேல் நடக்க வேண்டியதில் மட்டும் கவனம் செலுத்து. எந்த சூழ்நிலையிலும் அவளை காயப்படுத்திவிடாதே புரியுதா?

“இப்படி எமோஷனல் ஆனால் எதையும் சாதிக்க முடியாது. எல்லா விஷயத்திலும் நிதானம் முக்கியம். அதை நீ

சாதிப்பன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு...” அவரும் நிதானத்துக்கு வந்திருந்தார்.

“கண்டிப்பாம்மா..., நீங்க சொன்ன மாதிரியே செய்யறேன்...”.

“சரி..., என் பேரனைப் பாத்தியா...?” அவர் குரலில் அவ்வளவு ஆர்வம்.

அதை உணர்ந்தவன்..., “இல்லம்மா..., என்னால் அதை அவ்வளவு சுலபமா செய்ய முடியும்னு தோணலை..., என்னவோ ஒரு மாதிரி..., உங்களுக்குப் புரியுதாம்மா...?” பரிதாபமாக கேட்டான்.

அப்படிக் கேட்ட மகனிடம் கடிந்து எதையும் உரைக்க முடியாமல், “எனக்கு புரியுது அர்ஜூன். இந்த நேரத்தில் ஒற்றை மனுஷியாக அவ எவ்வளவு கஷ்டப்படுவான்னு நினைக்கும்போதுதான் எனக்கு ரொம்ப கவலையா இருக்கு...” அவள் துன்பத்தை உணர்ந்த நிலை அவரிடம்.

“இல்லம்மா..., அவளை இனிமேல் தனியா கஷ்டப்பட விட மாட்டேன். சீக்கிரமே பையனைப் போய் பாக்கறேன்...”.

“ஆபீஸ் எத்தனை நாள்...? அதே ஐந்து நாள் தானா? சாயங்காலம் ஐந்தே முக்கால் வரைக்கும் அவள் இங்கே இருந்தால்..., குழந்தை தனியா அங்கே இருந்துப்பானா...? நான் வேண்ணா அங்கே கிளம்பி வரவா...? எனக்கு அவனைப் பாக்க வேண்டும்போல் இருக்கு...” பேரனைப் பார்க்க வேண்டும் உண்மையான ஆவல் அவரிடம் எழுந்தது.

“ஆமாம்மா..., அதே ஷெடியூல் தான்..., பையன் அடாப்ட் ஆகிட்டான்னு நினைக்கறேன். ஆனாலும் கொஞ்சம் கஷ்டம் தான். அம்மா மடியில் வளர வேண்டியவன்..., ஏதோ ஒரு இடத்தில்..., ஆயாகிட்டே..., எனக்கே கஷ்டமா இருக்கு. கூடிய சீக்கிரம் எல்லாத்தையும் சரி பண்ணிடுறேன்...” நம்பிக்கையாய் உரைத்தவன்,

“அம்மா…, உங்க புள்ளையை பத்தி கூட இவ்வளவு விசாரிக்கலை…, மருமக, பேரன் ரெண்டுபேரையும் பத்தி கேள்விபட்டதுக்கே இப்படின்னா…, அவங்க வந்துட்டா என்னை சுத்தமா மறந்துடுவீங்க போல…, உங்க புள்ளையும் இங்கே தனியா…, அதே ஐஞ்சு நாள் வேலை பாத்து, தனியா சமைச்சு, சாப்ட்டு எல்லாம் பண்றான்…” பழைய அர்ஜூன் திரும்பியிருந்தான்.

“போடா போடா…, முதல்ல என் மருமக மனசில் எப்படி இடம் பிடிக்கிறதுன்னு யோசி…, அதை விட்டு இடக்கு பண்ணிக்கிட்டு இருக்க…” போலியாக சீண்டினார்.

“போறேன் போறேன்…, சீக்கிரமே நீங்களும் இங்கே வர வேண்டி இருக்கும்…, பாத்துகோங்க…” தன் அலைபேசியை அணைத்தவனுக்குள் இருந்த கோபம் இப்பொழுது மாயமாகி இருந்தது. மாறாக…, காவியாவை எப்படி அணுகுவது என யோசிக்கத் துவங்கினான்.

***

# பகுதி – 4

காவியாவோ..., இருக்கைக்குத் திரும்பியவள், தன் முன்னால் இருந்த பைலில் கவனமாக, நேரம் போவதே தெரியாமல் போனது. மதியம் லஞ்சை கூட பத்தே நிமிடங்களில் முடித்தவள், மீண்டும் வேலையில் மூழ்கினாள்.

எவ்வளவுதான் படித்தாலும் சில விஷயங்களை நேரடியாக செய்கையில் அதில் சில கஷ்டங்கள் இருக்கத்தானே செய்யும். அப்படித்தான்..., அறுபது ஃபயிலை படித்து, அதில் இருக்கும் விஷயங்களை கிரகிக்க சற்று கடினமாகத்தான் இருந்தது.

தான் இங்கே வேலைக்கு வருவதற்கு முன்னர்..., தன் வேலையையும் சேர்த்து பொறுப்பு வேலையாகப் பார்த்த மனோரஞ்சிதத்திடம் அதைப்பற்றி கேட்க, “இத்தனைநாள் உங்க வேலையையும் நான்தான் சேர்த்து பார்த்தேன்..., இப்பவும் கேட்டால் என்ன செய்ய...?” என்னவோ இவ்வளவு நாள் அவள் இருந்தும் அந்த வேலையை அவரை செய்யச்சொன்னதுபோல் உரைக்கவே, அதற்குமேல் அவரிடம் எதையும் கேட்காமல் திரும்பிவிட்டாள்.

மனோ ரஞ்சிதத்துக்கோ..., சீனியர்களான தாங்கள் இருக்கையில், ஜுனியர்களான அவர்களை நேரடி எஸ்ஐ ஆக்கியதில் உடன்பாடு இல்லை. எனவேதான் காவியா கேட்பதற்கு எல்லாம் நேரடியாக பதில் கொடுக்காமல், தட்டிக்கழிப்பதில் முனைப்பாக இருந்தார்.

அதை உணர்ந்த காவியாவுக்கு அலுப்பாக இருந்தது. அவள் என்ன வேண்டும் என்றா அந்த போஸ்டில் அமர்ந்து இருக்கிறாள். அரசாங்கம் கொடுத்த வேலையை அவள் செய்கிறாள்..., இதில் அவள் தவறு என்ன இருக்கிறது...?

சோர்ந்துபோய் தன் இருக்கைக்குத் திரும்பினாள். ஷீபாவிடம் கேட்கலாம் என்றாலோ..., அனைத்திற்கும் தன்

உயரதிகாரியான அவரிடம் சென்று நிற்பது அவ்வளவு சரியாகத் தோன்றவில்லை.

தனக்கு இடதுபக்க இருக்கையில் அமர்ந்திருக்கும் தண்டபாணியிடம் எதையாவது கேட்கலாம் என்றாலோ..., என்னவோ அலுவலகத்தில் இருக்கும் மொத்த வேலையையும் தான் ஒருவரே பார்ப்பதுபோல் குனிந்த தலை நிமிராமல் இருக்கும் அவரிடம் எதைக் கேட்பது?

ஆனாலும்..., தன்னால் முடிந்த அளவு அவற்றை படித்தவள்..., இறுதியில் முழுதாக குழம்பிப் போனதுதான் மிச்சம்.

அதே நேரம்..., ஷீபாவோ ஒரு ஃபயிலைக் கொடுத்து..., கடந்த வருடம் பெய்த மழையின் அளவு..., இந்த வருடம் பெய்த மழையின் அளவு, இவற்றை புள்ளி விவரங்களில் கேட்க, அது அவளுக்குத் தெரிந்த விஷயமாகையால்..., சற்று ஆர்வமாகவே அவற்றை செய்தாள்.

மனதின் ஓரம் மேஜைமேல் இருந்த கட்டு உறுத்தாமல் இல்லை. அன்றைய வேலை நேரம் முடியும் தருவாயில்..., அங்கே பிரசன்னமானான் அர்ஜூன்.

“குட் ஈவினிங் மேடம்..., இந்த வார ரிப்போர்ட்...” தான் சேகரித்து வந்த தகவல்களை ஷீபாவின் கையில் கொடுத்தான்.

“ஹாய் மனோ..., ஹாய் தண்டபாணி சார்..., எங்கே ஓஏ வை காணோம்...? இன்னைக்கு சீக்கிரம் போயிட்டாரா என்ன...?” அனைவரிடமும் கேட்டவன், காவியாவின் பக்கம் பார்க்கவில்லை.

அவன் அனைவரிடமும் சகஜமாக உரையாடுவதில் ஒரு மாதிரி இலகுத் தன்மையை உணர்ந்தவள், அவனை ஏறிட்டாள். அவள் பார்வை தன்மீது படியவே..., “ஹாய் காவியா..., ரொம்ப பிஸி போல...” அவள் முன்னால் இருந்த ஃபயிலை சுட்டிக்காட்ட, மௌனமாக ஆமோதித்தாள்.

அவன் பார்வை தன்மேல் அழுத்தமாக பதியும் உணர்வு..., அவன் பார்வையை தொடர்ந்து எதிர்கொள்ள முடியாமல் தன் பார்வையை விலக்கிக் கொண்டவள், தன் வேலையில் கவனமாக முயன்றாள்.

அவன் பார்வை இன்னும் தன்மேல் இருப்பதை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது. மனதுக்குள் மெல்லிய பயம் எழுந்தது. அது எதனால் என அவளால் உணர்ந்துகொள்ள முடியவில்லை.

ஷீபாவிடம் உரையாடி முடித்தவன், விடைபெற, அவன் செல்லப் போவதை உணர்ந்து கொண்டாள். ஆனால்..., அவன் அங்கிருந்து வெளியேறுவதற்கு மாறாக அவள் டேபிளின் அருகே வர, அவனை கவனிக்காமல் இருந்தால் போய்விடுவான் என அவள் எதிர்பார்த்தாள்.

ஆனால்..., அதற்கு மாறாக..., அவன் அங்கிருந்து நகராமல் போகவே, இதற்குமேல் அவனை தவிர்க்க முடியாது என எண்ணியவள், அவனை ஏறிட்டாள்.

“அதென்ன..., ஆபீஸ்ல இருக்க மொத்த ஃபயிலும் உங்ககிட்டேதான் இருக்கு. மேடம்..., லாஸ்ட் இயர் ஃபயில் எல்லாத்தையும் இன்னைக்கே பாக்க சொல்லிட்டீங்களா...? நல்ல வேலை பண்ணீங்க போங்க...” கேலியாக உரைத்தவன், அவள் மேஜைமேல் இருந்த ஃபயிலை புரட்டினான்.

புரட்டியவனது புருவம் யோசனையாய் சுருங்கி..., பின் இயல்புக்குத் திரும்பியது.

அவனாவது ஏதாவது இதைப்பற்றி சொல்வானா? அவள் கண்களில் ஒரு சிறு ஆர்வம் எட்டிப் பார்த்தது. அதை உணர்ந்தவன்..., “இந்த ஃபயில் எல்லாம் க்ளோஸ் பண்ணியிருக்க வேண்டியதாச்சே..., இப்போ இதை வச்சு என்ன பண்றீங்க...?” அவளிடம் வினவினான்.

அவளது பார்வை நொடிக்கும் குறைவான நேரத்தில் மனோவிடம் பாய்ந்து அவனிடம் நிலைக்க, ‘புரிந்தது...’ என

புன்னகைத்தவன்,

“ஷீபா மேடம்..., நெக்ஸ்ட் மீட்டிங் பதினைந்தாம் தேதி தானே...?” அவரிடம் வினவினான்.

“என்ன நீ..., உனக்கு இன்னைக்கு என்னதான் ஆச்சு...? புதுசு புதுசா சந்தேகமெல்லாம் வருது...?” அவனிடமே திருப்பிக் கேட்க,

“இல்ல..., கன்ஃபாம் பண்ணிக்கத்தான் கேட்டேன்...” உரைத்தவன், ஃபயிலை மூடி அதன் இடத்தில் வைத்தவன், காவியாவை பார்த்த பார்வையில் என்ன இருந்தது என சத்தியமாக அவளுக்குப் புரியவில்லை.

அதை உணர்ந்தவன், தோளைக் குலுக்கிவிட்டு அங்கிருந்து நகர, ‘எதுவும் சொல்லாமலே போகிறானே...’ சிறு ஏமாற்றம் மனதில் படர்ந்தது. அவனாவது அந்த ஃபயில்களைப் பற்றி சொல்வான்..., அதை முடித்துவிடலாம் என எதிர்பார்க்க, அவனது செய்கை நிச்சயம் ஒரு ஏமாற்றமே.

கூடவே..., உடன் இருக்கும் ஆட்களே உதவ முன்வராதபொழுது, அவனைச் சொல்லி என்ன செய்ய...? என எண்ணியவள், அலுவலக நேரம் முடியவே, ஷீபா அன்றைக்கு முடிக்கச் சொன்னதை செய்துவிட்டு வீட்டுக்கு கிளம்பினாள்.

மறுநாள் காலையில் அவள் அலுவலகத்தில் வண்டியை நிறுத்த, “ஹாய் காவியா...” அர்ஜூனின் அழைப்பு அவளைத் தேக்கியது. பளீர் புன்னகையில் அவன் நிற்க, ஒரு நொடி அந்த புன்னகையில் கவரப்பட்டவள், தன்னை சுதாரித்துக் கொண்டு,

“ஓ..., ஹாய்...” அவனுக்கு பதில் கொடுத்தவள், வண்டியை லாக் செய்து விட்டு தன் பேகை எடுத்தாள்.

“அர்ஜூன்...” திடுமென அவன் உரைக்க, ‘எதற்காக இதைச் சொல்கிறான்...?’ அவனைத் திரும்பிப் பார்க்க...,

“இல்ல..., என் நேம் உங்களுக்குத் தெரியாதோன்னு...” இழுத்து நிறுத்தியவன், அவள் முகத்தில் விரவும் சிறு தடுமாற்றத்தையும், பதட்டத்தையும் கண்டு கொண்டவனாய்..., அவளை ஊடுருவினான்.

‘அர்ஜூன்...’ மனதுக்குள் சொல்லிப் பார்க்கவே உள்ளம் தடுமாறுகையில், அவனை அவ்வளவு சீக்கிரம் அழைத்துவிட முடியுமா என்ன?

ஒரு பெயரே தன்னை இவ்வளவு பலகீனமாக்க முடியுமா? அவளுக்கு தன்னை நினைத்தே அச்சமாக இருந்தது.

“என் பெயர் என்ன அவ்வளவு மோசமாவா இருக்கு...? ராவணன்னு சொல்லியிருந்தால் கூட நீங்க இப்படி முழிக்கிறதில் அர்த்தம் இருக்கு. அர்ஜூன்னு தானே சொன்னேன்...” அவள் சிந்தையை கலைத்தான்.

“ம்..., எனக்கு உங்க நேம் தெரியும்...” ஏதோ பதில் சொல்ல வேண்டுமே என இருந்தது அவளது பேச்சு.

“நான் உங்களை டிஸ்டப் பண்றானோ...?” அவள் முகபாவனைக்கான அர்த்தம் புரியாமல், சிறு கவலையாய் ஒலித்தது அவன் குரல்.

“ஹையோ..., அப்படியெல்லாம் இல்லை...” வேகமாக வந்து விழுந்தன வார்த்தைகள். அதற்குப் பிறகே..., இதற்கு, தான் பதில் சொல்லாமலே இருந்திருக்கலாமோ என எண்ண, சிந்திய வார்த்தைகளை திரும்பப் பெற முடியாமல் அமைதியானாள்.

ஆனால்..., அவளது பதிலில் முகம் மலர..., “தேங்க்ஸ்...” ஆழ்ந்த குரலில் உரைத்தவன், அவள் தன் குரலின் பேதத்தை அறியும் முன்னர், “அந்த ஃபயில் பத்தி உங்ககிட்டே பேசணும்னு நினைத்தேன்..., ஆனா, இப்போ முடியும்னு தோணலை..., சோ...” எப்பொழுது பேசலாம் என அவளிடமே கேட்கும் தொனியில் நிறுத்தினான்.

“எனக்கு டீ ப்ரேக்கில் பேசுவது என்றால் கூட ஓகே தான்..., ஆனா..., நீங்க பீல்டுக்கு போக வேண்டி இருக்குமே...” அவன் வேலைச் சூழல் உணர்ந்தவளாக உரைத்தாள்.

நொடியில் அவன் கண்ணில் தெறித்து மறைந்த மின்னலின் அர்த்தம் புரியாமல் அவள் விழிக்க, “என்னால் ஓவர் டைம் பார்த்து கூட என் வேலையை முடித்துவிட முடியும்...” அவளுக்கு பதில் கொடுத்தான்.

“அப்போ சரி..., இன்னொரு விஷயம்..., அந்த ஃபயிலை எல்லாம் பாக்காமல் உங்களால் டேட்டா சொல்ல முடியுமா? சாரி..., ஏன் கேக்கறேன்னா..., அதில் இருக்கும் விஷயங்களை படிச்சு பார்த்த பிறகும் சில குழப்பம் இருக்கு அதான்...” எங்கே அவன் தவறாக எண்ணிவிடக் கூடாதே என வார்த்தைகளை கோர்த்தாள்.

“ஃபயிலை எல்லாம் பாக்காமல் இருந்திருந்தால் தானே...” அவளை இமைக்காத பார்வை பார்த்து கேட்டவன், “அப்போ டீ பிரேக்ல பார்ப்போம்...” ஒற்றை தலையசைப்பில் விடை கொடுத்தான்.

அவன் பார்வைக்கான பொருளும், அவன் பேச்சுக்கான அர்த்தமும் புரியாமல் திகைத்தவள், அதற்கான விடையை அவனிடமே தெரிந்துகொள்ளலாம் என தன் வேலைக்குச் சென்றாள்.

***

# பகுதி – 5

எப்பொழுது இடைவேளை வருமென காத்துக் கொண்டிருந்தவள், டீ பிரேக் வரவே..., முதல் ஆளாக எழுந்து சென்றாள். அவர்கள் அலுவலகத்தில் பெண்கள் அவ்வளவாக கேண்டீன் செல்வதில்லை என்றாலும், அவசியத்துக்கு செல்வதால்..., அவளை யாரும் வித்தியாசமாக பார்க்கவில்லை.

கேண்டீனுக்குள் நுழைந்தவளின் கண்கள் முதல் வேலையாக அர்ஜூனைத் தேடியது. அவனைக் காணக் கிடைக்காமல் குழம்பியவள், ‘வருவேன் என சொல்லிவிட்டு வராமல் இருக்க மாட்டானே...’ எண்ணியவள் பார்வையை சுழற்றினாள்.

“யாரையோ தேடறீங்க போல...” அவள் அருகில் நின்றவன்..., குறும்பு கொப்பளிக்கும் விழிகளோடு, தானும் பார்வையை சுழலவிட்டான்.

அவனை முறைக்க முயன்று தோற்றவள், சட்டென புன்னகைக்க, “வாங்க..., டீ சொல்லிட்டு வரேன்...” அவளை பெஞ்சில் அமர சொல்லிவிட்டு, டீ வாங்கச் சென்றான்.

பெஞ்சில் அமர்ந்தவள்..., அங்கே இருந்தவர்களை மௌனமாக பார்வையிட, சுழன்ற அவள் விழிகளோ, அர்ஜூனிடம் நிலைத்தது. அங்கே இருந்த டீ மாஸ்டரிடம் எதையோ சொல்லி சிரித்தவாறு..., தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து கர்ச்சீப்பை எடுத்தவன், தன் தாடையில் துளிர்த்திருந்த வியர்வையை இயல்பாய் துடைத்தவன், மீண்டும் கர்ச்சீப்பை தன் பாக்கெட்டில் திணித்துக் கொண்டான்.

அவள் பார்த்த வரையில்..., அலுவலக கடைநிலை ஊழியர் துவங்கி..., ஏஎஸ்ஐ, எஸ்ஐ, எஸ்ஓ, ஏடி, டிடி வரைக்கும் வெகு இயல்பாக பழகும் அவனது பாங்கு அவளை சற்று வியக்கவே வைத்தது.

அதே நேரம்..., 'நமக்கு சமமா இல்லாதவங்க கிட்டே, அவங்க லெவலுக்கு நாம இறங்கி பேசவே கூடாது புரியுதா...?' கண்டிக்கும் குரலில் ஒலித்த கணவனின் குரல் இப்பொழுதும் ஒலிப்பதுபோல் இருக்க, தலையை சட்டென உதறிக் கொண்டாள்.

"ஹேய்..., என்ன ஆச்சு...? ஏதாவது வேண்டாத நினைவா...?" அக்கறையும், கனிவுமாக ஒலித்த அர்ஜூனின் குரலில் முற்றிலும் கலைந்தவள், மௌனமாக அவன் கொடுத்த காபியை பெற்றுக் கொண்டாள்.

அவனுக்கு பதில் கொடுக்கும் நிலையில் அவள் இருக்கவில்லை. சில வேண்டாத நினைவுகள் மேலெழும்பி அலைக்கழிக்கையில், மௌனமே சிறந்ததாக இருந்தது.

"கேக்க கூடாத கேள்வியை கேட்டுட்டனோ..." தானே தனக்கு சமாதானமாக உரைத்தவன், தன் கோப்பையை உறிஞ்சினான். அவனுக்கோ..., அவளை, அவளது இறுக்கத்தில் இருந்து தளர்த்திவிடும் வேகம்...,

"அப்படியெல்லாம் இல்லை..." ஒப்புக்கு சொல்லப்பட்ட பதில் என்பதை இருவருமே உணர்ந்தார்கள்.

சில நொடிகள் மௌனத்தில் கடக்க..., உள்ளுக்குள் கொந்தளிக்கும் உணர்வுகளை டீயின் சூட்டோடு தணிக்க முயன்றாள்.

அவள் முகத்திலேயே தன் பார்வையை பதித்திருந்தவன்..., இமைக்க கூட இல்லை என்பதை அவள் உணர்ந்தாள். தன் அடிமனதை ஊடுருவும் அவன் பார்வையின் தாக்கம்..., சிறு அவஸ்தையை கொடுக்க, மறந்தும் அவனை பார்க்கவில்லை.

அவன் கண்களை ஏறிடும் தைரியமற்றவளாக..., அவள் இருக்க..., "சரி..., நான் அந்த ஃபயில் விஷயத்தைப் பற்றி சொல்லிட்டு கிளம்பறேன். நீங்க என்ன முடிவு எடுக்குறதுன்னு டிசைட் பண்ணுங்க..." அவளை

கட்டாயமாக கலைத்தே ஆகவேண்டும் என பிடிவாதமாக உரைத்தான்.

அவள் மனதுக்குள் சுழலும் சூறாவளியை உணர்ந்து கொண்டதால் அவ்வாறு நடந்தானோ?

நீச்சல் தெரியாமல் நீருக்குள் அமிழ்ந்து கொண்டிருந்தவள்..., மூச்சுக்காற்றை சுவாசித்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் நீரின் மட்டத்துக்கு விரைவதுபோல், அவன் பேச்சை கேட்டவள், நினைவுச் சங்கிலியை பிடிவாதமாக உதறிவிட்டு அவனை ஏறிட்டாள்.

அவள் தன்னை பார்த்ததே போதும் என்பதுபோல்..., “உங்க மேஜைமேல் இருக்கும் ஃபயிலில் பதினேழு ஃபயில் மட்டும்தான் நீங்க பாக்க வேண்டியது. மீதி எல்லாம் ஏற்கனவே முடித்து எஸ்ஓ கிட்டே சைன் வாங்கி பரண்மேலே சேர்த்திருக்கணும்.

“ஆனா..., அதில் என்ட்ரி போட்டவங்க, அதை முடிக்காமல் அப்படியே உங்க டேபிள்ள தூக்கி வச்சுட்டாங்க அவ்வளவுதான்...” அவன் பேசி முடிக்கையில் அவனது டீயும் காலியாகி இருந்தது.

அவன் சொன்னதை கேட்டவளுக்கு அதை எப்படி எடுத்துக்கொள்ள என்றே தெரியவில்லை. அவளது வேலையை பொறுப்பு வேலையாக முன்னர் பார்த்துகொண்டிருந்த மனோவிடம் சென்று நிற்கவே அவளுக்கு சங்கடமாக இருந்தது.

ஏற்கனவே அவள் வேலையை அவளை பார்க்க வைத்துவிட்டார்கள் என்ற கடுப்பில் இருப்பவளிடம், இதையும் ஏன் முடிக்காமல் விட்டாய் என கேட்க முடியாது. அதைவிட..., அத்தனை ஃபயிலையும் ஒரே நேரத்தில் முடிப்பதும் முடியாத காரியம் என்றே தோன்றியது.

ஏற்கனவே தினமும் ஏதாவது ஒரு டேட்டாவை கேட்டு வேலை வாங்கும் எஸ்ஓவிடம் பழைய வேலையை பார்த்ததால் இதை முடிக்க முடியவில்லை என சாக்கு

சொல்லவும் முடியாது. அவளுக்கு குடித்த டீயையும் மீறி தலையை வலிப்பதுபோல் இருந்தது.

‘இதற்கு என்னதான் வழி...?’ மனதுக்குள் எழுந்த வினாவை அவனிடம் கேட்கவே நாக்கு எழவில்லை. அவனைப் பொறுத்த வரைக்கும் அவன் இவ்வளவு சொன்னதே..., செய்ததே அதிகம். அப்படி இருக்கையில்..., அதற்கான தீர்வையும் அவனிடமே கேட்பது அதிகப்படியாக தோன்ற, அமைதியாகவே இருந்தாள்.

அவள் நிலையைப் பார்த்த அர்ஜூன்..., “எங்க ஊர்ல ஒரு பழமொழி சொல்வாங்க..., அழற குழந்தைக்குதான் பால் கிடைக்கும்னு...” பூடகமாக உரைத்தவன், தான் சொன்னதன் பொருள் அவளுக்கு புரிந்ததா என அவளையே பார்த்தான்.

ஒரு நிமிடம் முழுதாக புரியாமல், புருவம் சுருக்கி யோசித்தவள், புரிந்தபொழுதோ, முகம் சற்று மலர அவனை ஏறிட்டாள்.

அவனோ..., அதை உணர்ந்தாலும், புரியாதவனாக பாவித்து, “ஓகே..., அப்போ என்னோட வேலை முடிஞ்சது..., நான் கிளம்பறேன்...” இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

அவனை அழைக்க மனம் தவித்தாலும்..., ‘அர்ஜூன்...’ என்ற அவனது பெயரை சட்டென அழைத்துவிட அவளால் முடியவில்லை. அது ஏன் என்றும் அவளுக்குப் புரியவில்லை. ஆனால்..., தன் கணவனை ஒரு முறை பெயர்சொல்லி அழைத்து, அதற்கு அவன் விட்ட அர்ச்சனையை மனம் பச்சை புண்ணாக நினைவுபடுத்தியது.

அதற்குள்ளாக அவன் சற்று தூரம் சென்றிருக்க..., வேறு வழியின்றி..., “ஒரு நிமிஷம்...” சற்று குரல் உயர்த்தி அவனைத் தேக்கினாள்.

‘என் பெயரைச் சொல்லி அழைக்க அவளுக்கு ஏன் தயக்கம்...?’ அவனுக்குப் புரியவில்லை. அவள் அழைத்தது தனக்கு கேட்கவில்லை என்ற பாவனையில் அங்கிருந்து விலகிவிட அவனுக்கு முடியும்தான். ஆனால்..., அதை கடின மனதுடன் செய்துவிட அவனால் முடியவில்லை.

மேலும் இரண்டு எட்டு வைத்தவன், அதற்குமேல் அவளை சோதிக்க முடியாமல்., திரும்பி வந்தவன்..., ‘நீயே கேள்...’ என சற்று அழுத்தமாகவே நின்றுகொண்டான்.

ஏதாவது சொல்வானா? அவன் முகம் பார்க்க, இதுவரை அவன் முகத்தில் இருந்த இலகுத்தன்மை சற்று விடை பெற்றிருக்க, அவனது அமைதி அவளுக்குள் கலக்கம் மூட்டியது.

தான் கேட்காமல் அவன் எதையும் சொல்லப்போவதில்லை என உணர்ந்தவள், “அதையெல்லாம் எப்படி சரி பண்றது...? சாரி..., எனக்கு சுத்தமா புரியலை அதான்...” அவள் சங்கடமாக வினவ, அவனோ..., இன்னும் தன் நிலையை மாற்றாமலே நின்றிருந்தான்.

“எ...ன்ன...?” அவன் பார்வையின் பொருள் விளங்காமல் அவள் தடுமாறி வினவ, “என்னை எப்படி கூப்ட்டீங்க...?” அவளுக்கு முன்னால் இருந்த பெஞ்சில் தன் கைகளை ஊன்றி, புருவங்களை ஏற்றி இறக்கினான்.

கோபமே இல்லாத ஒரு கோபம்..., முகம் இறுகவில்லை..., கண்கள் சிவக்கவில்லை, குரல் உயரவில்லை..., வார்த்தைகள் தடிக்கவில்லை..., ஆனால்..., தன் கோபத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தினான்.

அந்த அவனது கோபம், அவளை பலமாக தாக்கியது மட்டும் உண்மை. ‘இதென்ன ஒரு சோதனை...?’ ஒரு காலத்தில் அவளை அறியாமலேயே மனதுக்குள் கல்வெட்டான ஒரு பெயர். காதலாக..., கொஞ்சலாக..., ஏக்கமாக..., பலமுறை தனக்குள் உச்சரித்த ஒரு பெயர்.

உயிர்கொண்டு தன் முன்னால் நிற்கையில்..., வெகு சாதாரணமாக அதை உச்சரித்துவிட முடியவில்லை என்பதே உண்மை. இதை எப்படி அவனிடம் சொல்ல?

“ப்…ளீ…ஸ்…” அவள் முகமும் சேர்ந்து அவனிடம் கெஞ்ச, தன் கோபத்தை கைவிட்டவன், அவள் எதிரில் அமர்ந்தான்.

“பெருசா செய்ய எதுவும் இல்லை. உங்க டேபிள் மேலே ஒரு அஞ்சு வருஷ ஃபயில் இருக்கு..., அதை தொகுதி வாரியா பிரிச்சு..., நடவடிக்கை எடுக்கப் பட்டது..., இல்லன்னா..., தணிக்கை முடிந்ததுன்னு போட்டு..., டிடி கிட்டே சைன் வாங்கி, கட்டி தூக்கி லைப்ரேரி ரூம்ல போடுங்க...

“எல்லாத்தையும் ஒரே நாள்ல முடிக்க முடியாது..., சோ..., ஒண்ணு ரெண்டு ஃபயிலா முடிங்க அவ்வளவுதான்..., என்ன..., முடிக்க முன்னாடி எந்த ஃபயில்ல என்ன இருக்குன்னு சின்ன ஸ்லிப் எழுதி மேலே ஓட்டிடுங்க. சப்போஸ் ஏதாவது டேட்டா கேட்டால்..., அப்படி கேக்க மாட்டாங்க..., சில நேரம் ஸ்டாடிஸ்டிக் பண்ண சொன்னால் யூஸ் ஆகும்...” அவளுக்கு நிதானமாக விளக்கினான்.

அவன் சொன்னதை கேட்டுக் கொண்டவள்..., அவனுக்கு நன்றி உரைத்துவிட்டு கிளம்ப..., அவள் வாயிலை நெருங்கும் வேளை..., “காவியா...” அவன் அழைக்க, வேகமாக திரும்பிப் பார்த்தாள்.

“பையன் நல்லா இருக்கானா...?” திடுமென அவன் கேட்க..., தன் மகனைப் பற்றி முதல் முறையாக அக்கறையாக கேட்கப்பட்ட கேள்வியில் நெகிழ்ந்து, திகைத்து விழித்தவள்..., கண்களில் நிறைந்த நீரோடு மையமாக தலை அசைத்துவிட்டு, விருட்டென அங்கிருந்து சென்றாள்.

***

# பகுதி – 6

அன்றைக்கு அலுவலகத்தில் வேலையை எப்படிச் செய்தாள் எனக் கேட்டால் அவளிடம் விடை இருக்கவில்லை. மற்றவர்கள் சொன்னதைச் செய்து, கடிதம் எழுதி, டைப்பிஸ்ட்டிடம் கொடுத்து, ஷீபா கேட்ட வேலையைச் செய்து என இயந்திரத்தனமாகவே அனைத்தும் நடந்தேறியது.

அவள் செய்கையை ஷீபாவும் கவனிக்கவே செய்தார்..., ஆனால்..., என்னவென்று விசாரிக்கும் அளவுக்கு நேரம் இல்லாத காரணத்தால் அமைதியாக இருந்தவர், மாலை வரைக்குமே அவள் மனநிலை மாறாமல் போகவே...,

காவியா வீட்டுக்கு கிளம்பிய நேரத்தில்..., “காவியா..., ஒண்ணு சொன்னால் கேப்பியா...? வாழ்க்கையில் எப்பவுமே நடந்து முடிந்ததைப் பற்றியோ..., நடக்கப் போவதைப் பற்றியோ கவலைப்படவே கூடாது. இப்போ என்ன நடக்குது..., அதை மட்டும் பார்த்தால்தான் வாழ்க்கை சுலபமா இருக்கும் புரிந்ததா?

“இதற்குமேல் நான் என்ன சொல்லன்னு தெரியலை. எதையும் நீ வாய்விட்டு பேசவும் மறுக்கற..., அதனால்..., ஏதோ என்னால் முடிந்தது. பாத்துக்கோ...” சின்னக் குரலில் உரைத்தவர், அவள் கையை தட்டிக் கொடுக்க, அமைதியாக தலையாட்டி அதை கேட்டுக் கொண்டாள்.

அதென்னவோ பிரச்சனைக்கு வெளியே இருந்து பார்க்கையில் தீர்வு என்னவோ சுலபமாகத்தான் இருக்கிறது. ஆனால்..., பிரச்சனைக்கு நடுவில் உழல்கையில் அதை விட்டு வெளியே வர முடியவில்லையே...’ மனதுக்குள் உரையாடியவள் வண்டியை கிளப்பினாள்.

எண்ணம் முழுவதும் மகனே நிறைந்தான். ஆயிரம் எதிர்பார்ப்புகளோடு..., கோடி வேண்டுதல்களுக்கு நடுவில் பிறந்த குழந்தை. குடும்பத்தில் அனைவராலும்

கொண்டாடப்பட்டிருக்க வேண்டியவன். ஆனால்..., அதற்கு மாறாக..., அனைவரின் கோபத்துக்கும்..., எரிச்சலுக்கும் அல்லவா ஆளாகி விட்டான்.

அவனுக்கு நான் நியாயமே செய்யவில்லை..., நினைக்கையிலேயே கண்களில் நீர் கோர்த்தது. பிறந்ததுமுதல் இன்று வரைக்கும் கொள்ளை பாசம் எப்படி இருக்குமென்று அவனுக்குத் தெரியாது. உள்ளார்ந்த நேசம் எப்படி இருக்குமென்று அவனுக்குத் தெரியாது..., ஆக மொத்தம் அடுத்தவர் பாசம் எப்படி இருக்குமென்று அவனுக்கு சுத்தமாகத் தெரியாது.

தவமிருந்து வாங்கிய வரம்..., கொண்டாடப்பட்டிருக்க வேண்டியவன், பாட்டியின் பாசத்தில் குளித்து, மாமன் தோளில் தவழ்ந்து, சித்தியின் அரவணைப்பில் மகிழ்ந்து இப்படி இருந்திருக்க வேண்டியவன், விலக்கியே வளர்க்கப்பட்ட நிலை,

மற்றவரின் சந்தேகத்துக்கும், கண்டனத்துக்கும் ஆளான கொடுமை..., இதயம் விண்டுபோகும் வலி...

‘பாஸ்கர் ஏன் இப்படிச் செய்தான்...? என்ன காரணம்...?’ தன் கணவனைப் பற்றி எண்ணிய கணத்தில்..., சுற்றுப்புறம் துவங்கி, சாலையில் தான் வண்டியில் பயணிப்பது வரைக்கும் மறந்து போக..., திடுமென வண்டி வேகத்தடையில் ஏறி இறங்கவே..., விழுந்துவிடக் கூடாதே என்ற பதட்டத்தில் வண்டியை பிரேக் போட்டு நிறுத்தினாள்.

நொடியில் நடந்துவிட்ட செய்கையில்..., இதயம் திடுமென அடித்துக்கொள்ள, நிதானத்துக்கு வரவே அவளுக்கு சற்று நேரம் பிடித்தது.

‘இதற்குமேல் அவனைப்பற்றி நினைப்பது தனக்கு ஆபத்து என உணர்ந்தவள், பிடிவாதமாக அந்த நினைவை ஒதுக்கினாள். மகன் தனக்காக காத்திருப்பான் என்பது புரிய..., கடிகாரத்தை திருப்பிப் பார்த்தவள், அது ஆறு முப்பதை நெருங்கப் போகவே...,

ப்ரதீப் தூங்கியிருக்கக் கூடாதே என்ற நினைப்பில் வண்டியின் வேகத்தை கூட்டினாள். ஆனால்..., அவள் அவனது ப்ளேஸ்கூலை அடைய..., அவள் எண்ணத்துக்கு மாறாக, பிள்ளை நல்ல உறக்கத்தில் இருந்தான்.

காவியாவைக் காணவே..., டியூஷனில் அமர்ந்திருந்த ஆசிரியை எழுந்து வர, “எப்போ தூங்கினான்...?” பார்வை மகனை வருட, கவலையாகக் கேட்டாள்.

“ஒரு நாலு மணிக்கா தூங்கினான்..., அவனை எழுப்பவா...?” கேட்டவள் அவனை நெருங்க..., மறுக்க முடியாமல் சம்மதித்தாள்.

அவன் இந்த நேரத்துக்கு தூங்கி விடுவதால்..., இரவில் தூங்க மிகவும் தாமதமாகி விடுகிறது. மாமியார் ஒரு மூன்றுமணிக்கு வந்து அவனை அழைத்துச் சென்று, ஒருமணிநேரம் தூங்க விட்டு, பிறகு எழுப்பி பால் கொடுத்து விளையாட விட்டால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால்...

மனமோ பாரமாய் கனத்தது. தாங்கள் மட்டும் தனியாக இருந்த வரைக்கும்பரவாயில்லை. இப்பொழுது மாமியார் வேணி இருக்கையில் கூட, மகனை இப்படி தாமதமாக வந்து தானே அழைத்துச் செல்வது..., பெரும் துயரமாக இருந்தது.

மகனது இழப்பு பெரிதுதான்..., அதற்காக..., மகனது வாரிசை ஒதுக்குவது எந்த விதத்தில் நியாயம்...? அவளுக்குப் புரியவே இல்லை.

ப்ரதீப் பிறந்தது முதல்..., வேணி அவனை பாசமாக பார்த்த ஞாபகம் கூட அவளுக்கு இல்லை. அப்படி இருக்கையில்..., அவனை பார்த்துக்கொள்ள வேண்டும் என நினைப்பது நிச்சயம் பேராசையே என்று தோன்றியது.

‘பேரன்மேல் ஏன் இந்த பாராமுகம்...?’ கிட்டத்தட்ட இரண்டரை வருடங்களாக மனதை அரிக்கும் விஷயத்துக்கு, இப்பொழுதுமட்டும் விடை கிடைத்துவிடுமா என்ன? அவள் சிந்தையை கலைத்தது மகனது சிணுங்கல்.

“ப்ரதீப்..., வீட்டுக்குப் போகலாமா...? பால் குடிச்சுட்டு பிறகு தூங்கலாம்...” ஆசிரியை ப்ரியாவின் கரத்தில் இருந்து மகனை அள்ளிக் கொண்டாள்.

வீட்டுக்குள் நுழைந்தவள்..., மாமியாரைப் பார்க்க..., பாடாவதி சீரியலில் அவர் மூழ்கி இருப்பது தெரிந்தது. மகனை அவனுக்கான சிறு சேரில் அமர வைத்தவள், அறைக்குள் சென்று உடை மாற்றி, ப்ரெஷ் ஆகி..., கிச்சனுக்குள் நுழைந்தாள்.

அவள் எதிர்பார்த்தது போலவே கிச்சன் ஒதுக்கப்படாமல் அப்படியே இருக்க, காலையில் சாதம் வைத்த பானை பிடி சோற்றோடு மூடி வைக்கப்பட்டிருந்தது. குழம்பு பானை, பொரியல் பாத்திரம் அனைத்தும் அதே நிலையில் இருக்க, கண்ணைக் கரித்தது.

அக்கடா என அமரச்சொல்லி உடலும் மனமும் கெஞ்ச, அது முடியாமல் பாலை கேசில் வைத்தவள், பாத்திரங்களை ஒழிக்கத் துவங்கினாள். காபி கொடுக்கவில்லை என்றால் அதற்கு வேறு அவரிடம் பேச்சு கேட்கவேண்டி வரும் என்பதால்..., முதலில் வேணிக்கு கொண்டு கொடுத்தவள், மறந்தும் அவரிடம் முகம் கொடுக்கவில்லை.

பிரதீப்புக்கு பாலைக் கொடுக்க..., “அம்மா..., தாமஸ் வேணும்...” டிவியை ஏக்கமாய் பார்த்தான்.

அவனுக்கு இருக்கும் ஒரே பொழுதுபோக்கு..., அதையும் பார்க்க விடாமல் செய்யும் வேணியின் செய்கை..., அவர் இருப்பதற்கு தனிமையே பரவாயில்லை என தோன்றத் துவங்கி விட்டது.

அவளது அத்தியாவசிய உடனிருப்புக்கெல்லாம் முடியாது என மறுத்தவர்..., இப்பொழுது இங்கே வந்திருப்பதன் காரணம் அவளுக்குப் புரியாமல் இல்லை.

அந்த காரணத்தை எண்ணுகையில்..., தேகம் முழுவதும் பற்றி எரியும் உணர்வு. அதை மறைத்தவள்..., “அம்மா

மொபைல்ல ரைம்ஸ் பாக்கறியா...?” கேட்டவள் தன் அலைபேசியை எடுக்க...,

“இல்ல..., எனக்கு தாமஸ்தான் வேணும்...” கடந்த பத்து நாட்களுக்கும் மேலாக பொறுத்தவன், இதற்குமேல் முடியாது என அடம் பிடித்தான்.

தன் மாமியாரிடம் தான் சென்று பேசமுடியாது எனத் தோன்றவே..., “பிரதீப்..., நீயே போய் பாட்டிகிட்டே கேள்..., அவங்க போட்டுத் தருவாங்க...” தன் மகனாக சென்று பேசினாலாவது சுமுகமாக உரையாடுவாரா என அவளுக்குத் தெரிய வேண்டி இருந்தது.

தாய் சொன்னதைக் கேட்டவன்..., தயக்கமாக பெரியவளை ஏறிட்டான். குழந்தைகளைப் பொறுத்தவரை நாம் எப்படி நடந்துகொள்கிறோமோ..., அவ்வாறே அவர்கள் நம்மிடம் நடந்து கொள்வார்கள்.

இத்தனை நாளில்..., தன்னை ஏறிட்டு கூட பார்த்திராத பெரியவளிடம் அவனாக எப்படிச் சென்று பேசுவானாம்? ஆனாலும்..., அவனுக்கு தாமஸ் பார்க்கும் ஆர்வம் அதைவிட அதிகமாக இருக்க..., தயக்கமாக என்றாலும், பெரியவளை நெருங்கினான்.

தன் அருகில் வந்த பேரனை தலை திருப்பிக் கூட பார்க்காமல், டிவி சீரியலில், வில்லி காட்டு கூச்சலாக சவால் விட்டுக் கொண்டிருந்ததில் அவர் மூழ்கி இருக்க..., “பாட்டி...” மென்மையாக அழைக்க, அவரோ அவனை கண்டுகொள்ளவே இல்லை.

ஒரு வேளை தான் அழைத்தது அவருக்கு கேட்கவில்லையோ என எண்ணியவன், “பாட்டி...” அவரை லேசாக தொட்டு உலுக்க...,

“ச்சீ..., சனியனே..., யாருக்கு யார்டா பாட்டி..., போடா இங்கே இருந்து...” ஆங்காரமாக கத்தியவர்..., அவன் குழந்தை என்பதை மறந்து..., ஒரே தள்ளாக தள்ளி விட்டார்.

“அம்மா…” அலறலாய் போய் கீழே விழுந்தவன்…, வீறிட்டான்.

“அத்தை…” தன் மாமியாரிடம் இப்படி ஒரு செய்கையை எதிர்பாராத காவியா, ஓடிவந்து அவனை வாரி அணைக்க…, மழையில் நனைந்த குஞ்சாக தாயின் கழுத்தை கட்டிகொண்டவனின் தேகம் நடுங்குவதை அவள் உணர்ந்துகொண்டாள்.

பிரதீப்பின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தாலும், குரலோ வெளியே எழவே இல்லை. அதென்னவோ மற்ற குழந்தைகளிடம் இருந்து இதிலும் ப்ரதீப் வித்தியாசமானவன்தான்.

“இவன் உங்க பேரன்தானே…, உங்களால் எப்படியத்த இப்படி செய்ய முடிந்தது…? அவன் குழந்தை…, அவனைப்போய்…” ஆத்திரமாக கேட்க வேண்டியதை, அவனது மனநிலை கருதி அமைதியாகவே கேட்டாள்.

“இவன் என் பேரனா…? அப்படி நான் நினைத்திருந்தால்…, என்னைக்கோ நீ என் இரண்டாவது மகனுக்கு மனைவியாகி இருப்பாய்…” ஆத்திரம் குறையாமலேயே வார்த்தையை துப்ப…, கேட்டுகொண்டிருந்த காவியாவுக்கு காலின் அடியில் பூமி நழுவியது.

“அப்படின்னா…” தேகம் மொத்தமும் பதற, வார்த்தைகள் காற்றாகியது.

“இவன் என் பையனுக்குப் பொறந்தவனே இல்லன்னு சொல்றேன்…” இப்பொழுது அவரைப் பார்க்க, சற்று நேரத்துக்கு முன்னால் டிவியில் பார்த்த வில்லிக்கும் அவருக்கும் சிறு வித்தியாசம் கூட தெரியவில்லை.

“என்ன சொல்றீங்க…?” வீறிட்டாள். கூடவே…, கணவன் செய்து வைத்த செயல்…, ‘ஒரு வேளை…’ தறிகெட்டு ஓடிய எண்ணத்தை இறுக்கியவள், மகனை தன்னோடு இறுக்கிக் கொண்டாள்.

“நாக்கில் நரம்பில்லாமல் பேசாதீங்கத்தை. இவன் என் மகன்…” கண்ணீர் குரலில் உரைக்க,

“அதை நான் இல்லன்னு சொல்லலையே…, ஆனா…, என் மகனுக்குப் பிறந்தவன் கிடையாது. என் மகன் உயிரை கொடுத்து சொல்லிட்டு போன விஷயம்…, அதை நம்பாமல் இருக்க நான் ஒண்ணும் பயித்தியக்காரி கிடையாது.

“இந்த சனியனால் தான் என் பையன் தன் வாழ்க்கையை தானே முடிச்சுகிட்டான்…” அவர் பார்வை வன்மமாய் ப்ரதீப்பை சுட்டது.

***

# பகுதி – 7

மாமியார் சொன்ன வார்த்தையின் இருந்த ஆசிட்..., காவியாவின் இதயத்தை கருகச் செய்தது. ‘அப்படியென்றால்...’ காவியாவுக்கு மேலே யோசிக்கவே பயமாக இருந்தது. கணவனின் குணம் அவளுக்கு தெரியும்தான்..., ஆனாலும்..., தனக்கு தெரியவந்த விஷயத்தை நம்ப அவளுக்கு மிகவும் கடினமாகத்தான் இருந்தது.

கணவனின் செய்கையில் கோபம் கொண்டு..., அவன் நினைவாக இருந்த அனைத்தையும் அழித்தவள் அவள். பெயருக்கு என்று காட்ட கூட அவளிடம் ஒரு புகைப்படம் கிடையாது. முன்பு அவன்மேல் இருந்த கோபம்..., இப்பொழுது வன்மமாக மாறுவதை தடுக்க முடியாமல் உறைந்திருந்தாள்.

“நீயே கண்ணைத் தொறந்து பார்..., இவன் ஜாடை வேண்ணா உன்னை மாதிரி இருக்கலாம். ஆனா கலர்..., குணம்..., இதில் ஏதாவது உன்னையோ..., என் பையனையோ ஒத்துப் போகுதா?” இத்தனை வருடங்களில் பேசாததை எல்லாம் மொத்தமாக பேசிவிட எண்ணினாரோ?

“இல்லை..., இல்லை..., இல்லை..., நான் நம்ப மாட்டேன். இவன்...” மேலே சொல்ல வார்த்தைகள் எழாமல்..., தன் அறைக்கு ஓடி மறைந்தாள்.

“நீ இல்லன்னு சொன்னால் உண்மை இல்லாமல் போய்டுமா...? எவனுக்கோ பொறந்ததை நீ கொஞ்சுறதும்..., பாக்குறதும்..., இந்த கொடுமையை எல்லாம் என்னாலேயே பாக்க முடியலையே..., என் புள்ளை உசுரோட இருந்திருந்தால்..., நெஞ்சு வெடிச்சே செத்திருப்பான்.

“போதும்..., என்னால் இனிமேல் இங்கே ஒரு நிமிஷம் இருக்க முடியாது. நாளைக்கே நான் கிளம்பறேன். என் சின்ன மகன் நாளைக்கு ஊர்ல இருந்து வரான். நான்

அவனோடவே இருந்து என் மிச்ச காலத்தை முடிச்சுக்கறேன். சொந்தம், பந்தம்னு சொல்லிட்டு என் முன்னாடி வந்து நின்னுடாதே.

“உன்னை நான் இத்தோட தலை முழுகிட்டேன்னு நினைச்சுக்கோ..., குழந்தையாம் குழந்தை...” ஆங்காரமாக கத்திவிட்டு நகர, இவ்வளவு நேரம் இருந்ததை விட, அவர் உரைத்த இறுதி வார்த்தை இன்னும் அதிகமாக வலித்தது.

எவ்வளவு சுலபமாக தன் தேவை தீர்ந்தவுடன் கை கழுவிவிட்டு செல்கிறார். தன் கணவனுக்கு சுயநல எண்ணம் எங்கிருந்து வந்தது என அவள் உணர்ந்த தருணம்..., ‘ஆண்டவா..., என் சோதனைகளை, வேதனைகளை இன்னுமா நீ ரசிக்கிறாய்...’ மனம் ஊமையாய் அழுதது.

சின்ன மகனின் திருமணத்துக்கு கூட தன்னை அழைக்காதவர்..., பாஸ்கர் இறந்த பிறகு தன்னை காணக் கூட மறுத்தவர்..., போன் செய்தால் கூட பேசாதவர்..., அனைத்துக்குப் பின்னாலும் பாஸ்கரின் மரணம் மட்டுமே காரணம் என தான் எண்ணியிருக்க..., இவை அனைத்திற்குப் பின்னாலும் ப்ரதீப் இருந்திருக்கிறான் என்பதை அவளால் நம்பவே முடியவில்லை.

சின்ன மகன் ஊரில் இல்லாத காரணத்தால்தான் இங்கே இந்த பத்து நாட்களாக இருந்தாரா? மற்றபடி தன்னையோ..., பேரனையோ காணவேண்டும் என்ற எண்ணமில்லையா...? ஏதோ ஒரு மூலையில் சின்னதாக ஒட்டிகொண்டிருந்த நம்பிக்கை கருகும் வலி..., அவளால் முடியவே இல்லை.

ப்ரதீப்போ, அவள் கழுத்தை கட்டிகொண்டிருந்தவன் விடவே இல்லை. அவனை அணைத்தவாறே படுத்துக் கொண்டாள். கண்களில் கண்ணீர் வழிந்து தலையணையை நனைத்தது.

‘பாஸ்கர்...’ இந்த பெயரை எண்ணுகையிலேயே ஒருவித வலி மனதை ஆக்கிரமித்தது.

இருபத்தைந்து வயது..., விதவையாகும் வயதா? வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய நேரத்தில்..., அது முடிந்தே போன துயரம்..., ‘எதற்காக என்னை துரத்தி காதலித்தான்? எதற்காக திருமணம் செய்தான்? எதற்காக வாழ்க்கையை அவ்வளவு சீக்கிரம் முடித்துக் கொண்டான்...?’ படையெடுத்த வினாக்கள்..., நினைவுகளை கிளறியது.

என்றைக்குமே அதை நினைத்துப்பார்க்க அவள் விரும்பியது கிடையாது. ஆனால் இன்று..., அந்த நினைவுகளை தடுக்க முடியாமல் துவண்டு போனாள்.

கல்லூரிக் காலத்தின் இறுதி வருடத்தில்..., ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்சில் வைத்து அவளுக்கு பாஸ்கரின் அறிமுகம் கிடைத்தது. அதுவும்..., தோழிகளோடு தியேட்டருக்கு போயிருக்க..., பாப்க்கார்ன் வாங்கிவிட்டு திரும்பியவள், யாரின்மீதோ இடித்துக் கொண்டாள்.

அவன் கையில் இருந்த கோக் சிதறி..., கீழேயும்..., அவன் சட்டையிலும் தெறிக்க, “சாரி..., சாரி...” படபடப்பாக மன்னிப்பை வேண்ட, முதலில் கோபமாக அவளை முறைத்தவன், அவள் அழகில் கவரப்பட்டவனாக புன்னகை பூத்தான்.

“இட்ஸ் ஓகே..., கூல்...” சொன்னவன் விலகிச் சென்றான். அவள் அந்த சம்பவத்தை அத்தோடு மறந்திருக்க, அவன் மறக்கவில்லை என்பதற்கு ஆதாரமாக..., அவள் செல்லும் இடங்களில் பிரசன்னமாகத் துவங்கினான்.

அவன் தன்னைத் தொடர்வதை உணர்ந்து, கோபமாக அவனிடம் சண்டைக்குப் போக..., அவனோ அவளிடம் காதலைச் சொன்னான். முதலில் தன் குடும்ப நிலை கருதி அவள் மறுக்க, அவள் வீட்டுக்கே வந்து நேரடியாக பேசினான்.

அவனது அந்த தைரியம் அவளை அசைத்துப் பார்க்க, அவன்மேல் காதல் கொண்டாள். அரசாங்க அலுவலகத்தில்

அவன் பார்த்துகொண்டிருந்த வேலை, அவனது தோற்றம், ஜாதி, மதம், என எதுவும் தடையின்றி போக, அவர்கள் திருமணம் சுபமாய்..., சுலபமாய் இதமாய் துவங்கியது.

காவியாவின் வீட்டிலோ..., தந்தை இல்லாமல்..., தாய் மட்டுமே கஷ்டப்பட்டு வளர்த்ததால்..., மூத்த மகளின் திருமணத்தை சீக்கிரமாக முடிப்பதில் அவர் அதிக முனைப்பு காட்டினார். காவியாவே அப்பொழுதுதான் கல்லூரி முடித்தாள் என்றால்..., அவளது அண்ணன் வேலைக்கு முயன்று கொண்டிருக்க, தங்கையோ பள்ளிப் பருவத்தில் இருந்தாள்.

முதலிரவு துவங்கி..., தேனிலவு முடிந்து திரும்பிய பிறகும்..., காவியாவுக்கு ஒரு விஷயம் புரியவே இல்லை. வாழ்க்கை இப்படித்தான் இருக்குமா...? மிகப்பெரும் வினா அவள் முன்னால் எழ, அதற்கு விடையை அவளால் இறுதிவரை அறியவே முடியவில்லை.

இரவில், தினமும் தன்னை நாடும் கணவன்..., தோல்வியுற்று திரும்புவது போன்ற எண்ணம்..., அவர்கள் ‘உறவில்’ அவள் எதையும் உணர்ந்ததில்லை. இல்லையென்றால் உணரவைக்க அவனுக்குத் தெரியவில்லை என்பதே உண்மை.

நொடியில் உணரும் ஒரு அதீத வலி..., சில நொடிகளில் முடிந்து போனாலும், அவன் நெருங்கினாலே ஒருவித வெறுப்பையே அளித்தது. ஒரு நாள் அவள் தன் விருப்பமின்மையை உணர்த்த..., “என்னடி..., என்னால் முடியலன்னு குத்திக் காட்டுறியா...?” உச்ச கோபத்தில் அவன் கத்தியபொழுது, அவன் எதைச் சொல்கிறான் என்பது சத்தியமாக அவளுக்குப் புரியவில்லை.

‘இவன் தன்னை காதலித்துதான் மணந்தானா?’ சில நாட்களின் இருளில், தனக்குள்ளாகவே கேட்டுக்கொண்ட கேள்விக்கு, இறுதிவரை விடை கிடைக்கவே இல்லை.

ஒரு பெண்ணின் மனம் புரியாமல், புரிந்துகொள்ள முயலாமல்..., தன் தேவை மட்டுமே பிரதானம் என அவனால் எப்படி நடந்துகொள்ள முடிந்தது?

அதன் பிறகு அவன் நெருங்கிவந்தால் அவள் மறுத்தது கிடையாது. ஆனாலும்..., சிலநாள் பத்திரிக்கைகளில், கள்ளக்காதல் விஷயங்களைப் படிக்கையில், அதீத வலியைக் கொடுக்கும் ஒரு விஷயத்துக்காக எப்படி கள்ளக்காதல் எல்லாம் உருவாகிறது என்ற வினா அவளுக்குள் முளைத்தது.

படுக்கை அறைக்குள்..., இரவு விளக்கை அணைத்துவிட்டால்..., பேச்சு என்பதே அவனுக்கு சுத்தமாக பிடிக்காது. ஐந்தே நிமிடத்தில் அவள்மேல் தன் ஆதிக்கத்தை செலுத்துபவன், அவள் கண்ணீரை உணர்ந்தால் கூட அதை கண்டுகொள்ளாமல் குப்புற விழுந்து தூங்கிப் போவான்.

அந்த நேரங்களில் அதீதமாக காயப்பட்டு போவாள் காவியா. சாதாரணமாக ஒரு இதழ் முத்தம்..., அனுசரணையான அணைப்பு, ஆதரவான ஒரு செய்கையை எதிர்பார்த்து ஏங்கிப் போனது அவள் மனம். உலகத்தில் எல்லா ஆண்களும் இப்படித்தானா? விடை தெரியா வினா.

தனிக் குடித்தனம்..., கணவனை கவனிப்பது மட்டுமே அவளது வேலை என்றாகிப் போனது. சமையல் செய்வது துவங்கி..., கணவன் அலுவலகம் கிளம்ப, குளிக்க டவ்வல் முதற்கொண்டு..., கர்ச்சீப் வரை அவள்தான் எடுத்து கொடுக்க வேண்டும்.

குடிக்க தண்ணீர் வேண்டும் என்றால் கூட..., அவளைத்தான் வேலை சொல்வான். வீட்டுக்கு காய்கறி முதல், மளிகை பொருட்கள் வரைக்கும் அவனே வாங்கிப் போடுவான். குறை சொல்ல முடியாத வாழ்க்கைதான். ஆனாலும்..., ஏதோ ஒன்று குறைவதாக அவளுக்குத் தோன்றியது.

கடைக்குச் சென்றால்..., அங்கே வேலைக்கு இருக்கும் ஆட்களிடம் வேலை வாங்காமல் வர மாட்டான். அனுசரணையாக பேச மாட்டான்..., இவையெல்லாம் அவன் குணங்கள் என்று பொறுத்துப் போனாள். அவன்மேல் கொஞ்சம் நஞ்சம் ஒட்டிகொண்டிருந்த நம்பிக்கை உதிர்ந்து போவதை அதிர்ச்சியாய் உணர்ந்தாள்.

அதே நேரம்..., காவியா தானாக முன்வந்து எதையாவது செய்தால், அவனது கோபத்துக்கு அவள் ஆளாக வேண்டி இருக்கும். அவள் வீட்டுக்காக எதையாவது செய்தால்..., “நீ செய்து..., நான் அதை வேடிக்கை பார்க்கவா? அப்படியென்றால் ஆண் என்று ஒருவன் நான் எதற்கு இருக்கிறேன்...?” காரணமே இல்லாமல் எழும் அவனது கோபம்..., அவனது குணத்தை அவளால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

நாட்கள் மாதங்களைக் கடந்து, வருடங்களை எட்டிய பிறகும், தாய்மை அடையாத ஏக்கம் காவியாவைத் தாக்க, அதை மிகுந்த தயக்கத்தினிடையில் கணவனிடம் வெளிப்படுத்தினாள்.

அவளை அழுத்தமாக ஒரு பார்வை பார்த்தவன், “நாளைக்கு ஹாஸ்பிடல் போகலாம்...” உரைத்தவன்..., தன் வேலையை முடித்துவிட்டு உறங்கிவிட, உறக்கம் தொலைத்தாள் காவியா.

அடுத்த வாரங்களில் இருவரின் மருத்துவ அறிக்கையும் வந்துவிட, இருவருக்கும் குறை ஒன்றும் இல்லை என்றாலும், பாஸ்கரின் விந்து எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்க, அவள் இயற்கையாக கருத்தரிப்பது என்பது சதவீதம் சாத்தியம் இல்லை என்று உரைக்க, தவித்துப் போனாள்.

“உங்களுக்கு போதைப் பழக்கம் இருக்கா...?” மருத்துவரின் கேள்விக்கு, முதல் ஆளாக ‘இல்லவே இல்லை...’ என பதில்

கொடுத்தது காவியாவே.

இதற்கு அடுத்த தீர்வு என்ன என்று யோசிக்கையில்..., முதல் கட்டமாக அவனுக்கு சிகிச்சை அளிப்பது, உணவு முறையில் மாற்றம் என நாட்கள் செல்ல, பெரிதாக எந்த முன்னேற்றமும் இருக்கவில்லை.

பாஸ்கர் இதை எப்படி எடுத்துக் கொள்வானோ என காவியா தவிக்க, ‘இது எனக்கு முன்பே தெரியும்...’ என்பதுபோல் இருந்தது அவனது செய்கை.

தன் உடல்நிலையைப் பற்றி அவனுக்குத் தெரியாதா என்ன? ஆனால்..., அறிந்த விஷயத்தை தைரியமாக ஒத்துகொள்ளத்தான் அவனுக்கு மனமில்லை. கல்லூரி காலத்திலேயே தனக்கு இருக்கும் பிரச்சனை அவனுக்கு தெரிய வந்தது.

அப்பொழுதே முறையான சிகிச்சை எடுத்திருந்தால் அதை நிவர்த்தி செய்திருக்க முடியும். ஆனால்..., அதைச் செய்யாமல்..., ப்ளான் செய்து காவியாவை காதலித்து மணந்தவன் அவன். அவளது குடும்ப சூழல் முதற்கொண்டு கணக்கு போட்டே செய்தான்.

நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால்..., அவர்கள் வீட்டு ஆட்கள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டிவரும் என்பதாலேயே..., காதல் திருமணம்தான் புரிவேன் என சபதம் செய்தவன்..., அவனுக்குள் அமிழ்ந்து கிடக்கும் அகம்பாவத்தை அவன் விட்டுஒழிக்க தயாராக இருக்கவில்லை.

மனம் விட்டு பேசியிருந்தால் இவையெல்லாம் சுலபமாக எதிர்கொண்டிருக்கலாம். ஆனால்..., அவனுக்குள் இருந்த ‘ஆண்’ என்ற அகம்பாவம், அவையெல்லாம் செய்ய விடாமல் தடுத்தது.

கல்லூரி காலத்திலேயே ஒருவன் விட்டுகொடுத்து தனக்கு ஒன்று கிடைத்தது என்றால்..., அதை தூக்கி எறியும் குணம்

கொண்டவன்..., திருமணம் ஆன பிறகு மாறி விடுவானா என்ன?

ஆனால்..., இந்த சமுதாயத்தில் தன்னை ஒரு முழுமையான ஆண்மகனாக நிலை நிறுத்திக் கொள்ள, அவனுக்கு குழந்தை அவசியமாக இருந்தது. எனவே அதற்கான முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். சிகிச்சை பலனின்றி போக..., டெஸ்ட்டியூப் பேபி முறையை செயல்படுத்த முயன்றான்.

ஆனால்..., அதிலும் ஒரு பெரும் பின்னடைவு ஏற்பட்டது. அவனது விந்தணுக்கள் வலுவின்றி போக..., அந்த முயற்சியும் பெரும் தோல்வியை முதலில் தழுவியது.

ஆனால்..., இறுதியாக காவியாவின் கருமுட்டையில் விந்தணு வெற்றிகரமாக செலுத்தப்பட, அவளும் கர்ப்பமானாள். அதன் பிறகு அவன் நடவடிக்கையில் ஒரு பெரும் மாற்றம்.

இந்த குழந்தை உருவானவுடன் தன் வாழ்க்கையில் பெரும் மாற்றம் நிகழுமா? ஆவலாக எதிர்பார்க்க..., அது பொய்த்துப்போன வலி..., இது என்ன வாழ்க்கை? உடல் மட்டுமல்ல, மனமும் மரத்துப் போனது.

***

# பகுதி – 8

காவியா தாய்மை அடைந்த பிறகு, அவளோடான நெருக்கத்தை சுத்தமாக நிறுத்திக் கொண்டான். தான் தாய்மை அடைந்திருப்பதாலேயே இந்த மாற்றம் என அவள் எண்ணியிருக்க..., அப்படி இல்லையோ என்ற சந்தேகம் முதல் முறையாக இப்பொழுது அவளுக்கு முளைவிட்டது.

அவளுக்கு ஐந்து மாதங்கள் முடிந்த வேளையில் ஒரு நாள்..., புல்லாக குடித்துவிட்டு வந்தவன், “இந்த குழந்தை வேண்டாம்..., அழித்துவிடு...” என சத்தம் போட, அதற்கான காரணம் புரியாமல் திகைத்தாள்.

சில நாட்கள் இது தொடர, தவித்துதான் போனாள். அவனது இந்த செய்கை எதனால் என அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏன் என அவனிடம் கேட்டதற்கும் அவனிடம் பதில் இருக்கவில்லை.

அவளது மருத்துவமனை செக்கப்புக்கு அவன் உடன் செல்வதே கிடையாது. பொதுவாகவே அவன், அவள்மேல் அதீத பாசத்தை கொட்டியிராததால், அதை அவள் பெரிதாக எடுத்துக் கொண்டதில்லை. அவளது மாத செலவுக்கு என அவளிடம் ஆயிரம் ரூபாயை கொடுப்பதால், மருத்துவமனை செலவை அவளே கவனித்துக் கொண்டாள்.

அவளது வளைகாப்பு..., வைபவத்தில்..., அவன் முகத்தில் கவிழ்ந்த இறுக்கம்..., அதை இப்பொழுது நினைத்தாலும் வயிற்றை பிசைந்தது. ஏழாம் மாதமே அவள் தாய்வீடு சென்றுவிட, அவளைச் சென்று பார்க்கவோ, போன் பண்ணவோ கூட இல்லை.

காவியாவின் தாய் அது எதனால் எனக் கேட்க, தனக்கே ஏன் எனத் தெரியாத விஷயத்தை, அவள் என்னவென்று தாய்க்குச் சொல்வாள்? அவனுக்குள் உறுத்தும் விஷயம் என்ன? எதற்காக இவ்வளவு கஷ்டப்பட்டு அடைந்த

குழந்தையை வேண்டாம் எனச் சொல்கிறான்? அவள் வாழ்க்கையே கேள்விகுறியோடே நகரும் உணர்வு.

விடை சொல்லவேண்டியவனோ மௌனத்திலும், இறுக்கத்திலும் கழிய, நாட்கள் நரகமாகும் உணர்வு. ஆசையாய் உருவாக்கிய குழந்தையின் வளர்ச்சியில் சந்தோஷப்பட முடியாத தவிப்பு..., ஒவ்வொரு நாளின் விடியலும் எதிர்பார்ப்பில் துவங்கி, ஏமாற்றத்தில் முடியும் வலி..., துவண்டு போனாள்.

அவளாக போன் செய்தால் உரையாடுபவன், மறந்தும் அவள் நலமோ, குழந்தை நலமோ கேட்டதில்லை. குழந்தை முகம் கண்டால் சரியாகிவிடுவான் என அவள் எதிர்பார்க்க, குழந்தை பிறந்த அன்று மருத்துவமனைக்கு வந்தவன், குழந்தையை ஒரு நொடி நின்று பார்த்துவிட்டு கிளம்பிச் சென்றவன்தான்.

அடுத்த மூன்றாம்நாள்..., அவன் தற்கொலை செய்துகொண்டு இறந்துவிட்டான் என்ற தகவல்தான் அவளை வந்து அடைந்தது. அழக்கூட தெம்பின்றி அதிர்ச்சியில் உறைந்து போனாள்.

‘எதற்காக இப்படி ஒரு முடிவெடுத்தான்? ஏன்...?’ அவளுக்கு எதுவும் புரியவில்லை.

அவளை அடித்து துன்புறுத்தியிருந்தாலோ..., வார்த்தைகளால் சுட்டிருந்தாலோ, கோபம் காட்டி சண்டை போட்டிருந்தாலோ கூட அவள் தாங்கியிருப்பாள்..., ஆனால், அவனது இந்த செய்கை..., மனதுக்குள் இறுகிப் போனாள்.

திருமணம் முடிந்து அவன் குணம், ஆசை, விருப்பம், பகிர்தல், அனுசரிப்பு, இப்படி எதையுமே முழுதாக புரிந்துகொள்ளாமலே..., உணராமலே..., கையில் குழந்தையோடு..., இந்த சமுதாயத்தில்..., வாழ்க்கை, பெரும் இருட்டாகத்தான் தெரிந்தது.

பெரிதாக படிப்பும் இல்லை..., முடித்த டிகிரிக்கு என்ன வேலை கிடைக்கும்...? அழுது சோர்ந்து போனாள். இவை

ஒரு பக்கம் என்றால்..., அவனது இன்சூரன்ஸ்..., பிஃஎப் அனைத்தையும், சண்டை போட்டு, அவளை காயப்படுத்தி பிடுங்கிக்கொள்ள, அவளுக்கு வாழ்க்கைக்கென எதுவும் இல்லாமலே போனது.

தாயின் ஒற்றை வருமானத்தில்..., அவர்கள் வண்டி செல்வதே கஷ்டமாக இருக்க, இவளது பொறுப்பும் சேர, அவளது தாய் சோர்ந்து போனார். ஆனால், பாஸ்கரின் தம்பி, காவியாவை ஏற்றுகொள்வதாக அவரிடம் தனிமையில் உரைக்கவே, மகளின் வாழ்க்கை மலரும் என எதிபார்த்தது அந்த தாயுள்ளம்.

பாஸ்கரின் முதலாம் ஆண்டு நிறைவுக்குப் பிறகு, தன் தயக்கத்தை விடுத்து வேணியிடம்..., மகளது அடுத்த திருமணத்தை பற்றி பேச, அவர் சொன்ன வார்த்தைகள்..., தன் மகளின் நடத்தையையே அவர் விமர்சித்த விதம், பாஸ்கர் செய்த செயலின் தாக்கம்..., அனைத்தையும் மகளிடம் கோபமாய் கொட்டிவிட்டார்.

தாய்க்கு தான் பாரமாக இருக்கிறோம் என்ற உண்மை புரிய, மனதுக்குள் மரித்துதான் போனாள். குழந்தையின் பாலுக்குத் துவங்கி அனைத்துக்கும் அவர் கையை எதிர்பார்க்க வேண்டிய நிலை..., வாழ்க்கை ஒரு இருட்டு குகைக்குள் சிக்கிய உணர்வு.

தன்னை காதலித்து மணந்தவன் நிர்கதியாக விட்டுச்சென்ற துயரம்..., பாஸ்கர் மேல் இருந்த கோபம்..., அனைத்தும் சேர..., அவன் நினைவுகள் அனைத்தையும், கூடவே..., ஆல்பம் துவங்கி அனைத்தையும் சுட்டுப் பொசுக்கி தீக்கிரையாக்கினாள்.

அந்த நெருப்பு அணைந்தாலும், மனதுக்குள் கொழுந்துவிட்ட நெருப்பை அணைக்க முடியவில்லை. தற்கொலை செய்துகொள்ள அவள் முயலவே இல்லை. தன் விருப்பத்துக்காக உலகுக்கு வந்த குழந்தையை விட்டு அவள் செல்வதா? அவனுக்காக வாழ விரும்பினாள்.

அந்த நேரத்தில்தான்..., அவளது அண்ணன் குமரன்..., அரசாங்கம் TNPSC எக்ஸாம் அறிவித்திருப்பதாக உரைக்க, அதுவும் அவளது கணித பாடத்துக்கு தகுந்த விதத்தில் புள்ளியியல் பிரிவு என அவனது நண்பன் உரைத்ததாக கூறவே..., தன் முழு கவனத்தையும் அதில் திருப்பினாள்.

அவளது அண்ணன் அவளுக்காக செய்த ஒரே நல்ல விஷயம்..., அவளுக்காக புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தது. குழந்தையை கூட கவனித்தாளோ இல்லையோ..., அவளது முழு கவனமும் படிப்பின் மீதே இருந்தது.

நல்ல மதிப்பெண்ணில் வெற்றி பெற்றவள்..., சென்னையை விடுத்து, கிருஷ்ணகிரிக்கு போஸ்டிங் கேட்டு வாங்கி வந்துவிட்டாள். இத்தனை வருடங்களாக தன்னை கண்டுகொள்ளாத மாமியார், அவளுக்கு வேலை கிடைத்தவுடன் வரவே..., தனக்கு ஒரு பாதுகாப்பு என்ற விதத்தில் அவரை வரவேற்கவே செய்தாள்.

ஆனால்..., அவர் அள்ளித் தெளித்த வார்த்தைகள்..., நெஞ்சை பொசுக்கிக் கொண்டே இருந்தது. நல்ல உறக்கத்தில் மகன் அனத்துவது கேட்கவே, தன் நினைவில் இருந்து கலைந்தவள், அவனைப் பார்க்க, அவனது தேகம் சுடுவதை உணர்ந்து கொண்டாள்.

தன் மாமியாரின் செய்கை அவனை மனதளவில் பாதித்திருப்பதை உணர்ந்து கொண்டவள், அவனுக்கு மருந்தை கொடுத்துவிட்டு அப்படியே படுத்துக் கொண்டாள்.

வயிற்று பசியையும் மீறி மனது மரத்துப்போன உணர்வு. மாலையில் வந்து தான் காபி கூட அருந்தவில்லை என்பது நினைவிற்கு வர, எதையும் செய்யப் பிடிக்காமல் படுத்துக் கொண்டாள்.

இரவில் எப்பொழுது உறங்கினாளோ அது நினைவில்லை. காலையில் கண்விழிக்கையிலே நேரம் எட்டு முப்பதைக் காட்ட..., அவசரமாக எழுந்தாள். ப்ரதீப்பின் காய்ச்சல்

குறையாமலே இருப்பதைப் பார்த்தவளுக்கு, கவலை பிடித்துக் கொண்டது.

அதையும் மீறி, இரவிலும் சமைக்கவில்லை, காலையிலும் தாமதமாகிவிட்டதே என அவள் வேகமாக வெளியே வர, மாமியாரின் பேக் ஹாலின் ஓரம் இல்லாமல் போகவே, அவசரமாக வாசலைப் பார்க்க, அது சாற்றி வைக்கப்பட்டிருந்தது பார்வையில் விழுந்தது.

‘என் ரணத்தை கிளறி..., என் நிம்மதியைக் குலைக்கவா இங்கே வந்தார்...?’ தன்னிடம் சொல்லிகொள்ளாமலே சென்ற மாமியாரை எண்ணி ஆற்றாமையாக வந்தது.

அலுவலகத்துக்கு விடுமுறை எடுக்க முடியாத சூழல்..., வேறு வழியின்றி கிளம்பியவள், மனமே இல்லாமல் மகனை ப்ளே ஸ்கூலில் விட்டாள். அவள் கழுத்தை கட்டிக்கொண்டு விட மறுத்தவனை, “அம்மா ஆபீஸ் போகணும் கண்ணா...” அவளது கெஞ்சல் குரல் அவனை அடக்கியதை எண்ணிப் பார்த்தவளுக்கு, அவன் புரிதலில் மகிழத்தான் முடியவில்லை.

‘இவன் குணம் உன்னை மாதிரியோ..., என் பையன் மாதிரியோ இருக்கா...?’ மாமியாரின் வார்த்தைகள் காதில் எதிரொலிக்க, அடி வயிற்றில் கலவரம்.

‘அனைத்தும் சரியாகத்தானே நடந்தது. அவரது விந்தணுவைத்தானே..., எண்ணியவள்..., சாலையில் ஓட்டிய வண்டியை அப்படியே ஒரு நிமிடம் ஓரம் கட்டிவிட்டாள்.

‘இந்த சந்தேகத்தை எங்கே போய் நிவர்த்தி செய்ய...?’ பதறும் மனதை சீர்படுத்தவே முடியவில்லை.

‘எங்கே தவறு நடந்தது...? உண்மையாகவே நடந்தது தவறா...? இல்லையென்றால்...? பாஸ்கரே எதையாவது செய்து விட்டாரா? அவர் குணத்துக்கு..., அவன் அதைச் செய்திருப்பான் என அவளால் நம்பவே முடியவில்லை’ தலையை வலிப்பதுபோல் இருந்தது.

இரவிலும் உண்ணவில்லை..., காலையிலும் ஒரு டீயோடு முடித்துக் கொண்டாள். தேகம் தள்ளாடியது. நொடி முள் வேறு அதன் வேலையை சரியாகச் செய்ய..., மனதைக் குடையும் கேள்விகளோடு அலுவலகம் சென்றாள்.

வேலையில் கவனம் என்பது சிறிதும் பதியவில்லை. இங்கே வந்த இத்தனை நாட்களில் ஒரு நாள் கூட தான் இப்படி இருந்ததில்லை என்றே தோன்றியது. மதியம் தான் கொண்டு வந்திருந்த மூன்று இட்லிகளில் ஒன்றை மருந்தைப்போல் விழுங்கி வைத்தாள்.

மகனுக்காகவாவது இந்த உயிரை தக்க வைக்க வேண்டுமே. மாலையில் நான்கு மணிக்கே அவளது அலைபேசி ஒலிக்க, அதில் ஒளிர்ந்த ப்ரியாவின் எண்ணைப் பார்த்தவளுக்கு கைகள் நடுங்கியது.

“ப்ரியா...” அழைப்பை செவிமடுக்க,

“மேடம்..., ப்ரதீப்புக்கு காய்ச்சல் ரொம்ப அடிக்குது. குறையவே இல்லை. இப்போ என்னன்னா..., நீங்க கொஞ்சம் சீக்கிரம் வாங்க...” விஷயத்தை முழுதாக சொல்ல மறுத்தவள், அவளை அழைத்தாள்.

“நான் உடனே வரேன்...” அலைபேசியை வைத்தவள், ஷீபாவிடம் விரைந்தாள்.

“மேம்..., பையனுக்கு உடம்பு சரியில்லை..., ஸ்கூலில் இருந்து போன் வந்தது., எனக்கு..., நான்..., போகவா...?” கேட்கும் முன்பே கண்ணீர் கன்னத்தில் வழிந்தது.

“காவியா..., சரி கிளம்பு..., ஏதாவது ஹெல்ப் வேணும்னா எனக்கு கால் பண்ணு...” அவளை உடனே அனுப்பினார்.

எவ்வளவுதான் வேகமாக வண்டியை செலுத்தினாலும், அங்கே போக இருபது நிமிடங்கள் ஆகியிருக்க..., ப்ரதீப்பை பார்த்தவளுக்கு தன் உலகமே அதன் இயக்கத்தை நிறுத்திய உணர்வு.

காச்சல் அதிகரித்து, அவனுக்கு ஃபிட்ஸ் வந்திருக்க, குழந்தையின் உடல் உதறிக் கொண்டிருந்தது.

“ப்ரதீப்..., அங்கே இருந்த பாயில் படுத்திருந்தவனை கைகளில் அள்ளிக் கொண்டவளுக்கு..., அடுத்து என்ன செய்ய..., என்பதே புரியாத நிலை.

“மேம்..., இப்போதான் இப்படி ஆகி இருக்கு..., நான் உங்களுக்கு கால் பண்ணும்போது நல்லாத்தான் இருந்தான்...” ப்ரியாவும் பதறிபோயிருப்பது புரிந்தது.

ப்ரதீப்பை தூக்கிக்கொண்டு வெளியே ஓடியவளுக்கு, எப்படி எங்கே செல்வது என்றே புரியவில்லை. சரியாக அந்த நேரம்..., அர்ஜூன் எங்கிருந்துதான் வந்தானோ..., “காவியா...?” அவளது அழுகையைக் கண்டவன், வண்டியை நிறுத்திவிட்டு அவளிடம் ஓடினான்.

“அர்ஜூன்..., ப்ரதீப்..., எனக்கு என் பையன் வேணும்...” அவள் கையில் துடிக்கும் குழந்தையை அவனால் கண்கொண்டு பார்க்கவே முடியவில்லை.

“ஓகே..., ரிலாக்ஸ்...” அவளை தன் பைக்கில் அழைத்துச் செல்வதும் முடியாத காரியம் என்பது புரிய, அங்கே சவாரியோடு வந்த ஆட்டோவை மடக்கியவன், நிலைமையைச் சொல்லி, “ஒரு பத்து நிமிஷத்தில் ஆட்டோவை அனுப்பி விடுகிறேன்..., ப்ளீஸ் ஹெல்ப் பண்ணுங்க...” ஆட்டோவிற்குள் அமர்ந்திருந்தவர்களிடம் கேட்டான்.

“அதுக்கென்னப்பா..., முதல்ல புள்ளையை கவனிங்க...” உள்ளே இருந்த வயதானவர்கள் இறங்கிக் கொள்ள, ஆட்டோ அருகில் இருந்த மருத்துவமனைக்கு விரைந்தது.

அவள் கையில் இருந்து குழந்தையை வாங்கியவன்..., மருத்துவமனைக்குள் ஓட, அவனைப் பின்தொடர்ந்தாள் காவியா.

மருத்துவர் உடனடியாக வரவே..., சிகிச்சை துவங்க..., அந்த அறைக்கு வெளியே அழுகையில் குலுங்கிக் கொண்டிருந்தாள் காவியா. அர்ஜூனின் நிலையோ சொல்ல முடியாததாக இருந்தது.

‘ஆண்டவா..., குழந்தையைப் பாக்கணும்னு நினைத்தேன்..., ஆனா..., இந்த நிலைமையிலேயா எனக்கு காட்ட வேண்டும்...?’ கலங்கிய மனதை அடக்கிக் கொண்டு நின்றிருந்தான்.

காவியாவின் அழுகையை அவனால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. தனக்கே இப்படி இருக்கிறது என்றால்..., அவனைப் பெற்றவளுக்கு எப்படி இருக்கும்..., அவளை நெருங்கியவன், “காவியா..., பயப்படாதீங்க..., அவனுக்கு ஒண்ணும் ஆகாது. அதான் டாக்டர் பாக்கறாரே...” அவளுக்கு தைரியம் சொல்ல முயன்றான்.

“உங்களுக்கு தெரியாது..., என் வாழ்க்கையே அவன்தான்..., அவனுக்கு ஏதாவது ஒண்ணுன்னா...” முகத்தை மூடிக்கொண்டு அழ, அவனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

“ம்ச்..., எதுக்கு தேவையில்லாமல் கற்பனை எல்லாம் பண்ணிக்கறீங்க...” மெல்லியதாக கடிந்து கொண்டான்.

அவளுக்கோ..., அழுகை அடங்காமல் போக..., “காவியா...” அவளை இழுத்து தன் தோள்மேல் சாய்த்துக்கொள்ள எழுந்த வேகத்தை அடக்கவே மிகுந்த சிரமப்பட்டான்.

ஆனால்..., அவன் அழைப்பில் இருந்த ஆறுதல்..., தனிமை கொடுத்த துயரம், கண்முன் நடக்கவிருந்த பயங்கரம்..., அவளை வலுவிழக்கச் செய்ய, தன் அருகில் இருந்தவனின் தோளில் தன்னை மீறி தலை சாய்த்தாள்.

***

# பகுதி – 9

காவியா, செய்த செய்கையில் ஒரு நொடி திகைத்தவன், அவள் ஆறுதல் தேடுவதை உணர்ந்து, தன் கைகளை கட்டுப்படுத்தி அசையாமல் நின்றான்.

எவ்வளவு நொடிகள் அந்த நிலை நீடித்தது என்று தெரியாது. ஆனால்…, மருத்துவர் வரும் ஓசை கேட்கவே, வேகமாக அவனை விட்டு விலகியவள்…, ஒரு சங்கடமான முகபாவத்தோடு…, “சாரி…” அவன் முகம் பார்க்காமல் முணுமுணுத்தவள், மருத்துவரை ஏறிட்டாள்.

அவரோ…, “பையன் இப்போ நார்மல் ஆகிட்டான்…” அவர்களுக்கு தேவையான பதிலை உரைத்தவர்,

“என்ன பேரன்ட் நீங்க…? உங்களுக்கு வேலைதான் முக்கியம்னா குழந்தையே பெத்திருக்க கூடாது. இவ்வளவு ஹை டெம்பரேச்சர்ல அவனை தனியா விட்டுட்டு எப்படி உங்களால் வேலைக்கு போக முடியுது? இர்ரெஸ்பான்சிபிள் பெல்லோஸ்…” வயதானவர் என்பதால், தன் கோபத்தை வார்த்தையால் வெளிப்படுத்தி அவர்களை சாடினார்.

அவர் தங்களை தம்பதிகள் என எண்ணியதில் திகைத்தவள், அதற்கு தன் செய்கையும் ஒரு காரணம் என்பதை உணர்ந்து அமைதியானாள். அதைவிட, அர்ஜூன் என்ன நினைத்துகொள்வான்…? என்ற எண்ணம் வேறு எழ, அவன் முகம் பார்க்கவே முடியவில்லை.

அதைவிட, இப்பொழுது அவரிடம் மறுத்தால்…, தன் செய்கைக்கு என்ன விளக்கம் சொல்வது என்ற எண்ணம் வேறு அவளைத் தேக்க, வார்த்தைகள் அற்ற மௌனத்தில் தவித்தாள்.

“சாரி டாக்டர்…, இனிமேல் இப்படி நடக்காது. பையனை நாங்க பாக்கலாமா?” அவள் நிலை உணர்ந்து தானே அவரிடம் பேசினான்.

“ஓகே..., பையனை இப்போ ரூமுக்கு மாத்திடுவாங்க. டெம்பரேச்சர் குறைய இன்ஜெக்ஷன் போட்டிருக்கு..., இப்போ நல்லா தூங்கிட்டு இருக்கான். நீங்க போய் பாக்கலாம்...” அவனிடம் உரைத்தவர் சென்றார்.

அவனுக்கு முன்பாக அறைக்குள் நுழைந்தவள்..., கையில் ட்ரிப்ஸ் இறங்க, வதங்கிய கொடியாக கிடந்த மகனைப் பார்த்து அவளுக்கு அழுகை முட்டியது.

மருத்துவர் சென்ற பிறகு அறைக்குள் நுழைந்தவனது பார்வை ப்ரதீப்பையே சுற்றி வந்தது. அப்படியே அவளை உரித்து வைத்திருந்தான் பிள்ளை.

காவியா கட்டிலின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்து கொள்ள, ப்ரதீப்பின் தலையை வருடிய அர்ஜூன்..., அவன் நெற்றியில் இதழ் பதித்தான்.

அந்த நெருக்கத்தில்..., அவன் முகமும், குழந்தையின் முகமும் பல ஒற்றுமைகளை சுமந்திருப்பதைக் கண்ட காவியா, தன்னை மீறி இருக்கையில் இருந்து எழுந்து கொண்டாள்.

அவனது நிறமும், குழந்தையின் கலரும் ஒத்துப்போக, இருவரது தாடையும், நாசியும் கூர்மையாக இருப்பதைப் பார்த்தவளுக்கு, தன் கண்களையே நம்ப முடியவில்லை.

‘இதெல்லாம் தன் மாமியார் குழப்பிவிட்டுபோன எண்ணங்களின் வெளிப்பாடோ...’ தன்னையே அவள் சமாதானம் செய்துகொள்ள முயல, உயிர்கொண்டு நிற்கும் உருவத்துக்கு முன்னால், தன் சமாதானம் பொசுங்கும் தன்மையை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அர்ஜூனோ..., காவியா என்ற ஒருத்தி அங்கே இருப்பதையே மறந்துவிட்டவன் போன்று..., குழந்தையை தலைமுதல், கால்வரை வருடியவன், அவனது வலக்கையை தன் இரு கரத்தால் பொத்திப் பிடித்தவன், தன் கன்னத்தில் அவன் கரத்தை அழுத்திக் கொண்டான்.

அவன் கண்களில் வழிந்த பாசம், தவிப்பு..., ஏதோ தெரிந்தவரின் குழந்தைக்கு இப்படி ஆகிவிட்டதே என்பதையும் தாண்டி..., தன் குழந்தைக்கே இப்படி ஆகிவிட்டதே என்பது போன்ற தவிப்பை கண்டவளுக்கு..., பூமி மொத்தமாக சுழல, நின்ற இடத்தில் மயங்கிச் சரிந்தாள்.

நல்ல வேளையாக அவள் கீழே விழும் முன்னர், அங்கே இருந்த செவிலி அவளைக் கண்டு..., சட்டென தாங்கிக் கொண்டவள், “சார்..., உங்க மனைவியைப் பாருங்க...” குரல் கொடுத்த பிறகே அவளைப் பார்த்தவன், ஓடி வந்து அவளைப் பிடித்து அங்கிருந்த மற்றொரு படுக்கையில் படுக்க வைத்தான்.

“சிஸ்டர்..., டாக்டர்...” அவன் கேட்கும் முன்னர்,

“நான் போய் அழைச்சுட்டு வரேன்...” அறையை விட்டு ஓடியவள், மருத்துவரோடு திரும்பி வந்தாள்.

அவளை பரிசோதித்தவர்..., “அதிர்ச்சி மயக்கமா இருக்கும்னு நினைக்கறேன்., கூடவே..., இவங்க சாப்ட்டே இருக்க மாட்டாங்க போல..., ரொம்ப அனிமிக்கா இருக்காங்க. என்ன மனுஷன் சார் நீங்க..., பொண்டாட்டி புள்ளையை கவனிக்க முடியலன்னா ஏன் கல்யாணம் பண்ணிக்கறீங்க...? யூஸ்லெஸ் பெல்லோ...” அவனிடம் சாடிவிட்டு..., அவளுக்கும் ஒரு டிரிப்சை போடச் சொல்லிவிட்டு சென்றார்.

ஒரு பக்கம் காவியா..., மறு பக்கம் குழந்தை என சற்று திண்டாடித்தான் போனான். மருத்துவர் செல்லவே..., “சார்..., நீங்க ஒண்ணும் தப்பா நினைக்காதீங்க..., டாக்டர் ரொம்ப நல்லவர்தான். ஆனா..., இப்போ வயசாக ஆக..., இதையெல்லாம் கொஞ்சம் ஹார்ஷா சொல்லிடறார்...” செவிலி மன்னிப்பை வேண்டும் குரலில் உரைத்தாள்.

“பரவாயில்ல சிஸ்டர்..., அவர் உண்மையைத்தானே சொல்றார்..., நான் ஒண்ணும் தப்பா நினைக்கலை...”

அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தான்.

“சிஸ்டர்..., காவியா...?” அவள் எப்பொழுது கண் விழிப்பாள் என அவனுக்கு தெரிய வேண்டி இருந்தது.

“அவங்களுக்கு தூங்கறதுக்கு இன்ஜெக்ஷன் போட்டிருக்கார்..., எப்படியும் காலையில்தான் கண் முழிப்பாங்க. குழந்தையும் அதே மாதிரிதான். உங்களுக்கு ஏதாவது வேலை இருந்தால் முடிச்சுட்டு வாங்க..., அது வரைக்கும் நான் பாத்துக்கறேன்.

“ஏன்னா..., என்னோட டியூட்டி நேரம் முடிஞ்சுடுச்சு..., என்னை ரிலீவ் பண்ண வேற சிஸ்டர் வந்துட்டாங்க. என் வீடு வாக்கபிள் டிஸ்டன்ஸ் தான். ஒரு ஒண்ணவர், டூ அவர்ஸ் என்னால் இங்கே இவங்களை பாத்துக்க முடியும்...” ஒற்றை ஆளாக அவன் படும் துன்பத்தைப் பார்த்தவள் உரைத்தாள்.

அவளை நன்றியோடு ஏறிட்டவன்..., “ரொம்ப தேங்க்ஸ் சிஸ்டர்..., என்னோட வண்டி, இவங்களோட வண்டி எல்லாம் வழியில் அப்படியே நிறுத்திட்டு வந்துட்டேன், அதான்...

“காவியாவுக்கு ஏதாவது சாப்பிட வாங்கிட்டு வரணுமா? குழந்தை பாதியில் கண் முழிச்சு அழ மாட்டானே..., ஏன்னா..., அவங்க அம்மா இல்லாமல் அவனை எவ்வளவு தூரம் சமாதானப்படுத்த முடியும்னு தெரியலை அதான்...” தங்கள் நிலையை அவளிடம் விளக்க முடியாததால்..., சிறு தயக்கத்தோடே கேட்டான்.

காவியாவின் கழுத்தில் திருமாங்கல்யம் இல்லாததை கவனித்த செவிலி, அவர்களை கணவன் மனைவி இல்லை என சரியாக கணித்திருந்தாள். பெண்களின் பார்வையில் இருந்து எதுவும் அவ்வளவு சுலபத்தில் தப்பாதோ?

“இல்ல சார்..., அவங்களுக்கு டிரிப்ஸ் இறங்குவதால் நைட் சாப்பாடு வேண்டாம். பையன் மட்டும் காய்ச்சல்

குறைந்தால் கண் முழிக்க சான்ஸ் இருக்கு. ஆனாலும்..., அதுக்கு இன்னும் குறைந்தது ஒரு நாலுமணி நேரமாவது ஆகும். சோ..., நீங்க தைரியமா போயிட்டு வாங்க...".

அவள் சொல்லவே..., இருவரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு..., வண்டியை எடுத்துவிடச் சென்றவனுக்கு..., தாங்கள் அந்த ஆட்டோவுக்கு காசு கொடுக்கவில்லை என்ற நினைவே அப்பொழுதுதான் எழுந்தது.

அவன் வேகமாக வெளியே வர..., அந்த ஆட்டோ அங்கே இருக்கவில்லை. 'இந்த உலகத்தில் மனிதநேயம் இன்னும் செத்துப் போகவில்லை...' எண்ணியவன் நடையை விரைவு படுத்தினான்.

காவியாவின் வண்டியை பள்ளியிலேயே நிறுத்தி பூட்டியவன், அவளது லஞ்ச் பேகை எடுத்துக்கொண்டு, இரவு உணவாக இரண்டு இட்லியை உண்டுவிட்டு தன் வண்டியில் மருத்துவமனைக்கு விரைந்தான்.

அந்த செவிலிக்கு நன்றி உரைத்து, அவளை விடுவித்தவன், அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

அந்த நேரம் அவனது அலைபேசி தன் இருப்பை உணர்த்த, அங்கிருந்து எழுந்து வெளியே வந்தவன், அதில் ஒளிர்ந்த தாயின் எண்ணைப் பார்த்துவிட்டு, வேகமாக அதை காதுக்கு கொடுத்தான்.

"சொல்லுங்கம்மா..." அவன் குரலில் இருந்த வித்தியாசத்தை கண்டு கொண்டவர்,

"என்னப்பா..., குரலே சரியில்லை..., எதுவும் பிரச்சனையா?".

"காவியவையும், குழந்தையையும் ஹாஸ்பிட்டல்ல சேத்திருக்கேம்மா..., என்ன செய்யன்னு ஒண்ணுமே ஓடலை..., அதான்..." அவன் குரலில் கவலை மண்டிக் கிடந்தது.

“என்னப்பா சொல்ற? ரெண்டுபேரையுமா...? ஏதாவது விபத்தா...?” பதறினார். அவர் பதறுவது அவனுக்குப் புரிய,

“இல்லம்மா...” நடந்ததை உரைத்தவன், “அவ மதியம் சாப்பிடக் கூட இல்ல போலம்மா..., அவளோட இருந்த மாமியாரும் ஊருக்கு கிளம்பி போய்ட்டாங்க போல..., எனக்கு என்ன செய்யன்னே தெரியலம்மா..., அவ தனியா கஷ்டப்படுறதை பாக்குறப்போ...” துக்கம் தொண்டையை அடைக்க, வார்த்தைகளை நிறுத்திக் கொண்டான்.

“அர்ஜூன்..., அதான் நீ அவங்களோட இருக்கறியே பிறகேன்..., வேண்ணா நான் கிளம்பி வரவா?” அவர் கேட்கவே..., அவனுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை.

“நீங்க இப்போ வந்தாலும்..., எந்த அளவுக்கு ஏத்துப்பான்னு தெரியலையேம்மா..., ப்ரதீப் கண் முழிச்சா எப்படி சம்மாளிக்கப் போறேன்னே தெரியலை...” இதுவரை தான் அவனுக்கு அறிமுகமாகவில்லையே என்ற கவலை அவனைப் பிடித்து ஆட்டியது.

“என் பையனை இப்படி ஒரு சூழ்நிலையில் சந்திப்பேன்னு நான் எதிர்பார்க்கவே இல்லம்மா. அவனை இந்த கையில் அள்ளிகிட்டப்போ..., அவன் துடிச்சதைப் பாத்து..., என் மகனை இப்படியா நான் தூக்கணும்னு..., என் மனசே நடுங்கிடுச்சும்மா.

“நான் காவியா கிட்டே பேசப் போறேம்மா..., இதுக்கு மேலே அமைதியா இருக்க முடியும்னு தோணலை. வேலைக்கும் போய்..., பையனையும் பாத்து..., அவ தனியா அல்லாடுவதை சகிச்சுக்க முடியலை. ஏம்மா அவ சைட் பெரியவங்க எல்லாம் இப்படி இருக்காங்க...?” தன் வருத்தத்தை தாயிடம் பகிர்ந்து கொண்டான்.

“சில நேரத்தில் எதார்த்தத்தை நாம ஏத்துக்கதான் வேணும் அர்ஜூன். நான் கேட்டதுக்கு நீ இன்னும் பதில் சொல்லலை...” தான் வருவதைப் பற்றி அவர் கேட்டார்.

“ஒரு வாரம் கழிச்சு வாங்கம்மா..., அதுக்குள்ளே நான் இங்கே எல்லாம் அரேஞ் பண்றேன்...” மேலும் சற்று நேரம் தாயின் உடல்நிலையைப் பற்றி உரையாடியவன் வைத்துவிட்டான்.

***

# பகுதி – 10

அவன் பயந்தது போலவே..., ப்ரவீன் நள்ளிரவில் கண் விழிதத்தவன், “அம்மா...” காவியாவைத் தேடினான்.

பாதி உறக்கத்தில் இருந்த அர்ஜூன்..., அவனது ஒற்றை அழைப்பிலேயே விழித்துக் கொண்டான். “ப்ரதீப்..., முழிச்சுட்டியா...?” கேட்டவன் அவன் அருகில் செல்ல, குழந்தையோ அவனை சற்று பயப் பார்வை பார்த்தான்.

“அம்மா...” அவன் இதழ் துடித்து, கையில் இருந்த டிரிப்சையும் பார்த்தவன், சற்று பயந்து அழுகைக்குத் தயாரானான்.

“அம்மா இங்கேதான் இருக்காங்க பார்..., அதோ...” அருகில் இருந்த படுக்கையை சுட்டிக் காட்ட, படுக்கையில் இருந்து இறங்கி தாயிடம் செல்ல முயன்றான்.

“ஸ்..., இல்ல..., கையில் ஊசி இருக்கு பார்..., அது முடிந்த உடனே போகலாம் சரியா. அம்மாவுக்கும் உடம்பு சரியில்லை..., அதான் தூங்கறாங்க. அவங்க முழிச்ச பிறகு அவங்களே வந்து உன்னை தூக்கிப்பாங்களாம்..., இப்போ சமத்து பையனா இருப்பீங்களாம்...” அவன் அருகில் சென்று அமர்ந்தான்.

“எனக்கு ஊசி வேண்டாம்..., இதை எடுங்க...” தன் மறு கையால் அதை பிய்த்தெறிய முயன்றான்.

“ப்ரதீப்..., நோ..., அதை எடுத்தால் ரத்தம் வந்துடும்..., இது முடிஞ்ச உடனே, நர்ஸ்சை கூப்ட்டு எடுக்கச் சொல்லலாம்...” அவன் கரத்தை மென்மையாக பற்றிக் கொண்டான்.

“அம்மாவுக்கு என்ன ஆச்சு...?” தாய் அருகே இருப்பதை பார்த்ததால், அர்ஜூனோடு சற்று இலகுவாகவே பேசினான். அதைவிட, எதையுமே புரிந்து

நடந்துகொள்பவன் என்பதால் பெரிதாக அடம் பிடிக்கவில்லை.

“அம்மாவுக்கும் ஜுரம்...” சிறுவனிடம் எதையும் விளக்க முடியாதே.

“அந்த பாட்டி திட்டினதால் அம்மாவும் பயந்துட்டாங்களா? அதான் ஜுரம் வந்துச்சா...?” காலையில் தாய், ப்ரியாவிடம் அவன் சற்று பயந்துவிட்டதால் ஜுரம் என உரைத்ததை இப்பொழுது நினைவுக்கு கொண்டுவந்து கேட்டான்.

அவன் சொன்னதை சிறு யோசனையில் புரிந்துகொண்ட அர்ஜூன்..., “அப்போ ப்ரதீப்புக்கும் அதான் ஜுரம் வந்துதா...?” மென்மையாக கேட்க, வேகமாக தலை அசைத்து ஆமோதித்தான்.

வீட்டில் என்ன நடந்தது என குழந்தையிடம் கேட்பது அநாகரீகம் என்பதால் அமைதி காத்தான்.

“அந்த பாட்டி பேட் பாட்டி...” திடுமென உரைக்க, “பெரியவங்களை அப்படியெல்லாம் சொல்லக் கூடாதும்மா...” பொறுமையாக திருத்தினான்.

சில நொடிகள் அமைதியாக இருந்தவன்..., “தண்ணி...” தன் பார்வையை சுழற்றியவன் கேட்டான்.

“இதோ தரேன்...” பிளாஸ்கில் எதற்கும் இருக்கட்டும் என தண்ணீர் கொண்டுவந்தது எவ்வளவு நல்லதாகப் போயிற்று..., எண்ணியவன், நீரை அவனுக்கு புகட்டினான்.

தன் தாய் மருத்துவமனையில் இருந்தபொழுது தனி ஆளாக இருந்து கவனித்தது இப்பொழுது கை கொடுத்தது. அவன் குழந்தையை எப்படி கவனிப்பது என தயங்கினானே தவிர, மருத்துவமனை அவனுக்கு ஒன்றும் புதிது கிடையாது.

அவன் நீர் அருந்தி முடிக்கவே..., “படுத்துக்கறியா...?” அர்ஜூன் கேட்க,

“எனக்கு தூக்கம் வரலையே..., என் தாமஸ் எங்கே...?” தன் டிரெயினை தேடினான். அவனுக்கு காய்ச்சல் இப்பொழுது சுத்தமாக விட்டிருந்தது. சிறு களைப்பு மட்டுமே தெரிய, பிள்ளை என்பதால்..., உறக்கம் கலைந்தவுடன், விளையாடும் மூடுக்கு திரும்பி விட்டான்.

“தாமஸ்...? யாருப்பா அது...?”.

“என்னோட டாய்..., டிரெயின்..., எனக்கு தூக்கம் வரலன்னா அதோடதான் விளையாடுவேன்...” உனக்குத் தெரியாதா? என்ற வினா அதில் தொங்கி நின்றது.

இந்த நேரத்தில் தாமஸ் டிரெயினுக்கு அவன் எங்கே போவான்...? “இப்போதான் காய்ச்சல் விட்டிருக்கு. சோ..., நாம விளையாட வேண்டாம். என் மடியில் படுத்துக்கறியா...? நான் கதை சொல்றேன்...” அர்ஜூன் கேட்க,

“எங்க மிஸ் சொல்ற கதையா...?” கண்களை உருட்டி..., உதடு பிதுக்கி அவன் கேட்ட அழகில் மயங்கித்தான் போனான்.

“உங்க மிஸ் சொல்ற கதை எனக்குத் தெரியாது. நான் வேற சொல்லித் தரேன்...” அவனை மடியில் சாய்த்துக் கொண்டான்.

சற்று தயங்கினாலும்..., ஏனோ அந்த ஊசியைப் பார்த்து அவன் சற்று மிரண்டிருந்ததால் அவன் மடியில் படுத்துக் கொண்டவன், எப்பொழுதும் தாமஸ் டிரெயினை விரல் நகத்தால் கீறிக்கொண்டு உறங்கும் விதத்தில், அர்ஜூனின் சட்டை பட்டனை சுரண்டத் துவங்கினான்.

அவன் செய்கை சற்று வித்தியாசமாக இருந்தாலும், மறுக்காமல் அவன் செய்கைக்கு உடன்பட்டவன், கதை சொல்லத் துவங்கினான். கிட்டத்தட்ட பத்து கதைகளை முடித்த பிறகும் அவன் தூங்கும் வழியைக் காணோம். மதியமே தூங்கத் துவங்கி விட்டதால்..., உறக்கம் அவனை விட்டு சுத்தமாக ஓடிப் போயிருந்தது.

அதே நேரம்..., டிரிப்ஸ் முடியவே..., செவிலியை அழைத்து அதை நிறுத்தியவன், அவர் ஒரு ஊசி மறுத்ததை செலுத்திவிட்டு, “காலையில் டாக்டரை கேட்டுட்டு இதை ரிமூவ் பண்றேன்...” புறங்கை மறைவில் ஒரு கொட்டாவியை வெளியேற்றியவள் சென்று மறைந்தாள்.

நேரம் அதிகாலை மூன்றைக் காட்ட..., மேலும் ஒருமணி நேரம் அவனிடம் போராடியும், அமைதியாக படுத்திருந்தானே தவிர உறங்கும் வழியைக் காணவில்லை.

எப்படியும் காவியா இன்று அலுவலகம் செல்வாள் என்பதால்..., அவளுக்காக ஏதாவது செய்து எடுத்து வரலாம் என வீட்டுக்குச் செல்ல முடிவெடுத்தான். ப்ரதீப் தன்னோடு வருவானா? என்ற பெரும் கேள்வி எழுந்தது. தாய் எதிரில் இருப்பதால் இயல்பாக இருப்பவன், தன்னோடு வெளியே வருவானா?

தனக்குள் உழல்வதை விட, அவனிடமே கேட்டுவிடுவோம் என எண்ணியவன், “ப்ரதீப்..., அம்மாவுக்கு ஜூரம் தானே..., நாம அம்மாவுக்கு சாப்பிட ஏதாவது வாங்கிட்டு வரலாமா? என்னோட வரியா...?” அவனை தன் கைகளுக்குள் அள்ளிக் கொண்டவன் கேட்டான்.

இந்த நேரத்தில் அவனை அலைய வைக்க கஷ்டமாக இருந்தாலும், உள்ளுக்குள்ளேயே எவ்வளவு நேரம்தான் இருப்பது?

“அம்மா...?” தாயை கவலையாக ஏறிட்டது அந்த பிஞ்சு.

அவனை இழுத்து தன் நெஞ்சோடு இறுக்கியவன்..., “அம்மா தூங்கட்டும். நாம போயிட்டு வரலாம்...”.

அங்கே இருந்த செவிலியிடம் கேட்டு..., அவள் சம்மதம் பெற்ற பிறகே அவனை அழைத்துச் செல்வது பற்றி அவனிடம் கேட்டதால்..., காவியாவின் லஞ்ச் பேகை மறக்காமல் தன்னோடு எடுத்துக் கொண்டான்.

பைக்கில் செல்வது பிரதீப்புக்கு புது அனுபவமாக இருக்க..., அந்த மெல்லிய இருள் கவிழ்ந்த பயணத்தை அவன் மிகவும் ரசித்தான். போகும் வழியிலேயே பால் வாங்கிச் சென்றவன், முதலில் அவனுக்கு பாலும் பிஸ்கட்டும் கொடுத்துவிட்டு, சமையலில் இறங்கினான்.

பிரதீப்பும் சமையல் மேடையிலேயே அமர்ந்துகொள்ள..., அர்ஜூன் வெண்டைக்காய் காம்பை முகத்திலும் மூக்கிலும் ஒட்டிக்கொண்டு காட்டிய விளையாட்டு, சின்ன கிச்சுகிச்சு..., என அனைத்திலும் வெகுவாக கவரப்பட்டான்.

இட்லி, சாம்பார்..., சாதம் வெண்டைக்காய் பொரியல் என செய்தவன், காவியாவுக்கு பாக்ஸில் போட்டு எடுத்துவிட்டு, ப்ரதீப்பை கண் பார்வையிலேயே வைத்து, அவசரமாக ஒரு குளியல் போட்டுவிட்டு, மருத்துவமனையை நெருங்குகையில் காவியா கண் விழித்திருந்தாள்.

“குட் மார்னிங் காவியா...?” ஒரு கையில் மூங்கில் கூடையும், மறு கையில் ப்ரதீப்பையும் ஏந்தியிருந்த அவனது தோற்றம்..., அப்படியே கல்வெட்டாய் அவள் மனதுக்குள் இறங்க, கூடவே சில இடிகளையும் சேர்த்து இறக்கியது.

அவள் தன்னையும், ப்ரதீப்பையும் பார்வையால் அளந்ததையும்..., அவள் கண்களில் விரவியை அதிர்ச்சியையும் குறித்துக்கொண்ட அர்ஜூனுக்கு, விஷயத்தை இதற்குமேல் ஆறப்போட மனம் வரவில்லை. இன்றே..., இப்பொழுதே தன் மனதுக்குள் இருப்பதை உரைத்துவிட வேண்டும்..., முடிவெடுத்தான்.

“அம்மா...” அவன் கைகளில் இருந்து உருவிக்கொண்டு இறங்கி, அவளிடம் ஓட, மகனுக்கு காய்ச்சல் இல்லை என்பதை தொட்டு உணர்ந்தவள், தன் தாக்கத்தில் இருந்து விடுபட முடியாமல் போராடினாள்.

அர்ஜூனின் பார்வை தன்னை துளைப்பதையும், அவன் பார்வையில் தெரிந்த ஒருவித பிடிவாதமும்..., அவள் மனதை வெகுவாய் தாக்கியது.

‘இல்லை..., இது உண்மையாக இருக்கக் கூடாது...’ மகனை ஆதரவுக்காக பற்றிக் கொண்டாள். பார்வையோ அவனிடம் கெஞ்சியது..., ‘எதையும் சொல்லிவிடாதே...’ மகனது முதுகைத் தழுவிக் கொண்டாள்.

“இப்போ பரவாயில்லையா காவியா...?” ஏதாவது பேச வேண்டுமே.

மகனை மடியில் அமர்த்தியவள்..., “சாரி..., உங்களுக்கு ரொம்ப தொல்லை கொடுத்துட்டேன்...” அவன் முகம் பார்க்க தயங்கினாள்.

“மனுஷனுக்கு மனுஷன் இந்த உதவியைக் கூட செய்யலன்னா எப்படி...?” தான் கொண்டுவந்தவற்றை அங்கிருந்த மேஜைமேல் வைத்தான்.

அங்கே சங்கடமான ஒரு மௌனம் நிலவ, “அம்மா..., எனக்கும் உங்களுக்கும் சேம்...” கையில் இருந்த ஊசியைக் காட்ட, அவனை அணைத்துக் கொண்டு அமைதியாக இருந்தாள்.

“ப்ரதீப்பை வீட்டுக்கு கூட்டி போகலாமா...? டாக்டர் என்ன சொன்னார்?” வந்த இடத்தில் தானும் சேர்ந்து அவனை கஷ்டப்படுத்தியத்தை நினைக்க, அவளால் இயல்பாக இருக்கவே முடியவில்லை. அதைவிட, குழந்தையின்மேல் உரிமையாய் பதியும் அவன் பார்வை..., அங்கிருந்து ஓடிவிடத் தூண்டியது.

“காவியா...?” அவனது அழைப்பில் இருந்த பாவனையில் அவனை நிமிர்ந்து பார்க்க, அவனது பார்வையோ அவள் அடி மனதையும் துளைப்பதாய்.

“ப்ரெஷ் ஆகிட்டு வா..., முதல்ல சாப்பிடலாம்...” அவன் பார்வையை மீறி எதையும் செய்ய முடியாமல், அவன் சொன்னதைச் செய்துவிட்டு வந்தாள்.

அவள் வரும் வேளையில்..., அர்ஜூன் ப்ரதீப்புக்கு இட்லியை ஊட்டிக் கொண்டிருக்க, “உங்களுக்கு ஏன்

சிரமம்..., நானே...” மீண்டும் அவனது ஆழமான பார்வையில் அமைதியானவள், அவன் நீட்டிய பாக்ஸை பெற்றுக் கொண்டாள்.

உணவு இறங்கவா செய்யும்? அவள் பாக்ஸை திறக்காமலே இருப்பதைப் பார்த்தவன்..., “சாப்பிடு...” கட்டளை இட்டான்.

“அம்மா..., அர்ஜூனே செய்தாங்க...” ப்ரதீப் திடுமென உரைக்க, ‘இதென்ன பெயரைச் சொல்கிறான்...’ மகனை கண்டிக்கும் பார்வை பார்த்தவள், அர்ஜூனை ஏறிட, அவன் பார்வையில் இருந்த பொருளை தாங்கிக் கொள்ளத்தான் அவளால் முடியவில்லை.

“ப்ரதீப்..., ரெஸ்ட் ரூம் போயிட்டு வாயை கழுவிக்கோ...” அவனை அனுப்பியவன், “அவன் என்னை அங்கிள்னு கூப்பிடுவதை அவாய்ட் பண்ணத்தான் நேம் சொல்லிக் கொடுத்தேன்...” அவளை அசையாமல் பார்த்து உரைத்தான்.

அவளுக்கோ, வாய்க்குள் இருந்த உணவு தொண்டைக்குழியை விட்டு இறங்க மறுத்தது. அதிர்ச்சியை அப்பட்டமாக விழிகளில் தேக்கி அவனைப் பார்க்க, “என்னை கல்யாணம் பண்ணிக்கறியா காவியா...?” அவளை நெருங்கி வந்தவன், அவள் முன்னால் மண்டியிட்டான்.

‘இதற்கு என்ன பதில் சொல்வது...? இதை எப்படி எடுத்துக் கொள்ள...? மறுமணம் என்ற விஷயத்தை அவள் கனவில் கூட எண்ணியிருக்கவில்லை. அப்படி இருக்கையில்..., கண்ணீர் தானாக கன்னத்தில் வழிந்தது.

“அம்மா..., இன்னும் ஜூரம் அடிக்குதா...?” ப்ரதீப் அவள் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைக்க, தன் இடக்கரத்தால் அவனை அணைத்துக் கொண்டாள்.

‘இல்லை...’ என மறுப்பாக தலை அசைத்தவள், அர்ஜூனை கெஞ்சும் பார்வை பார்த்தாள்.

“டாக்டர் கிட்டே போகலாமான்னு கேட்டுட்டு வரேன்…, நீ சாப்ட்டு முடித்ததும் கிளம்பலாம்…” சென்றவன், அடுத்த பத்து நிமிடங்களில் திரும்பி வந்தான்.

அவன் உண்ணாததைப் பார்த்தவளுக்கு, இப்பொழுது அவனை உண்ணச் சொல்லக் கூட நாக்கு எழவில்லை. மனதுக்குள் மூளும் பிரளயம்…, அதை அடக்கும் வழியோ, தவிர்க்கும் மார்க்கமோ புரியவில்லை.

***

# பகுதி – 11

அவளுக்காக ஒரு ஆட்டோவை அழைத்து வந்தவன், அவளையும் ப்ரதீப்பையும் ஏற்றி விட்டு, அவர்களைப் பின் தொடர்ந்தான். வீட்டைத் திறந்து உள்ளே சென்றவள், ப்ரதீப் உறக்கத்துக்கு செல்வதைப் பார்த்து, காலை வேளை மருந்தைக் கொடுத்து உறங்கச் செய்தாள்.

அவன் உறங்கிவிடவே..., ஹாலுக்கு வந்தவள், அங்கே அமர்ந்திருந்த அர்ஜூனைப் பார்த்து தயங்கி நின்றாள். அவனோ..., அவளைப் பார்த்தவாறு அசையாமல் இருந்தான்.

அவள் மனதுக்குள் முளைவிடும் ஆயிரம் கேள்விகளில் ஒன்றைக் கூட அவளால் கேட்க முடியவில்லை.

“ஹாஸ்பிடல் பில்... எவ்வளவுன்னு...” அங்கே இருந்த நிலைமையின் கனம் தாளாமல் மெதுவாய் கேட்டாள்.

“அது எதுக்கு இப்போ உனக்கு...?” அமர்த்தலாக அவன் வினவ, அவன் தன்னை ஒருமையில் அழைப்பதை குறித்துக் கொண்டாலும், அதைப்பற்றி கேட்க முடியாமல் மௌனமானாள்.

‘எங்களுக்குச் செய்ய நீ யார் என்றோ..., நீ இதைச் செய்யாதே’..., என்றோ அவளால் சொல்ல முடியவில்லை. தன் மனதுக்குள் எழுந்த சந்தேகம் உண்மை என்பதுபோல் அவன் அமர்ந்திருந்த விதம், அழுத்தமான அவன் கேள்வி..., மென்மையான குணம் கொண்ட அவளால் கேள்வி கேட்கவே முடியவில்லை.

தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து பர்ஸை எடுத்தவன், அதில் இருந்து ஒரு சிறிய புகைப்படத்தை உருவி அவள் கையில் திணித்தான்.

‘என்ன இது...?’ கேள்வியாக நோக்கியவள், புகைப்படத்தில் இருந்த உருவத்தை நம்ப முடியாமல் வெறித்தாள். அந்த புகைப்படத்தில்..., ப்ரதீப்பையே உரித்து வைத்தாற்போல்

இருந்த குழந்தையை தாங்கிக் கொண்டிருந்தாள் ஒரு பெண்மணி.

கைகள் நடுங்க..., கண்ணீர் குளம் கட்ட..., மீண்டும் அதைப் பார்த்தாள்.

“அதில் இருப்பது..., நானும்..., என் அம்மாவும்...” அவன் வார்த்தைகள் கொடுத்த தாக்கம்..., எங்கே மீண்டும் மயக்கத்துக்கே சென்றுவிடுவோமோ என, சுவற்றை தாங்கிக் கொண்டாள்.

“நான் நம்ப மாட்டேன்...” நடுங்கும் குரலே..., நான் நம்புகிறேன்., என அவனுக்கு வெளிச்சம் போட்டு காட்ட,

“உன்னை நம்ப வைக்க நான் தயார்..., ஒரு சின்ன DNA டெஸ்ட் போதும். ப்ரதீப் என் மகன்தான் என நிரூபிக்க...” அவ்வளவுதான்..., இவ்வளவு நேரமாக ஆயிரத்தில் ஒரு விதமாக, அப்படி இல்லாமல் இருந்தால்..., என ஏங்கிய அவள் மனம் சுருண்டு போனது.

“வேண்டாம்...” கைப்புண்ணுக்கு கண்ணாடி அவசியமா...? அவள் மனம் கேட்க, இந்த குழப்பத்தை எப்படி சரி செய்யவென்று அவளுக்குத் தெரியவில்லை.

“நான் கேட்டதுக்கு இன்னும் நீ பதில் சொல்லலை...”, அவள் யோசனையைத் தடுத்தவன், அவன் அதிலேயே நின்றான்.

‘இவன் எதைக் கேட்கிறான்...?’ மூளை மரத்துப்போக, பரிதவிப்பாய் அவனை ஏறிட்டாள்.

“என்னை கல்யாணம் பண்ணிக்கறியான்னு கேட்டேனே...” அவளுக்கு நினைவு படுத்த,

‘என்ன மாதிரியான ப்ளாக்மெயில் இது...?’ அவளுக்கு தலை சுற்றியது. அவனோ..., கொஞ்சம் கூட இளக்கமே இல்லாமல் நிற்க, பதில் தெரியாமல் அவன் விடப்போவதில்லை என்பது புரிந்து போனது.

“இந்த நிமிஷம் வரைக்கும், எனக்கு உங்க மேலே அப்படி ஒரு எண்ணம் இல்லை. அவ்வளவு ஏன்...? அப்படி ஒரு நினைப்பே எனக்கு இல்லை. என்னை இப்படியே விட்டுடுங்களேன்..., ப்ளீஸ்...” அவளால் கெஞ்சத்தான் முடிந்தது.

‘இப்படி பூஞ்சை மனம் கொண்டவளால் எதிர்காலத்தை எப்படி தைரியமாய் எதிர்கொள்ள முடியும்...?’ அவன் எண்ணம் இதுவாகத்தான் இருந்தது.

“இந்த நிமிஷம் வரைக்கும் இல்லை சரி..., இனிமேல் யோசி...” அவள் கெஞ்சலில் இளகாமல் சொன்னான்.

போலீசுக்குப் போவேன் என்றோ..., தொல்லை செய்யாதே என்றோ..., அவளால் குரல் உயர்த்தி சொல்லக் கூட முடியாததை குறித்துக் கொண்டவனுக்கு, இப்படி ஒரு மனம் படித்தவளை தனியாக விட்ட பெரியவர்கள் மேல் கடும் கோபம் எழுந்தது.

அதை மறைத்தவன்..., அவள் பரிதவிப்பான பார்வையைப் பார்த்து, “உன்னை யோசிக்கச் சொன்னேன்தான்..., அதற்காக உடனே யோசிக்கச் சொல்லலை...” சீண்டும் குரலில் உரைக்க, அதிர்ந்துபோய் அவனைப் பார்த்தாள்.

“நான் ஒன்றும்...” வேகமாகத் துவங்கியவள், அவன் இதழ்கள் சிரிப்பில் விரிய வாயை மூடிக் கொண்டாள்.

“இன்னைக்கு ஆபீஸ்க்கு போறியா...? இல்லையா...?” அவன் கேள்விக்கு, ‘போய்தானே ஆக வேண்டும்...’ வேலையில் சேர்ந்த ஒரு வருடத்துக்கு விடுப்பு எடுக்க முடியாத நிலை அவளை கலங்கச் செய்தது.

“நீ ஆபீஸ்க்கு கிளம்பு..., நான் ப்ரதீப்பை பாத்துக்கறேன்...” அவன் உரைக்க, அவன் இங்கேயே இருந்தால் அக்கம் பக்கம் இருப்பவர்கள் என்ன நினைப்பார்கள் என தவித்துப் போனாள்.

அவள் நினைப்பை உணர்ந்தவன்..., “மத்தவங்கள் நினைப்புக்கெல்லாம் நாம வாழ முடியாது காவியா. நான் சொன்ன விஷயத்தை யோசி..., இப்போ நான் சொன்னதை மட்டும் செய். மத்ததை நான் பாத்துக்கறேன்...” அவனிடம் எதையும் மறுக்க முடியாமல் அவன் சொன்னதைச் செய்தாள்.

அவள் கிச்சனுக்குள் செல்ல, “உனக்கு லஞ்ச் உன் பாக்ஸ்ல இருக்கு. இங்கே ஏதாவது தேவைன்னா நான் பாத்துக்கறேன்...” அவன் குரல் அவளைத் தேக்க, குளித்து கிளம்பியவள், பள்ளிக்குச் சென்று தன் வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டாள்.

மனதுக்குள் பெரும் குழப்பம்... டீ பிரேக்கில் அவள் அலைபேசிக்கு அழைப்பு வர, புது எண்ணைப் பார்த்து சற்று யோசித்தாலும், ஒரு வேளை அவனாக இருக்குமோ என்ற எண்ணத்தில் எடுத்தாள்.

“காவியா..., ப்ரதீப் பேசணும்னு சொன்னான்..., அதான்...” அலைபேசி ப்ரதீப்பின் கைக்குச் செல்ல, சற்று நேரம் இருவரும் உரையாடினார்கள்.

ப்ரதீப்புக்கு வேளைக்கு மருந்தைக் கொடுத்து..., தான் கட்டி வந்திருந்த சாதத்தை கரைத்தவன், கொஞ்சமாக ரசம் வைத்து அவனுக்கு ஊட்டி விட்டு உறங்க வைத்தான்.

மதியம் லஞ்ச் சாப்பிடுகையில்..., அவன் சாப்பிட்டிருப்பானா? எண்ணம் எழுவதை தவிர்க்க முடியவில்லை. ‘எல்லாவற்றையும் ப்ளான் பண்ணி செய்கிறான்...’ அவனது செய்கைகளைப் பார்த்து ஒரு மனம் பாராட்டியது.

அதே நேரம்..., ‘இனிமேல் என்ன நடக்கும்...?’ நினைவே நடுங்கியது.

ஆனால்..., அவள் பயந்த அளவுக்கு அர்ஜூன் எதையும் செய்யவில்லை. மாலையில்..., அவள் வீட்டுக்குள் நுழைகையில், ப்ரதீபைச் சுற்றி, தாமஸ் டிரெயின்

செட்டோடு கூடவே..., அவர்களது நண்பர்கள் டிரெயினும் இருக்க, ‘இதையெல்லாம் ஏன் வாங்கினாய்...? என கேள்வி கேட்க முடியாமல் தேங்கினாள்.

“ஓகே..., நான் கிளம்பறேன்... போக முன்னாடி ஒரே ஒரு விஷயம்..., ப்ரதீப்பை உன்கிட்டே இருந்து பிரிக்கணும் என்பதோ? உன்னை பிளாக்மெயில் செய்வதோ என் எண்ணமில்லை. ஒரு குழந்தை அப்பா இல்லாமல் வளர்வது எவ்வளவு கஷ்டம்ன்னும் எனக்குத் தெரியும்..., அதே நேரம்..., தனி மனுஷியா, இந்த சமுதாயத்தில் ஒரு குழந்தையை வளக்க, ஒரு பெண் எவ்வளவு கஷ்டப்படுவான்னும் எனக்குத் தெரியும்...

“உன் மனசுக்குள் இருக்கும் கேள்விகளுக்கெல்லாம் என்கிட்டே விடை இருக்கு. ஆனா..., அதை நீ தெரிஞ்சுக்கணும்னா..., உரிமையா கேட்டால் மட்டுமே பதில் கிடைக்கும். என்னால் உனக்கு எந்த தொல்லையும் இருக்காது.

“உனக்கு எப்போ என்ன உதவி வேண்டும் என்றாலும், அது எந்த நேரமாக இருந்தாலும் தயங்காமல் என்னை அழைக்கலாம். செய்ய நான் காத்துட்டு இருக்கேன். அதேபோல்..., உன் பதிலுக்காகவும் நான் காத்துட்டு இருக்கேன் என்பதை மறக்காதே. ஆனா..., அதுவும் ஒரு மாதம்தான். அதற்குமேல்...” ஒரு பெருமூச்சை வெளியேற்றியவன், வாசலில் இறங்கினான்.

அவள் அவன் முதுகையே திகைப்பாய் பார்த்துக் கொண்டிருக்க..., “இன்னொரு முக்கியமான விஷயம்..., ப்ரதீப்புக்காக உன்னை திருமணம் செய்ய விரும்புகிறேன் என நினைக்காதே. ப்ரம் தி பாட்டம் ஆப் மை ஹார்ட்..., ஐ’ம் டெல்லிங்..., எனக்கு உன்னை புடிச்சிருக்கு..., உன்னை நல்லா பாத்துப்பேன் என்ற நம்பிக்கையும் எனக்கு நிறையவே இருக்கு...” அவ்வளவுதான் சென்றே விட்டான்.

அவன் சொல்வதை எப்படி எடுத்துக்கொள்ள என்றே அவளுக்குத் தெரியவில்லை. ஆனால்..., அவன் கண்களில்

இருந்த உண்மை மட்டும் பொய்யில்லை என்று அவளுக்குப் புரிந்தது.

ஆனால்..., வாழ்க்கையில் முதலில் பட்ட அடி..., என்ன வாழ்ந்தோம்? என்ன நடந்தது...? எதுவுமே புரியும் முன்னர், பம்பரத்தை சுழற்றியது போன்று அனைத்தும் முடிந்திருக்க, மீண்டும் ஒரு ஆரம்பத்தை அவளால் நினைக்கவே முடியவில்லை.

அடுத்து வந்த நாட்கள் எப்படிக் கடந்தன எனக் கேட்டால் அவளிடம் விடையில்லை. அவனைப் பார்ப்பதே சற்று அபூர்வமாகத்தான் ஆகிப் போனது. வாழ்க்கை பழைய நிலைக்கு திரும்பிவிட்டது என அவள் எண்ணிகொண்டிருந்த நேரம்..., மாலையில் வீடு திரும்புகையில் வண்டி பாதி வழியில் நின்று போனது.

பெட்ரோல் முந்தின நாள்தான் போட்டிருந்ததால்..., அதனால் நிற்க வழியில்லை..., கிக் ஸ்டார் செய்தும் வண்டி கிளம்பாமல் போகவே..., சற்று பயந்து போனாள்.

உதவிக்கு ஆட்களை அழைக்கலாம் என்றாலோ..., அந்த நடுத்தரமான ஊரில், மாலை இருள் கவிழும் நேரம் யாரும் வரும் அறிகுறியும் இல்லை. இன்னும் ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் ஒரு மெக்கானிக் ஷாப் இருப்பது அவளுக்குத் தெரியும்.

வண்டியை தள்ளிக்கொண்டு அவ்வளவு தூரம் செல்வது முடியாத காரியம் என்பதால்..., என்ன செய்ய...? அவள் யோசிக்கையிலேயே அவள் நினைவுக்கு வந்தவன், அர்ஜூன் மட்டுமே.

அவனுக்கு அழைக்க சற்று தயக்கமாக இருந்தாலும், வேறு வழியின்றி போகவே, அவனுக்கு அழைத்தாள்.

“சொல்லு காவியா...?” அவன் கேட்க, மிகுந்த தயக்கத்துக்கு நடுவில் விஷயத்தை சொன்னாள்.

“ஓ..., ஓகே..., நான் ஒரு நம்பர் கொடுக்கறேன். அவன் பேர் மணி..., உடனே வருவான்...” உரைத்தவன், ஒரு குறுந்தகவலை அனுப்பி வைத்தான்.

அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. ‘வேறு என்னதான் எதிர்பார்த்தாய்...?’ மனசாட்சியின் கேள்வியை ஒதுக்கியவள், அந்த எண்ணுக்கு அழைத்தாள்.

‘ஒரு வேளை இந்த எண் வேலை செய்யவில்லை என்றால்...?’ என்ற நினைப்பை, இரண்டாவது ரிங்கிலேயே போன் எடுக்கப்பட, நிம்மதியானாள். விஷயத்தை அவள் சொல்ல, இரண்டே நிமிடங்களில் அங்கே இருப்பேன் என உரைத்த மணி, அதேபோல் அங்கே வந்து சேர்ந்தான்.

வண்டி ரெடியாகவே..., அவள் பணத்தை கொடுத்து முடிக்கும் நேரம், அங்கே வந்தான் அர்ஜூன். “வண்டி ரெடி ஆயிடுச்சா மணி...?” கேட்டவன், அவர்களை நெருங்கினான்.

“அண்ணே..., நீங்களா...? இவங்க உங்களுக்கு தெரிஞ்சவங்களா...? என்ன மேடம்..., அர்ஜூன் அண்ணாவைத் தெரியும்னு சொல்லியிருந்தால் உங்ககிட்டே காசே வாங்கியிருக்க மாட்டேன்...” அவளிடம் பணத்தை திருப்பிக் கொடுக்க முயன்றான்.

“மணி..., இது நீ செய்த வேலைக்கான கூலி. அதை நீ யாருக்காகவும் வாங்காமல் இருக்கக் கூடாது. நீ போ...”.

“சரிண்ணே..., வரேன் மேடம். அண்ணே...” மணி தயக்கமாக அழைக்க,

“என்னமணி..., சொல்லு..., ஏன் தயங்கற...?”.

“அண்ணே..., வண்டியை சர்வீஸ் பண்ணினால் இன்னும் நல்லா ஓடும்..., கொஞ்சம் பழைய வண்டி..., அதான் மக்கர் பண்ணுது. டெம்ப்ரவரியாதான் சரி பண்ணியிருக்கேன். சில பார்ட்ஸ் மாத்தினால் இன்னும் சில வருஷம் ஓடும்...”

அர்ஜூனுக்கு தெரிந்தவள் என்பதால் அக்கறையாக உரைத்தான்.

“அப்படியா சொல்ற..., அப்போ..., நாளைக்கே வந்து வண்டியை எடுத்துட்டு போ..., காலையில் வந்து எங்க ஆபீஸ்ல இருந்து வண்டியை வாங்கிட்டு, ஈவினிங் விட்டுடு...” அவனை அனுப்பினான்.

“இப்போ மட்டும் எதுக்கு வந்தீங்களாம்...? எனக்கே வீட்டுக்கு வரத் தெரியாதா...?” குறைபட்டவள், வண்டியைக் கிளப்ப முயன்றாள்.

கீயை ஆப் செய்தவன்..., “எல்லாத்தையும் நீ கத்துக்கணும். எப்பவும் யார் பின்னாடியாவது ஒளிஞ்சுக்க முடியாது காவியா..., புரியுதா...?” கேட்டவன்..., வண்டியைக் கிளப்பினான்.

அவன் வார்த்தைகள் அவளை வெகுவாய் தாக்கியது. பாஸ்கர் என்னவென்றால்..., அவளாக எதையும் செய்ய சம்மதிக்க மாட்டான். இவனானால்..., தன் மனம் போக்கை உணர்ந்தவள், அதிர்ந்தாள்.

“நினைப்பை எங்கே வச்சுட்டு வண்டியை ஓட்டுற...? இது வாகனம் வராத ரோடு என்றாலும், பள்ளம் மேடை நீதான் பாத்து ஓட்டணும்...”, அவன் கோபத்தைப் பார்த்தவள், சாலையைப் பார்க்க, அங்கே ஒரு பெரிய பள்ளம் இருப்பதை அப்பொழுதுதான் கவனித்தாள்.

அவன் தடுத்திருக்கவில்லை என்றால்..., நிச்சயம் அதில் விழுந்திருப்பாள். “பாத்து போ...” அவன் தன் பாதையில் திரும்பிவிட, அதன் பிறகு கவனமாக சென்றவள், ப்ரதீப்பை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றாள்.

***

# பகுதி – 12

அன்று அலுவலகத்தில் வேலையாக இருக்க..., கொரியர் வந்திருப்பதாக உரைக்கவே..., அதை வழக்கமாக வாங்கும் அட்டெண்டர்..., ரிஜிஸ்டர் போஸ்ட்..., இரநூற்று ஐம்பது ரூபாய் கொடுத்து வாங்கவேண்டும் என்பதால், அதை வாங்காமல் சென்றார்.

அது காவியாவின் சீட்டுக்குத்தான் வந்திருக்கிறது என ஜாடையாக உரைக்க, இப்பொழுது தான் என்ன செய்ய வேண்டும் என தெரியாமல் திகைத்தாள். அவள் வேலைக்குச் சேர்ந்து இரண்டு மாதங்கள் முடியப்போகிறது என்றாலும், முதல் மாத சம்பளத்தைக் கூட அவள் இன்னும் வாங்கியிருக்கவில்லை.

அவளது தாய் திருமணத்துக்காகப் போட்ட நகைகளை, ஐம்பதாயிரம் ரூபாய்க்கு அடகு வைத்துதான்..., வாடகை வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்தது முதல், தனக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள் வாங்கியது வரை செய்தாள்.

அவள் வீட்டில் இருக்கும் சோபா, கட்டில், டிவி, பிட்ஜ் முதல், கேஸ் ஸ்டவ் வரைக்கும்..., வீட்டு ஓனரின் மகன் பயன்படுத்தியவையே. அவரது மகனுக்கு அமெரிக்காவில் வேலை கிடைத்து, குடும்பத்தோடு சென்றுவிட, வீட்டை பூட்டி வைக்க மனமின்றி, அங்கே இருந்த இரண்டு படுக்கை அறையில் ஒன்றில், அவர்கள் பீரோ, துணிமணி, சில அவசியமான வஸ்துக்களை அடைத்தவர், மற்றொரு அறையையும், ஹால், கிச்சனை அவளது பயன்பாட்டுக்காக விட்டிருந்தார்.

மாடியில் இருக்கும் ஒரு அறையிலும்..., தேவையற்ற பொருட்களை ஒதுக்கி போட்டிருப்பதாக அவர் சொல்லித்தான் கேள்வியே தவிர, அவள் மேலே சென்று பார்த்ததில்லை.

அப்படி இருக்கையில்..., இந்த மாத இறுதியில் அந்த இரநூற்றி ஐம்பது ரூபாய் அவளுக்கு பெரும் தொகையாக மாறக் கூடும். எனவே..., அவர் சொன்னதை கண்டுகொள்ளாமல் அமைதியாகவே அமர்ந்து கொண்டாள்.

ஒரு பக்கம்..., அது அவளது சீட்டுக்கு வரவேண்டிய பார்சல் என்ற உறுத்தல் இருந்தாலும், இதற்கு முன்னர் எப்படி அதை வாங்கினார்கள் என்பதை அவள் அறிய வேண்டி இருந்தது.

தொடர்ந்த நாட்களிலும் அந்த போஸ்ட்மேன் வருவதும், யாரும் அந்த பார்சலை பெற்றுக் கொள்ளாமல் திரும்பிப் போவதுமாக இருக்க, ஒரு நாள்., அந்த அட்டெண்டர்..., அவளை முறைத்துப் பார்ப்பது போன்ற பிரம்மை. கூடவே..., “இந்த காசை இப்போ கொடுத்துட்டு பிறகு கிளெயிம் பண்ணிக்கலாம்...” பொதுவாக உரைப்பதுபோல் அவர் உரைத்துச் செல்ல, குழம்பித்தான் போனாள்.

‘கிளெயிம் பண்ணி வாங்கலாம்னா..., ஏன் யாரும் வாங்காம இருக்காங்க...?’ அவளுக்குப் புரியவில்லை.

அன்று தன் ஹால்ப் மந்த் ப்ளாக் ரிப்போர்ட்டை கொடுக்க வந்தான் அர்ஜூன். நேராக அவள் சீட்டுக்கு முன்னால் வந்தவன், “குட் நூன் காவியா...” உரைத்தவன், அவள் எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தான்.

ஒரு நிமிடம் அவளுக்கு எப்படி ரியாக்ட் செய்யவென்றே தெரியவில்லை. ஒரு வாரத்துக்குப் பிறகு, அவனை இப்பொழுதுதான் பார்க்கிறாள். நேரடியாக பார்க்கவும் ஒரு தயக்கம்.

கூடவே..., வேலை இடத்தில் என்ன கேட்கப் போகிறானோ என்ற பயம் வேறு. கலவையான மனநிலையில் அவள் இருக்க, அவனுக்கு அப்படி எந்த தயக்கமும் இருக்கவில்லை.

“காவியா..., எட்டாவது ப்ளாக்குக்கான போர்க்காஸ்ட் ரிப்போர்ட் இதில் இருக்கு. நீங்க பாத்துட்டு..., எஸ்ஓ கிட்டே

சப்மிட் பண்ணிடுங்க. இதை ஆக்ச்சுவலா இந்த சீட்ல இருக்குறவங்க கிட்டே கொடுப்பதுதான் ப்ரோசீஜர்.

“லாஸ்ட் டைம் நீங்க புதுசு என்பதால் டைரெக்ட்ட பொறுப்பு மேம் கிட்டே சப்மிட் பண்ணிட்டு போயிட்டேன். இனிமேல் அது முடியாதே..., அதான்..., நேரடியா கொடுத்துட்டு போலாம்னு வந்தேன்...” தன் கையில் இருந்த ஃபயிலை அவளிடம் கொடுத்தான்.

அவன் சொன்னதை நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தவள், “ம்...” அவன் வாங்கச் சொல்லவே, கைகளில் வாங்கிக் கொண்டாள்.

சரியாக அதே நேரம்..., மீண்டும் அந்த போஸ்ட்மேன் வர..., “சார்..., இன்னைக்காவது இதை யாராவது வாங்குவீங்களா மாட்டீங்களா?” சற்று அலுப்பாகவே கேட்டான்.

அனைவரும் அவர்கள் வேலையை பார்த்துக் கொண்டிருக்க, இன்றைக்கு அதை தானே வாங்கிவிடுவதாக முடிவெடுத்தவள், தன் பேகை எடுத்து, ரூபாயை எடுக்க முயல, ஃபயிலின் மறைவில் சட்டென அவள் கையைப் பிடித்து தடுத்தவன், “நோ...” அடிக்குரலில் அழுத்தி உரைத்தவன், கைகளை விலக்கிக் கொண்டான்.

‘ஏன்...?’ அவனிடம் பார்வையில் கேட்டவள், அவன் தன் கைகளைப் பிடித்ததில் ஸ்தம்பித்து போனாள்.

“ஓகே..., நான் கிளம்பறேன்...” தான் வந்த வேலை முடிந்தது என கிளம்பிவிட, அவளுக்கோ..., ப்ரதீப் அவனைத் தேடியதை சொல்வதா வேண்டாமா என்ற குழப்பத்தில் அப்படியே அமர்ந்து விட்டாள்.

அதுவும் ஒருசில நிமிடங்களே..., அதற்குள்ளாக ஷீபா அழைக்கவே..., வேலையில் மூழ்கிப் போனாள்.

மாலையில் ப்ரதீப்பை அழைக்கச் செல்ல, அவன் கைகளில் புதிய டிரெயின் இருப்பதைப் பார்த்தவள், “இது ஏது ப்ரதீப்? ஸ்கூலில் உள்ளது என்றால் வைத்துவிட்டு வா..., அதான்

வீட்ல உனக்கு நிறைய இருக்கே...” அவன் கைகளில் இருந்து அதை வாங்கினாள்.

“ம்..., இல்ல..., இது அர்ஜூன் வாங்கிக் கொடுத்தாங்க..., நாங்க இன்னைக்கு வெளியே போயிருந்தோமே..., ஐஸ்கிரீம் சாப்ட்டோம்..., பிறகு..., ஒரு பாட்டி கூட என்கிட்டே பேசினாங்க..., அது அவங்க அம்மாவாம்..., அவங்க நம்ம பாட்டி மாதிரி இல்லை..., ரொம்ப நல்லவங்க...” அன்றைய நிகழ்வை தாயிடம் உரைத்துவிடும் வேகம் அவனிடம் இருந்தது.

‘அப்படியென்றால்..., அவனது அம்மாவுக்கும் தெரியுமா?’ உள்ளுக்குள் பெரும் படபடப்பு.

அன்றைய நிகழ்வுக்குப் பிறகு அவளிடம் அதைப்பற்றி பேசவில்லை என்றாலும், அவனது நடவடிக்கைகள் அனைத்தும், அதை அத்தோடு விட்டுவிடப் போவதில்லை என்பதை உரைக்க, தலையை வலிப்பதுபோல் இருந்தது.

பிரியாவிடம் சொல்லிவிட்டு, அவனை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வர, வீட்டின் உரிமையாளர் அங்கே இருப்பதைப் பார்த்தாள்.

‘இவர் எங்கே இந்த நேரம்...? வாடகை பணம் கொடுக்கவும் நாள் இருக்கிறதே...’ எண்ணியவள், “ஐயா..., வாங்க...” வீட்டைத் திறந்து உள்ளே அழைத்தாள்.

வீட்டுக்குள் வந்தவரிடம் நீரைக் கொடுக்க, அதை மறுக்காமல் அருந்தியவர், “அம்மாடி..., இன்னைக்கு உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயத்தை பேசணும்னுதான் வந்திருக்கேன்.” சற்று இடைவெளி விட்டவர்,

“அது என்னன்னா..., இந்த வீட்டை விக்கப் போறேன்..., விலையெல்லாம் பேசிட்டேன்...” மின்னாமல் சிதறாமல், அவள் தலையில் இடியை இறக்கினார்.

“என்னய்யா திடீர்ன்னு...” இதேபோல் பாதுகாப்பான வீடு அமைவது அவளுக்கு அவ்வளவு சுலபமாகத் தோன்றவில்லை.

“நீ ஒண்ணும் பதறாதம்மா..., இந்த வீட்டை வாங்குறவங்க நீ தொடர்ந்து இங்கேயே இருக்கலாம்னு சொல்லிட்டாங்க. அவங்களும் பையனும் மட்டும்தான். பையனும் உங்க ஆபீஸ்ல தான் வேலை பாக்குறதா சொன்னாங்க. பேர் கூட...” நெற்றியைத் தடவி யோசித்தவருக்கு பெயர் ஞாபகம் வரவில்லை.

அதே நேரம்..., வாயிலில் பைக் வந்து நிற்கும் ஓசை கேட்கவே..., “ஐ..., அர்ஜூன்...” ப்ரதீப் உரக்கக் கத்தியவாறு வெளியே ஓடினான்.

“அடடே..., குழந்தைக்கே அவரைத் தெரியும் போலவே...” இருக்கையில் இருந்து எழுந்தவர், குழந்தையை கைகளில் ஏந்தியவாறு வந்த அர்ஜூனைப் பார்த்து சிநேகமாக புன்னகைத்தார்.

“வாங்க தம்பி..., இப்போதான் உங்களுக்கு வீட்டை விக்கிறதைப் பத்தி பேசிட்டே இருந்தேன் நீங்களே வந்துட்டீங்க. விஷயத்தை நான் சொல்லிட்டேன். மேற்கொண்டு உங்களுக்கு என்ன சொல்லணுமோ சொல்லுங்க...” ஒதுங்கிக் கொண்டார்.

“பெருசா எதுவும் இல்லை சார். மேலே இருக்கும் அந்த ரூமை மட்டும் ஒழிச்சுட்டீங்கன்னா..., நானும் அம்மாவும் இங்கேயே வந்துடுவோம்..., அம்மா அடுத்த வாரம் வராங்க..., அதே மாதிரி..., உங்க திங்க்ஸ் எல்லாம் நீங்க எடுக்கறதா இருந்தாலும் ஓகே..., இல்ல..., மொத்தமா ரேட் பேசி முடிக்கறதா இருந்தாலும் எனக்கு சம்மதம்...” அவர்கள் பேசப் பேச, ஏதோ புரியாத பாஷை பேசுவதுபோல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“இதையெல்லாம் எடுத்துட்டு போய் நான் என்னப்பா பண்ணப்போறேன். நீயே பாத்து ஏதாவது செய்...,

நாளைக்கு ரிஜிஸ்ட்ரேஷன் கன்பாம் தானே..., அப்போ நான் கிளம்பறேன். நீங்க ஏதாவது பேசிக்கிறதா இருந்தா பேசுங்க...” குழந்தையின் ஒட்டுதலைப் பார்த்து, அவருக்கு சிறு சந்தேகம் எழுந்தது.

அவர் விடைபெற்றுச் செல்லவே..., காவியா என்ற ஒருத்தி அங்கே இல்லாதது போலவே..., அர்ஜூனும், ப்ரதீப்பும் நடந்து கொண்டார்கள். அவர்கள் நெருக்கம் கண்டு, காவியாவுக்கு சற்று பயமாகக் கூட இருந்தது.

தன் மகன் தன்னைவிட்டு போய்விடுவானோ என்ற பயம்..., அவனை தன்னிடமிருந்து பிரித்துவிடுவானோ என்ற பயம். கண்களில் பொங்கும் கண்ணீரை மறைக்க, சட்டென கிச்சனுக்குள் நுழைந்து கொண்டாள்.

அவளிடம் ஒரு கண்ணை வைத்திருந்த அர்ஜூன்..., “ப்ரதீப்..., இந்த ட்ராக் எல்லாம் செட் பண்ணு..., நான் இப்போ வரேன்...” அவன் கவனம் தங்கள் பக்கம் திரும்பாதவாறு செய்துவிட்டு அவளைத் தேடிச் சென்றான்.

“ம்கும்...” கிச்சன் வாசலில் நின்று தொண்டையைக் கனைக்க,

சட்டென அவனைத் திரும்பிப் பார்த்தவள், “என்னை கார்னர் பண்றீங்களா?” கோபமும் ஆற்றாமையும் கலந்து வெடித்தாள்.

நிதானமாக அவளைப் பார்த்தவன், “இல்லன்னு சொல்ல மாட்டேன்...” அதே நிதானத்தில் உரைக்க, அதிர்ந்துபோய் அவனைப் பார்த்தாள் காவியா.

***

# பகுதி – 13

அடுத்த ஒரு வாரம் உருண்டதே தெரியவில்லை. அர்ஜூனின் தாய் அவளது வீட்டு மாடியிலேயே குடிவந்திருக்க, அர்ஜூனும் அங்கேயே வந்துவிட்டான். தினமும் காலையில் எழுந்தவுடன், ப்ரதீப் மாடிக்குச் சென்றான் என்றால்..., காவியா வருந்தி அழைத்தால் தவிர வருவதில்லை.

காலையில் ப்ரதீப்பை அவள் ப்ளேஸ்கூலில் விட்டால்..., மாலையில் மூன்று மணிக்கே அவனை அழைத்து வரத் துவங்கிவிட்டார் கலையரசி. அவர்கள் அன்பை ஏற்கவும் முடியாமல், தவிர்க்கவும் முடியாமல் திண்டாடிப் போனாள்.

‘இன்னும் ஒரு வாரம்தான் உனக்கு டைம்...’ காலையில் அர்ஜூன் உரைத்துவிட்டுச் சென்றிருக்க..., கட்டாயப்படுத்தி ஏற்படும் பந்தமா இது? குழம்பிப் போனாள்.

தன் தாயிடம் நிலைமையை விளக்கக் கூட அவளால் முடியவில்லை. அவளால் நினைக்கக் கூட முடியாத விஷயத்தை அவரிடம் என்னவென்று விளக்க?

இறுதி முயற்சியாக தன் மனதில் இருப்பவற்றை அர்ஜூனிடம் பேசிவிட வேண்டி காத்திருந்தாள். இரவு எட்டு மணிக்கு வீட்டின் முன்னால் அவன் வண்டியை நிறுத்த, வீட்டுக்குள் இருந்து வெளியே வந்தவள், தயக்கமாய் அவனை ஏறிட்டாள்.

வழக்கமாக தான் வரும் வேளையில் வாசல் கதவை சாற்றி வைத்திருப்பவள், இன்று வெளியே வரவே..., அவள் தன்னிடம் பேச விரும்புவதை புரிந்து கொண்டான்.

“சொல்லு காவியா...?” வண்டியை சைட் ஸ்டான்ட் போட்டவன், அதில் சாய்ந்து நின்றுகொண்டான்.

‘வெளியே நின்று எப்படி பேசுவதாம்...?’ எண்ணியவள்..., “பேசணும்...” போட்டிருந்த சுடிதார் துப்பட்டாவை கைகளால் விரலில் சுற்றி விடுவித்தவாறு உரைத்தாள்.

அதென்னவோ..., அவர்கள் அங்கே வருவதற்கு முன்பு வரைக்கும் வீட்டில் நைட்டி அணிந்திருந்தவள், அவர்கள் வந்த பிறகு, இரவு மட்டுமே அதை அணிந்தாள். அர்ஜூனின் முன்னால் நைட்டியில் இருப்பது அவளுக்கு என்னவோபோல் இருக்கவே அவ்வாறு செய்தாள்.

அலுவலகத்துக்கு அவள் புடவையில் வருவதால்..., சுடிதாரில், கல்லூரி மாணவிபோல் இருந்த அவளை வருடியது அவன் பார்வை. அதில் சிறு ஆர்வமும், ரசனையும் தென்பட, பேச வந்ததே அவளுக்கு மறந்து போனது.

அலுவலகத்தில் அவளைக் காண்கையில் கண்ணியமாக நோக்கும் அவனது கண்கள், வீட்டில் பார்க்கையில் ரசனைக்குச் செல்வதை அவளும் உணர்ந்தே இருந்தாள். ‘அப்படிப் பார்க்காதே...’ என சொல்ல மனம் துடித்தாலும், மனதை படபடக்கச் செய்யும் அவன் பார்வைக்கு முன்னால், அவளால் கட்டுப்படவே முடிந்தது.

அவள் பேச தடுமாறுவதை உணர்ந்து, “என்ன முடிவு பண்ணியிருக்க...?” டக்கின் செய்த சட்டையை சற்று இலகுவாக்கியவாறு..., அவளையே வெறித்தான்.

சட்டென தன் மாயையில் இருந்து கலைந்தவள், ‘நான் என்ன சொல்ல வருகிறேன் என்றே கேட்காமல், அவன் நிலையிலேயே இருக்கிறானே...’ அவளுக்கு ஆற்றாமையாக வந்தது.

“ப்ளீஸ்...” உள்ளே வா..., என்ற விதத்தில் உரைத்தவள், வீட்டுக்குள் செல்ல, அவளைப் பின்தொடர்ந்தான்.

ஒரு நிமிடம் மௌனத்தில் கழிய, அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டான். அவன் எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தவள், “என்னை இப்படியே விட்டுடுங்களேன்..., நான் என் மகனை வளத்துட்டு..., அவன் நிழலில் இருந்து என் வாழ்க்கையை முடிச்சுக்கறேன். இன்னொரு கல்யாணம், வாழ்க்கை..., புது உறவு..., இப்படி

எதையுமே என்னால் யோசிக்கக் கூட முடியலை...” அவள் துவங்கிய இடத்திலேயே இருந்தாள்.

“உன்னை இப்படியே விட்டுவிடுவதாக இருந்தால், நான் உன்கிட்டே என்னை கல்யாணம் பண்ணிக்க சொல்லி கேட்டே இருக்க மாட்டேனே...” அவன் உரைக்க, தன் தலையை கைகளில் தாங்கிக் கொண்டாள்.

“இப்போ உனக்கு என்னதான் பிரச்சனை..., என்னை பிடிக்கலையா? இல்லையென்றால்..., இவனை நம்பி வாழ்க்கையை எப்படி ஒப்படைப்பது என்ற பயமா? எதுவாக இருந்தாலும் வெளிப்படையாக சொல்...” அவளை பேச வைக்க முயன்றான்.

“காதலித்து மணந்த திருமணமே..., ஒன்றும் இல்லாமல் போய்டுச்சு, இதில்...? ம்ச்..., அது எதுக்கு இப்போ..., உங்களுக்கு ப்ரதீப் தானே முக்கியம். அவனைப் பார்ப்பதையோ..., பேசுவதையோ நான் தடை செய்யவே இல்லை. இப்படியே...” தன் இடக்கையை உயர்த்தி, போதும் என அவன் உரைக்க, வார்த்தைகளை நிறுத்திக் கொண்டாள்.

“எனக்கு இது மட்டும் போதாது..., எனக்கும் குடும்பம், மனைவி, குழந்தை, இப்படி குடும்பமா இருக்கணும்னு ஆசை இருக்காதா? நான் ஒண்ணும் முனிவன் கிடையாது...” அழுத்தமாக உரைக்க,

“இதுதான்..., உங்களோட ஆசை, கனவு, எதிர்பார்ப்பு..., இப்படி எதையும் என்னால் நிறைவேற்ற முடியாது. அந்த நம்பிக்கையும் எனக்கு இல்லை. ஒவ்வொரு நாளும் நமக்குள் பிரச்சனை வர அதுவே காரணமாகிட்டா..., இதற்குமேல் எந்த கஷ்டத்தையும் தாங்க என் மனசில் தெம்பில்லை...” முகத்தை மூடிக்கொண்டு விசும்பினாள்.

“ஹா..., ஹா..., ஹா..., திடுமென அவன் சிரிக்கவே..., இவன் என்ன லூசா என அவனை ஏறிட்டாள்.

அவள் பார்வையை உணர்ந்து, தன் சிரிப்பை நிறுத்தியவன், “யாரோ எதைபத்தியும் யோசிக்கவே இல்லன்னு சொன்னாங்க. இப்போ என்னன்னா..., இவ்வளவு தூரம் யோசித்து இருக்காங்களேன்னு நினைச்சு சிரிச்சேன்...” தன் சிரிப்புக்கு விளக்கம் கொடுக்க, வேகமாக தன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

“எனக்கு இது போதும். இனிமேல் நீ எதுவும் யோசிக்க வேண்டாம்..., எல்லாத்தையும் நானும், என் அம்மாவும் பாத்துக்கறோம்..., வர முகூர்த்தத்தில் நம்ம கல்யாணம் நிச்சயம் நடக்கும்...” இருக்கையில் இருந்து எழுந்தான்.

‘இதென்ன..., எப்பொழுதும் எதையும் முழுதாக பேசாமல் விலகிப் போவது...?’ எண்ணியவள்,

“இல்ல..., என்னால்..., என் அம்மா கிட்டே கூட இதைப்பற்றி பேச முடியாது...” அவனை தடுக்கும் வேகம் அவளிடம்.

“இவ்வளவு கான்பிடண்டா பேசுறவன்..., இதை யோசித்திருக்க மாட்டேனா? உனக்கு சந்தேகம் என்றால்..., உன் அண்ணனுக்கு போன் பண்ணி பேசிப்பார்...” நின்ற இடத்திலேயே திரும்பினான்.

“அண்ணா...?” அவள் அதிர்ந்து விழிக்க,

“ஆமா..., உன் அண்ணன்தான்..., உன் அண்ணன் தானே உன்னை TNPSC எக்ஸாம் எழுதச் சொன்னான்..., அவனுக்கு எப்படித் தெரியுமாம்? நீ ஒர்க் பிளேஸ் செலக்ட் செய்தப்போ..., யாராவது உன்னை போக வேண்டாம்னு தடுத்தாங்களா...? இல்லை தானே..., அப்போ ஏன்னு நீ யோசிக்கவே மாட்டியா...?” அடுக்கடுக்கான அவன் கேள்விகளுக்கு பதில் சொல்ல வழியின்றி திகைத்திருந்தாள்.

“உன் அம்மாவுக்கும் உன்மேல் அக்கறையும், பாசமும் அதிகம் இருந்ததுதான். ஆனா..., எப்போ ப்ரதீப்பை பற்றிய

சந்தேகத்தை உன் மாமியார் அவங்க மனசில் விதைத்தாங்களோ..., அதுக்குப் பிறகுதான் அவங்க மாறிப் போய்ட்டாங்க.

“அவங்க சின்னப்பொண்ணு வாழ்க்கை அவங்களுக்கு பெருசா தெரியத் துவங்கி விட்டது. ஆனா..., நிச்சயம் உனக்கு ஒரு வாழ்க்கை அமைவதை அவங்க வரவேற்கவே செய்வாங்க...

“வாழ்க்கையின் ஒரு பாதி கஷ்டமா இருந்தால், மறு பாதி சந்தோஷமாகத்தான் அமையும். அப்படி ஒரு சந்தோஷத்தை உனக்கு கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். தேவையில்லாமல் எதையும் யோசித்து குழப்பிக் கொள்ளாதே..., புரியுதா?” அவன் கேட்க, அவன் சொல்வதை நம்ப முடியாமல் பார்த்திருந்தாள்.

“உங்களுக்கு பாஸ்கரைத் தெரியுமா...?” அவள் மனதில் இத்தனை நாளாக அரித்துக் கொண்டிருந்த வினா..., அவனிடம் விடை தேட முயன்றாள்.

“நான் அன்னைக்கே சொல்லிட்டேன்..., உன் கேள்விகள் அனைத்திற்கும் என்னிடம் விடை இருக்கிறது. ஆனா..., அதை நீ உரிமையாய் கேட்காமல் நான் உனக்கு சொல்ல மாட்டேன்...” அங்கிருந்து சென்று விட்டான்.

அவன் சென்று எவ்வளவு நேரமானதோ அவளுக்குத் தெரியாது. ஆனால்..., அவளது அலைபேசி அதன் இருப்பை உணர்த்தி அவளைக் கலைக்க, வேகமாகச் சென்று அதை எடுத்தாள்.

“அண்ணே...” அழைக்கும் முன்பே குரல் தளுதளுத்தது.

“காவியா..., என்னம்மா இது...? சந்தோஷமா இருக்க வேண்டிய நேரத்தில் அழுதுட்டா இருக்க?” அக்கறையாக ஒலித்தது அவன் குரல்.

அவள் மௌனத்தையே பதிலாக்க, “அர்ஜூன் போன் செய்து விஷயத்தை சொன்னார்..., இங்கே ஏற்கனவே

அம்மாகிட்டே பேசிட்டேன். அவங்களுக்கு நீ நல்லா இருப்பதை தவிர வேற என்ன வேணும்...? ஒரு அண்ணனா நான் உனக்கு எதையும் செய்தது இல்லை.

“ஆனா..., அந்த கடவுளாகப் பார்த்துதான் அர்ஜூனை அனுப்பி இருக்கிறார். நீ அழுதது எல்லாம் போதும் காவியா. அவரை கல்யாணம் பண்ணிக்கோ..., எல்லாம் நல்லபடியா நடக்கும். அர்ஜூன் உன்னை நல்லா பாத்துப்பார், எனக்கு நூறு சதவீதம் நம்பிக்கை இருக்கு.

“நான் இதை உன்கிட்டே முன்னாடியே சொல்லி இருக்கணும். ஆனா..., அர்ஜூன்தான், அவரே பக்குவமா பேசிக்கிறதா சொன்னார். அதனால்தான் இத்தனைநாள் பேசாமல் இருந்தோம். அதைவிட, அவர் அங்கே இருப்பதால்தான் நாங்க இங்கே நிம்மதியா இருந்தோம்னே சொல்லலாம்.

“அவரை விட, அவங்க அம்மா ரொம்ப நல்லவங்க. நம்ம அம்மாவை விட ஒரு படி மேலாகவே உன்னை அவங்க பாத்துப்பாங்க. உன்னையும் குழந்தையும் பாக்கதுக்காகவே..., அவங்க வேலையை எல்லாம் விட்டுட்டு அங்கே வந்து இருக்காங்கன்னா பாத்துக்கோ.

“வாழ்க்கையை அதன் போக்கில் வாழப் பழகிக்கணும் காவியா. நடந்ததையே நினைச்சுட்டு இருந்தால் எந்த பலனும் இல்லை. இன்னும் ரெண்டு நாளில் நாங்க எல்லாம் கிளம்பி வரோம்...” மேலும் அவளிடம் சற்றுநேரம் உரையாடிவிட்டு, தாயிடம் அலைபேசியை கொடுத்தான்.

“அம்மாடி..., எப்படிம்மா இருக்க? ப்ரதீப் நல்லா இருக்கானா? குழந்தை கண்ணுக்குள்ளேயே இருக்கான்...” பாசமாக ஒலித்தது அவர் குரல்.

“ம்..., நல்லா இருக்கறோம்மா...”.

“இந்த அம்மாவை மன்னிச்சுடும்மா..., யார் என்ன சொல்லியிருந்தாலும் என் பொண்ணை நான் அப்படி பேசியிருக்க கூடாது. உன்கிட்டே அப்படி பேசிட்டோமே

என்பதாலேயே..., அதுக்குப் பிறகு உன்கிட்டே முகம் கொடுத்து பேச முடியலை.

“எங்கே இருந்தாலும் நீ நல்லா இருக்கணும். இந்த அம்மாவுக்கு அதைவிட வேற எதுவும் வேண்டாம். உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைவதை பாக்காமல் நான் போய்ட்டா..., இந்த கட்டை வேகாது காவியா...,

“நான் சம்பந்தியம்மா கிட்டே பேசினேன்..., அடுத்த வாரமே கல்யாணத்தை வச்சுக்கலாம்னு சொல்றாங்க. உனக்கு சம்மதம் தானே...” மகள் மனம் என்ன சிந்திக்கும் என அவருக்குத் தெரியாதா என்ன?

“எனக்கு எதுவுமே புரியலம்மா...? நடக்குறது நல்லதுக்கா கேட்டதுக்கா? எதுவுமே தெரியலை. ஒரு சூடு பட்ட காயமே இன்னும் ஆறலை..., இதில் இன்னொண்ணா..., மனசு பதறுதும்மா...” தாய் மனம் திறக்கவே, அவளும் கொட்டிவிட்டாள்.

“அப்படி பேசாதே காவியா..., அர்ஜூன் ரொம்ப நல்லவன். உன்னை நல்லா பாத்துப்பான். நாங்க வந்து பேசறோம்...” அலைபேசியை வைத்து விட்டார்.

அவர்கள் வந்து..., பெற்றவளிடமும், உடன் பிறந்தவனிடமும் போராடி, இறுதியில் அவளுக்கு வேறு வழியே இல்லாமல் திருமணத்துக்கு சம்மதித்தாள்.

வேணியிடம் அர்ஜூனின் தாய் உரையாட..., அந்த நேரத்திலும், ப்ரதீப்பை பற்றி தாறுமாறாக உரைத்தவர், காவியாவுக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என உரைத்துவிட்டு தலை முழுகி விட்டார்.

அதன் பிறகு வேகமாக நிகழ்வுகள் நடந்தேறின. அன்று காலையில் அங்கே இருந்த முருகன் கோவிலில் வைத்து திருமணம் நடந்தேற, தன் கழுத்தில் தொங்கிய தாலியை ஏற்கவும் முடியாமல், விலக்கவும் முடியாமல் திகைப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள் காவியா.

***

## பகுதி – 14

அதிகாலையிலேயே அவர்கள் திருமணம் நடந்தேற, சிறிய அளவில் சடங்குகளை நடத்தியவர்கள், அவன் வீட்டுக்குச் சென்று, விளக்கேற்றி, பால் பழம் அருந்தி முடிக்கும் வரைக்கும் காவியா இயந்திரகதியில் இருந்தாள்.

“ஹையா..., அர்ஜூன் எனக்கு டேடி..., எனக்கும் டேடி வந்தாச்சு. என்னை தினமும் பைக்ல கூட்டி போவீங்களா? கடைக்கு போகலாமா? ஐஸ்கிரீம் சாப்பிடலாமா...? ப்ரதீப்பின் உற்சாகம் மட்டுமே அங்கே ஒலித்துக் கொண்டிருந்தது.

உறவினர்கள் யாரையும் அழைக்கவில்லை என்பதால் யாரும் வந்திருக்கவில்லை. வேலை இடத்தில் மட்டும் அர்ஜூன் தகவல் சொல்லியிருந்தான். ஷீபா அவர்களுக்கு காலையிலேயே அலைபேசியில் அழைத்து வாழ்த்து தெரிவித்தார்.

காலை உணவு வேளை முடிய..., “இன்னைக்கு ஆபீஸ் போகணுமா காவியா?” அர்ஜூனின் தாய் கேட்க, ‘இதற்கு என்ன பதில் சொல்வது...?’ அவள் பார்வை தவிப்பாய் அர்ஜூனை ஏறிட்டது.

“என்னை ஏன் பாக்கற...? பதில் சொல்லு...” அவன் கண்களில் இருந்த நம்பிக்கை, அவளுக்கு தைரியமளிக்க,

“அத்த..., எனக்கு லீவ் இருக்குதான்..., ஆனா..., உடனேன்னா...” மென்று முழுங்கினாள்.

“அதனால் என்னம்மா..., மதியம் உனக்கு லஞ்ச் எடுத்துட்டு போகணுமே, அதான் கேட்டேன்..., சரி..., நீங்க கொஞ்சநேரம் பேசிட்டு இருங்க..., நான் லஞ்ச் சமைக்கறேன்...” அவர் கிச்சனுக்குள் நுழைய, காவியாவும் எழுந்து செல்லப் போனாள்.

அவளைத் தடுத்த அவளது தாய்..., “நாங்க பாத்துக்கறோம்..., நீ இரு...” அவரும் சென்றார்.

அங்கிருந்த சோபாவில், முள்ளின்மேல் அமர்ந்திருக்கும் உணர்வில் இருந்தவள், தன் அருகில் எந்தவித தயக்கமும் இல்லாமல் மகனோடு விளையாடிக் கொண்டிருந்த அவனை ஓர விழியில் நோக்கினாள்.

‘எப்படி இவனால் இப்படி இருக்க முடிகிறது...?’ அவளால் யோசிக்காமல் இருக்க முடியவில்லை.

காவியாவின் மனதுக்குள் பெரும் சூறாவழியே சுழற்றி அடித்துக் கொண்டிருந்தது. ‘இனிமேல் என்ன ஆகும்...? இந்த வாழ்க்கையை என்னால் முழு மனதோடு ஏற்றுக்கொள்ள முடியுமா...? இவர் எப்படி நடந்து கொள்வார்...? பழைய விஷயங்களை கிளறுவாரா...?’ அடிமனதுக்குள் திகில்.

அதையெல்லாம் விட, அன்றைய இரவை நினைத்தாலே..., திக்கென அதிரும் மனதை அடக்க முடியாமல் சோர்ந்து போனாள். வியர்வை வழிய..., அதை நாசூக்காக துடைத்துக் கொண்டாள்.

அரைமணிநேரம் கடந்த பிறகும், இருவரும் ஒரு வார்த்தை பேசிக் கொள்ளவில்லை.

“ப்ரதீப்..., பாட்டிக்கு கிச்சன்ல ஏதோ ஹெல்ப் வேணுமாம்..., என்னன்னு கேள்...” அவனை அனுப்பியவன், அவள்பக்கம் திரும்பினான்.

“காவியா..., ரெண்டு நாள் நான் இங்கே இருக்க மாட்டேன். பக்கத்து வில்லேஜ்ல அறுவடை நடக்குது. அதை எக்ஸாமின் பண்ணி, ரிப்போர்ட் கொடுக்கணும். சோ..., மனசுக்குள் எதையும் போட்டு குழப்பிக்காம எப்பவும் போல இரு ஓகே...” அவள் மனம் புரிந்து உரைத்தான்.

மனதுக்குள் ஒரு சிறு நிம்மதி படர்ந்தாலும், அவன் இருக்கமாட்டேன் எனச் சொன்னது கஷ்டமாகத்தான்

இருந்தது.

அவன் வேலையைப் பற்றி முழுதாக அவளுக்குத் தெரியுமாகையால்..., அதை திட்டம்போட்டு செய்தது என அவளால் எண்ண முடியவில்லை. அவன் சொன்னதை அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

மெல்லிய பார்டர் பட்டில்..., தலை நிறைய மல்லிகைப்பூ சூடி..., பதுமையென தன் அருகில் அமர்ந்திருந்தவளை தயக்கமே இல்லாமல் அவன் கண்கள் மொய்த்தது.

அதை உணர்ந்துகொண்டவள்..., மறந்தும் அவனை ஏறிட்டு பார்க்கவில்லை. உரிமை இல்லாதபொழுதே அவன் கண்கள் அவளை ஊடுருவும்..., இப்பொழுது கேட்கவா வேண்டும்.

“காவியா..., உன்கிட்டே ஒண்ணு சொல்லவா...?” அவன் சீரியசாக கேட்க, ‘பாஸ்கர் பற்றியோ...’ அவள் மனம் படபடத்தது.

ஆனால்..., அவள் எண்ணத்துக்கு மாறாக..., “உன்கிட்டே எனக்கு முதலில் பிடித்த விஷயமே உன் முடித்தான்..., இவ்வளவு அடர்த்தியா..., அளவான நீளத்தில்..., சில வேளை ஒட்டு முடியோன்னு சந்தேகப் பட்டிருக்கிறேன் தெரியுமா...?

“ஆனா..., இப்போதான் தெரியுது..., இது நிஜ முடிதான்னு..., ஷெல் ஐ...” கேட்டவன், அவள் முதுகின் பின்னால், பின்னலில் அடங்கியிருந்த கூந்தலை மெதுவாக பற்றினான்.

தேகம் மொத்தமும் பதற..., யாராவது வந்தால்..., என்ன நினைப்பார்கள்...?’ தவிப்பாய் அவனை ஏறிட்டாள்.

அவனோ..., அவனது பெருவிரலுக்கும், நடு விரலுக்கும் சேர்ந்த தடிமனில், அடர்த்தியாக இருந்த கூந்தலை மெதுவாக வருடினான்.

“வாவ்…, ரொம்ப நல்லா இருக்கு. இதுக்குன்னு ஸ்பெஷலா ஏதாவது செய்வியா என்ன…?” அவன் நிஜமான ஆச்சரியத்தோடு வினவ, அவன் இதைப்பற்றி பேசுவான் என கொஞ்சமும் எதிர்பார்த்திராத காவியா, திகைத்துப்போய் அவனைப் பார்த்தாள்.

முதன் முதலில் மனைவியிடம் உரிமையில் உரையாடுபவன் இதைபற்றியா கேட்பான்…, ஒரு வேளை நடிக்கிறானோ…?’ அவளால் யூகிக்க முடியவில்லை. ஆனால்…, அவனது பார்வையும், செய்கையும், அவன் உண்மையைத்தான் சொல்கிறான் என உணர்த்த, என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் மௌனமானாள்.

அவன் கரங்கள் என்னவோ கூந்தலைத்தான் வருடியது. ஆனால்…, அவளுக்கென்னவோ தன்னையே தீண்டியது போன்ற சிலிர்ப்பும், படபடப்பும் ஓட, சட்டென அவன் அருகில் இருந்து எழுந்துவிட்டாள். ஒரு காலத்தில், தன் கணவன் வாயிலிருந்து ஒரு சிறு சிலாகிப்பாவது வராதா என ஏங்கியிருக்கிறாள்.

ஆனால் இன்று…, எதிர்பாராத நேரத்தில்…, எதிர்பாராத ஆளிடமிருந்து வந்த பாராட்டு அவளை மெல்லியதாக படபடக்கச் செய்தது.

அவள் அவ்வாறு செய்யவே…, “சாரி…, உன்னை சங்கடப்படுத்தணும்னு செய்யலை. உன்னை பார்த்த அன்னைக்கே என்னை கவர்ந்தது உன்னோட கூந்தல்தான்…, அதான்…, உன்னை டிஸ்டப் பண்ணியிருந்தால் ரியலி சாரி…” இரு கரங்களையும் சரண்டர் என உயர்த்த, அவன் மன்னிப்பு வேண்டலிலும், பாவனையிலும் சற்று இயல்பானாள்.

“ஏதாவது பேசு…” அவள் கை பிடித்து அமர வைத்தவன், அவளிடம் கேட்டான்.

‘எனக்கும் உங்கள் பெயர் பிடிக்கும்…’ சொல்ல நினைத்த வார்த்தைகள் தொண்டைக்குழிக்குள் சதிராட, “நான்

சமையல் ரெடியான்னு பாக்கவா…?” அங்கிருந்து போகச்சொல்லி அவள் கால்கள் பரபரப்பதை தடுக்க முடியாமல் கேட்டாள்.

“இப்போதான் கல்யாணம் ஆச்சு…, அதுக்குள்ளே ஒருத்தன் ஊருக்கு போறான்னு சொல்றானே…, வருத்தப்பட வேண்டாம்…, அட்லீஸ்ட்…, எப்போ கிளம்பறீங்க? எப்போ வருவீங்க…? ஏதாவது எடுத்து வைக்கணுமா? இப்படி எதுவும் கேக்காமல்…,

“ஒரு வேளை சமையல் செய்ய, ஏற்கனவே மூணு பொம்பளைங்க கிச்சனுக்குள் இருக்காங்க…, இதில் அவங்களுக்கு ஹெல்ப் பண்ண போறியா? உனக்கே இது நியாயமா இருக்கா…?” அப்பாவியாக முகத்தை வைத்துக்கொண்டு அவன் கேட்க, முதல் முறையாக அவள் இதழ்களில் மெல்லிய புன்னகை அரும்பியது.

“ஹப்பா…, இப்போவாவது சிரிச்சியே…, இவ்வளவு நேரமும் உன் முகத்தைப் பாத்துட்டு, எனக்கே நான் நல்லவனா கெட்டவனான்னு ஒரே பீலிங்…” அவன் நமுட்டு சிரிப்பில் உரைக்க, இப்பொழுது ஒரு அழகான புன்னகை அவளிடம் உதையமானது.

“யூ ஆர் லுக்கிங் கார்ஜியஸ்…” அவள் சிரிப்பில் மூழ்கி அவன் உரைக்க, போலியாக சிணுங்கியது அவள் மனம்.

“ஓகே…, நீ போ…, உன்னை ரொம்ப கஷ்டப்படுத்த விரும்பலை…” இப்பொழுது அவன் அனுமதி வழங்கினாலும், அவள் கால்கள் செல்ல மறுத்தது.

அவள் செல்லாமல் நிற்கவே…, “ஹேய்…, நான் சும்மாதான் சொன்னேன். ஜஸ்ட் ஒரு செட் ட்ரஸ் எடுத்து வைக்க எனக்கு எவ்வளவு நேரமாகப் போகுது? நான் பாத்துக்கறேன்…, யூ கேரியான்…, ஆபீஸ் பேக் எல்லாம் எங்கேன்னு பார்…, வண்டி கீ…, லஞ்ச் பேக்…, எல்லாம் எடு…, போ…” அவளை அனுப்பினான்.

அவள் அலுவலகம் கிளம்பவே..., “அர்ஜூன்..., காவியாவை ஆபீஸ்ல டிராப் பண்றியா...? இல்ல...” அரசி கேட்க,

“இல்லமா..., இப்போ நான் டிராப் பண்ணாலும், ஈவினிங் அவ வர கஷ்டமாயிடும்..., சோ..., அவ அவளோட வண்டியில் போறதுதான் பெட்டர்...” அவன் முடித்துவிட, அதற்குமேல் அங்கே யாரும் பேசவில்லை.

அவர்கள் வெளியே செல்லவே..., பெரியவர்கள் இங்கிதம் கருதி வீட்டுக்குள்ளேயே தேங்கினார்கள். வாசல்வரை வந்து, அவள் வண்டியை எடுத்து விட்டவன், “ஹேவ் எ நைஸ் டே..., எப்பவும் போல இரு..., ஆனா..., என்ன நடந்தாலும், உனக்கு ஒரு துணையா நான் இருக்கிறேன் என்பதை மட்டும் மறக்காதே.

“எதுன்னாலும் கால் பண்ணு. ஈவினிங் நான் இருக்க மாட்டேன்..., சோ..., இப்போவே சொல்லிடறேன்...” வண்டியை ஸ்டான்ட் போட்டு நிறுத்தினான்.

“பாய்ம்மா..., நான் பாட்டிகிட்டே போறேன்..., டாட்டா...” வீட்டுக்குள் இருந்து ஓடி வந்த ப்ரதீப் உரைத்துவிட்டுச் செல்ல, சில வருடங்களுக்குப் பிறகு தான் புதிதாக பிறந்ததுபோல் உணர்ந்தாள்.

***

# பகுதி – 15

அலுவலகத்தில் நுழைகையிலேயே ஒரு பெரும் தயக்கம்…, முதல்நாள் அலுவலகம் வந்தபொழுது கூட இவ்வளவு பதட்டத்தை அவள் உணரவில்லை. இனிமேல் இதுவே தனது பற்றுகோல்…, தன் எதிர்காலம் என எண்ணியதால், சிறு ஆர்வமாகவே நுழைந்தாள்.

ஆனால் இன்று…, திருமதி அர்ஜூன்…, அனைவரும் தன்னை எப்படி பார்ப்பார்கள்…? மனதுக்குள் சிறு தவிப்பு. லெஜ்ஜரில் சைன் செய்தவள் இருக்கையில் அமர, மனோ தன்னை முறைத்துப் பார்ப்பது போன்ற பிரம்மை.

‘இவ ஏன் இப்படி பாக்கறா…?’ எப்பொழுதுமே அவளுக்கும், மனோவுக்கும் அவ்வளவாக ஒத்துப் போகாதது போன்று இருக்கும். அதனால் அப்படி இருக்கிறதா இருக்கும்…, தன்னையே சமாதானம் செய்தவள், வேலையைத் துவங்கினாள்.

அன்று டிடி சில நேரம் வரலாம் என அலுவலகத்தில் பேசிக்கொள்ள…, தனக்கு அதனால் எதுவும் இல்லை…, என்பதுபோல் வேலையைத் தொடர்ந்தாள்.

அவள் வந்த பிறகு, அவர் இங்கே வருவது இதுவே முதல்முறை என்பதால் நிச்சயம் அவளை கூப்பிட்டு பேசுவார் என்பதில் அவளுக்கு ஐயமில்லை. வேலையில் அவளுக்கிருந்த தெளிவு…, அவர் எதையாவது கேட்டாலும் சம்மாளித்துவிடலாம் என எண்ணினாள்.

நேரம் நொடிகளாக கடக்க…, டிடி வரும் விஷயத்தையும் மீறி, அர்ஜூன் வேலைக்கு கிளம்பியிருப்பானா…? மனம் அதையே சுற்றி வந்தது. அவன் வேலையைப் பொறுத்த வரைக்கும், அவன் இப்படி வெளியே செல்வது ஆச்சரியம் இல்லைதான்.

ஆனால்…, அங்கே இரண்டுநாட்கள் தங்க வேண்டும் என சொன்னதுதான் மனதுக்குள் நெருடியது. அதுவும் ஒரு

அறுபது அல்லது எழுபது கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் ஒரு இடத்துக்குச் சென்றுவர அப்படி ஒன்றும் கஷ்டம் இல்லையே..., ஒரு வேளை..., எனக்காகவா...? செய்த வேலையை தொடர முடியாமல் கைகள் நின்று போனது.

சட்டென ஒரு படபடப்பு..., அவனிடம் கேட்டுவிடும் வேகம்..., கைகள் அலைபேசியை எடுக்க முயல, வெளியே ஜீப் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

டிடி வராங்க..., அட்டெண்டர் உரைத்துச் செல்ல, தன் நினைப்பை கைவிட்டவள், அமைதியானாள்.

அதன் பிறகு அதைப்பற்றி யோசிக்கக் கூட அவளுக்கு நேரம் இருக்கவில்லை. ஒவ்வொரு விஷயமாக ஒவ்வொருவரையும் அழைத்து உரையாடியவர், அவளையும் அழைக்கவே, அவர் அறைக்கு விரைந்தாள்.

அவளைப் பார்த்தவளது பார்வை ஒரு நிமிடம் அவளை அளவிட, “கன்கிராட்ஸ்..., அர்ஜூன் சொல்லியிருந்தார். என்னால் வர முடியலை. அதான்..., இங்கே வந்தே விஷ் பண்ணலாம்னு வந்தேன். கல்யாணமான அன்னைக்கே வேலைக்கு வந்தாச்சு..., ஓகே..., ஐ கேன் அன்டர்ஸ்டேன்ட்...” மெல்லிய புன்னகையில் உரைத்தார்.

“தே...,தேங்கியூ மேடம்...” ஒரு நொடி, அவர் தன் திருமணத்தைப் பற்றி பேசுவார் எனத் தெரியாமல் தடுமாறிப் போனாள்.

அதன் பிறகு, வேலையையைப் பற்றி, அங்கிருக்கும் சூழலைப் பற்றி விவரித்தவர், அவள் வேலையின் தன்மை பற்றி கேட்டறிந்தவர், ஒரு ஃபயிலைப் பற்றி கேட்க, அவளுக்கு அதைப்பற்றி தெரியாமல் சற்று திகைத்தாள்.

அவள் திகைப்பை பார்த்த டிடி..., எஸ்ஓ விடம் என்னவென்று கேட்க, “இல்ல மேம்..., அந்த ஃபயில் இன்னும் அவங்க கைக்கு போகலை. கொரியர் இப்போதான் வந்திருக்கு, வாங்கி சரி பாத்துட்டுதான் கொடுக்கணும்...” டிடியிடம் வேகமாக விளக்கியவர், டிரைவர் அழைத்து ஒரு ஐநூறு

ரூபாய் தாளைக் கொடுத்து, போஸ்ட் ஆபீஸ் போய் அதை கையோடு வாங்கிவரப் பணித்தார்.

பார்த்துக் கொண்டிருந்த காவியாவுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. எத்தனையோ நாளாக அந்த ஃபயிலைப் பற்றி தெரிந்தும், கொரியரைப் பற்றி கவலைப்படாமல் இருந்தவர், டிடியின் முன்னால், சட்டென செய்த செயலில் திகைத்துப் போனாள்.

‘அப்படியென்றால் அதை வாங்குவது இவரது வேலைதானா? அதனால்தான் அன்னைக்கு அர்ஜூன் என்னை தடுத்தாரா?’ அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அன்று அதைப்பற்றி அவனிடம் கேட்டபொழுது கூட, “எந்த ஃபயிலும் உனக்கு நேரடியா வரப் போவதில்லை. உன் மேலே இருக்கும் ஆட்கள் வழியாகத்தான் வரும்..., சோ..., அவங்க சொல்லும் வேலையை மட்டும் நீ பார்த்தால் போதும்...” சுலபமாக சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

அப்பொழுதே அவள் யோசித்தாள்..., என் டேபிளுக்கு வர வேண்டிய பார்சலை யார்தான் வாங்குவதாம் என..., இப்பொழுதுதான் அவளுக்கு விஷயமே புரிந்தது. டிடியிடம் உரையாடிவிட்டு வெளியே வர, அவளது அலைபேசி சிணுங்குவது அவளுக்கு கேட்டது.

டிடி இருக்கும் வேளையில் பேச முடியாமல், அழைப்பது யார் எனப் பார்த்தவளுக்கு, அது அர்ஜூனிடமிருந்து எனப் புரிய, அவனிடம் பேச முடியாத சூழல் கஷ்டமாகத்தான் இருந்தது.

‘பேசாமல் இருந்தால் ஏதாவது நினைத்துக் கொள்வாரோ...?’ ஒரு பக்கம் பயமாக இருந்தாலும், அந்த சூழலில் எதையும் செய்ய முடியாமல் அமைதியானாள்.

அடுத்த இரண்டுமணி நேரங்களில் அவர் கிளம்பிப் போக, தன் அலைபேசியை எடுத்துக்கொண்டு வெளியே விரைந்தாள்.

அவனுக்கு அழைக்கவே..., அவள் அழைப்பை ஏற்றவன்..., “நான் பீல்டுக்கு வந்துட்டேன்..., அதைச் சொல்லத்தான் போன் செய்தேன். வேற எதுவும் இல்லை...” அவள் கேட்கும் முன்பாகவே உரைத்தான்.

“ம்...” அவள் ஆமோதிப்பாக முனக,

“சரி, வேற எதுவும் இல்லை..., வைக்கட்டுமா...?” அவன் அலைபேசியை வைக்கப் போகவே, அப்பொழுதுதான் அவளுக்கு உணர்வே வந்தது.

“டிடி வந்திருந்தாங்க..., அதான் போனை எடுக்கலை...” வேகமாக உரைக்க,

“ஆபீஸ்ல இருந்தால் வேலை இருக்கும்..., மேலதிகாரி சர்ப்ரைஸ் விசிட் வரலாம்..., நீயே அக்கம் பக்கம் போயிருக்கலாம்..., இதையெல்லாம் தெரிஞ்சுக்காமலா இருப்பேன்..., அதெல்லாம் பரவாயில்லை..., எப்படியும் என் நம்பர் பார்த்தால் ப்ரீ ஆன உடனே கால் பண்ணுவியேன்னுதான் கூப்ட்டேன்...” அவனது அனுசரணையான பேச்சு அவளுக்கு பிடித்தது.

தன் சந்தேகத்தை கேட்க மனம் விழைந்தாலும், ஏனோ சட்டென கேட்க முடியாமல் தேங்கினாள். அவள் அமைதியை உணர்ந்தவன், “என்ன..., ஆபீஸ்ல எதுவும் பிரச்சனையா...? டிடி ஏதாவது சொன்னாங்களா என்ன?” அவர் அப்படி கிடையாதே என்ற பாவனை அவன் பேச்சில் தொங்கி நின்றது.

“இல்ல..., அவங்க விஷ் பண்ணாங்க...” அவள் இழுக்க,

“ஓ..., ஏதாவது சங்கடமா பீல் பண்ணியா என்ன...?” அவன் கேட்டு முடிக்கும் முன்னர்,

“ஐயோ..., அப்படியெல்லாம் எதுவும் இல்லை...” பட்டென உரைத்தவள், தான் உரைத்த வேகத்தில் திகைத்து, இதழ் கடித்து வார்த்தையை நிறுத்திக் கொண்டாள்.

“தேங்க்ஸ்...” அவன் ஆழ்ந்த குரலில் உரைக்க, இதற்கு என்ன பதில் சொல்வது? அவளுக்கு ஒரு மாதிரியாகிப் போனது.

“ஓகே கூல்..., பாய்...” அலைபேசியை வைத்து விட்டான்.

அன்று முழுவதுமே மனோ அவளிடம் முகம் கொடுத்து பேசாதது ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. அதற்கான காரணமும் புரியதபொழுது அவள் என்னவென்று நினைப்பதாம்?

அன்றைய அலுவல் சற்று தாமதமானபொழுது கூட, மகனை நினைத்தோ? வீட்டை நினைத்தோ அவள் கவலை கொள்ளாததை நினைத்து அவளுக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது. கூடவே..., அர்ஜூன் இருக்க மாட்டான் என்பதை நினைக்கையில் சிறு வருத்தமாகக் கூட இருந்தது.

தன் மனம் போகும் போக்கை உணர்ந்தவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. காலையில் வரைக்கும் இந்த உறவை எப்படி ஏற்கப் போகிறோம் என அவள் தடுமாறியிருக்க, மாலைக்குள்ளாகவே கணவனைப் பற்றி சிந்திக்கும் தன் போக்கு..., அவளுக்கு வியப்பே.

வண்டியில் போகும்பொழுது..., காலையில் நடந்த பேச்சு..., அவன் பார்வை, கூந்தலைப் பற்றிய அவனது சிலாகிப்பு..., அனைத்தும் நினைவிற்கு வர, தன் முன்னால் கிடந்த பின்னலை மிரர் வழியாகப் பார்த்தவள், சிறு வெட்க புன்னகை உதிர்த்தாள்.

அவனது புரிதல்..., இன்றைய இரவை தான் சங்கடமாக எதிர்கொள்ளக் கூடாது என்ற அவனது கரிசனை. வேலை நேரம் பற்றிய அவனது புரிதல்..., நேற்றுவரை இருந்த பயம் இப்பொழுது இருக்கவில்லை.

கூடவே..., அவனோடான நாட்கள் எப்படி நகரும் என்ற சிறு எதிர்பார்ப்பு..., இன்றைய இரவின் தனிமையில் அவன் என்ன நினைப்பான்? திருமணம் முடிக்கும் ஒரு

ஆண்மகனின் எதிர்பார்ப்பு என்னவாக இருக்கும் என அவளுக்குத் தெரியாததா?

‘என்னை திருமணம் செய்து கொண்டதால் அவருக்கு என்ன சந்தோசம் கிடைக்கும்...?’ அவளுக்குப் புரியவில்லை. இதை எண்ணிய நொடியே..., அவ்வளவு நாளாக..., தன் வாழ்க்கை எப்படி மாறும் என தன்னைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த தான்..., ஒரே நாளில் அவனைப் பற்றி சிந்திக்கத் துவங்கிவிட்டோமே..., என எண்ண..., பெண்மனம் புரிவதாய்...

வீட்டுக்குள் நுழைந்தவளை..., சிரித்த முகமாய் அனைவரும் வரவேற்க, அனைவரையும் தைரியமாக எதிர்கொள்ள அவளுக்குத்தான் முடியவில்லை. அதிலும், அரசியின் முகம் பார்க்கவே அவள் தயங்க, “முகம் கழுவிட்டு காபி குடிக்க வாம்மா...” அவள் சங்கடம் போக்கினார்.

“நானே வந்து போட்டிருப்பேனே அத்தை...” தான் பேசுவதில் இருந்த அபத்தம் புரிய, சங்கடமாக அவரைப் பார்த்து புன்னகைத்தாள். நேரம் ஆறு முப்பதைக் காட்ட, இவ்வளவு நேரமாக அவள் வந்து காபி போடுவாள் என அவர்கள் காத்திருப்பதாமா? மனசாட்சி குரல்கொடுக்க, அவர் கையில் இருந்து காபியை பெற்றுக் கொண்டாள்.

அவள் கண்கள் மகனைத் தேட..., “ப்ரதீப் உன் அண்ணனோட வெளியே போயிருக்கான்...” அவள் தேடலுக்கு விடை கொடுத்தார் அரசி.

காபியை குடித்து முடித்தவள் கிச்சன் சென்று பார்க்க, அனைத்தும் துப்புரவாக இருப்பதைப் பார்த்தவளுக்கு, ‘இவர்களுக்கு நான் என்ன செய்தேன்...? என்னை எப்படி தாங்குவதற்கு...?’ எண்ணம் எழுவதை தடுக்க முடியவில்லை.

இரவு உணவாக சப்பாத்தியை அவர் செய்ய, குருமா வைத்தவள், அனைவருக்கும் உணவு பரிமாறி, உண்டு

முடித்த பிறகு, அரசியை பிடிவாதமாக அனுப்பிவிட்டு கிச்சனை கிளீன் செய்துவிட்டு வெளியே வந்தாள்.

அரசியும், அவள் தாயும் பேசிக் கொண்டிருக்க, அவர்கள் அருகில் சென்று அமர விரும்பினாலும், அர்ஜூன் இல்லாத இந்த நேரமும், தன்னால்தான் அவன் வெளியூர் சென்றிருக்கிறான் என அவர்கள் எண்ணிவிடுவார்களோ என்ற பயமும் சேர, மெதுவாக தன் வழக்கமான அறைக்குத் திரும்பினாள்.

“ப்ரதீப்..., வா தூங்கலாம்...” உள்ளே இருந்து வெளியே வந்தவள், அழைக்க, “ம்ஹூம்..., நான் இன்னைக்கு பாட்டியோட படுத்துக்கறேன்...” தன் தாமஸ் வண்டியை கட்டிக் கொண்டவன், அரசியின் மடியில் அமர்ந்து கொண்டான்.

“இல்லம்மா..., நீ உச்சா போய்டுவா..., வா அம்மாகிட்டே...” பெரியவர்கள் முன்னால் குரல் உயர்த்த முடியாமல் தன்மையாகவே அழைத்தாள்.

“அதில் என்னம்மா இருக்கு..., நாங்க எல்லாம் அதையும் தாண்டி வந்தவங்கதான்..., நீ போ...” அரசி உரைக்க மறுக்க முடியாமல் திரும்பினாள்.

படுக்கையில் விழுந்தவளுக்கு, மகன் இல்லாத வெறுமை தாக்கினாலும்..., அதையும் மீறி..., அர்ஜூனின் நினைவு ஆக்கிரமித்தது. இன்று அவன் இங்கே இருந்திருந்தால் நிச்சயம் பெரும் சங்கடத்தை உணர்ந்திருப்பாள். ஆனால்..., அவன் இல்லாதது வேறு விதமான நினைவுகளை அளித்தது.

ஒரு வேளை தன்னைப்பற்றி அவள் சிந்திக்க வேண்டும் என்பதால்தான் அவன் அவ்வாறு செய்தானோ?

உறக்கம் வராமல் அவள் புரண்டுகொண்டிருக்க..., அவளது அலைபேசியில் குறுந்தகவல் வந்ததற்கான ஓசை கேட்கவே, நெஞ்சம் படபடக்க அதைக் கையில் எடுத்தாள்.

“குட் நைட்...” திரையில் ஒளிர்ந்த செய்தியில், அவள் எப்படி உணர்ந்தாள் என்றே சொல்வதற்கில்லை.

***

# பகுதி – 16

மறுநாள் காலையே காவியாவின் வீட்டினர் சென்னைக்கு கிளம்பிவிட, சற்று கவலையாக உணர்ந்தாலும் யாரையும் அவள் தடுக்கவில்லை. அவர்கள் வேலையை விட்டுவிட்டு எத்தனை நாள்தான் அவளோடு இருக்க முடியும்?

“காவியா..., மாப்பிள்ளை ரொம்ப தங்கமானவர்..., அவரை ரொம்பநாள் காக்க வைக்காதே...” ஆயிரம் அறிவுரைகளுக்கு நடுவே அவளது தாயின் பெரும் அறிவுரை இதுவாகத்தான் இருந்தது.

அண்ணனோ..., “நான் உனக்கு சொல்ல வேண்டியது எதுவும் இல்லை. ஆனா..., ஒண்ணே ஒண்ணு..., பழைய வாழ்க்கையை நினைத்து, புது வாழ்க்கையை தொலைத்து விடாதே..., அவ்வளவுதான்...” அவனும் முடித்துக் கொண்டான்.

அவர்கள் செல்லவே..., அலுவலகம் கிளம்பிக் கொண்டிருந்தவளுக்கு, கணவனின் ‘குட் நைட்’ செய்தியே விழிகளுக்குள் உலா போனது.

அவன் அனுப்பியதற்கு பதில் செய்தியாக அதை அனுப்பக் கூட அவளால் முடியவில்லை. எப்படி அனுப்புவதாம்...? திருமணம் செய்த முதல் நாளே..., வீட்டை விட்டு தனியாகச் சென்றிருக்கும் அவனுக்கு, அது எப்படி இனிய இரவாக அமைய முடியும்? கேள்விக்கான பதில் அவளிடம் இல்லை.

காலையில் வந்த குட் மார்னிங் செய்தியையும் வெறுமனே பார்த்துவிட்டு வைத்துவிட்டாள். இரவில் அவன் அழைப்பான் என ஒரு மனம் எதிர்பார்க்க, அழைத்துவிட்டால் என்ன பேசுவது என ஒரு மனம் தவித்தது அவளுக்கு மட்டும்தானே தெரியும்.

‘எப்படி இருக்கிறாய்...? வேலை எப்படி போகிறது...? முடிந்து விட்டதா...?’ அவனிடம் சாதாரணமாக உரையாட ஆயிரம்

இருக்கிறதுதான். ஆனால்..., அப்படி உரையாடிவிட அவளால் முடியவில்லையே...

ப்ரதீப்பை தானே பார்த்துக் கொள்வதாகச் சொல்லி அரசி சொல்லிவிட, தன் அலுவலகத்துக்கு கிளம்பி வந்துவிட்டாள். வந்தவளுக்கு வேலை செய்யத்தான் முடியவில்லை.

மாலை நெருங்க நெருங்க..., ஒருவித படபடப்பு. ‘வீட்டுக்கு வந்திருப்பாரோ?’ கைகள் இரண்டும் சில்லிட்டு போன உணர்வு.

வீட்டுக்குச் சென்றவளது பார்வை..., வாசலில் அவனது பைக்கைத் தேட..., அதைக் காணாமல் மனதுக்குள் சிறு ஏமாற்றம் கவிழ்ந்தது.

ஏழுமணி வாக்கில் அவளது அலைபேசி இசைக்க, வேகமாக அதை எடுத்தவள், என்ன கேட்கவென்று தடுமாற, “காவியா எப்படி இருக்க...? அம்மா, ப்ரதீப் எல்லாம் எப்படி இருக்காங்க...?”.

“எல்லாரும் நல்லா இருக்கோம். நீங்க...?” கேட்கும் முன்பே தொண்டை உலர்ந்து போனது.

“ரகு..., அத்தை, மேக்னா எல்லாம் ஊருக்கு கிளம்பிட்டாங்களா?” அவன் கேட்க,

“ம்...” முனகினாள்.

“டே எப்படி போச்சு?”.

“நல்லா போச்சு..., உங்களுக்கு...?”.

“எனக்கு..., இங்கே வேலை இன்னும் முடியலை..., சோ..., நாளைக்கு ஈவினிங் தான் வருவேன்..., அதைச் சொல்லத்தான் கூப்ட்டேன். அம்மாகிட்டே மதியமே சொல்லிட்டேன்..., அம்மா சொன்னாங்களா?” அவன் கேட்க,

“சொன்னாங்க...” மெல்லியதாக உரைத்தாள்.

“ஏய்..., நான் என்ன உன்னை பேட்டியா எடுக்கறேன்? இல்ல ‘குயிஸ்’ ப்ரோகிராம் நடத்துறேனா? ஒரு வார்த்தையில் பதில் சொல்லிட்டு இருக்க? நேர்லதான் என் முகத்தை பார்த்தால் பேச மாட்டேங்கற..., போன்லதான் முகம் தெரியாதே பிறகென்ன...?” அவளைச் சீண்டினான்.

“எப்போ உங்க முகம் பார்த்தே பேசாமல் இருந்தேனாம்...?” அவள் சிலிர்த்துக் கொள்ள,

“ம்கும்..., நீ பேசுற அழகுதான் தெரியுமே. பாதி நேரம் கண்ணு ரெண்டும் சுத்திதான் அலைபாயுமே தவிர, என்னை நேராக பார்க்குமாக்கும்...?” உல்லாசமாக சிரிக்க, அவன் தன் எதிரில் இருந்தால் எப்படிப் பார்த்திருப்பான் என எண்ணுகையிலேயே அவள் விழிகள் இங்கே சுழன்றது.

‘பின்ன..., அப்படியே முழுங்கறாப்ல பாத்தா..., எப்படிப் பாக்குறதாம்...?’ மனம் அவனிடம் கேள்விகேட்க, அதை அவள் வெளியிடவில்லை.

“ஓகே..., எனக்கு இங்கே சாப்பிடப் போக டைம் ஆச்சு..., இன்னும் லேட்டா போனால், டிபன் காலியாயிடும்..., நான் கிளம்பறேன்...” அலைபேசியை வைத்து விட்டான்.

அவன் அலைபேசியை வைத்த பிறகுதான்..., அவன் என்ன சாப்பிட்டான்? சாப்பாடு, தங்கும் இடம் அனைத்தும் வசதியாக இருக்கிறதா? என எதைபற்றியும் தான் ஒரு வார்த்தை கூட கேட்கவில்லை என்பது புரிய, தன்னைத் தானே திட்டிக் கொண்டாள்.

மறுநாள் மாலையில் சற்று சீக்கிரமாக வீட்டுக்கு வர, அவனது சத்தமும், ப்ரதீப்பின் சத்தமும் வாசல் கதவைத் தாண்டி, வீதி வரைக்கும் கேட்டது.

வண்டியை நிறுத்தியவள், சிறு படபடப்பும், அவனைக் காணும் ஏக்கமுமாக வீட்டுக்குள் நுழைந்தாள்.

“ஹேய்..., என்ன சீக்கிரம் வந்துட்ட..., ஏதாவது மீட்டிங் போட்டுட்டு அப்படியே அனுப்பிட்டாங்களா?” அலுவலகத்தின் நடந்ததை கெஸ் செய்தான்.

‘ஆம்...’ என தலை அசைத்தவள், ஒரு நிமிடம் அவனை ஏறிட்டுவிட்டு, அறைக்குள் சென்று மறைந்தாள்.

“காவியா...” அரசியின் அழைப்பில், கிச்சனுக்கு விரைய,

“இந்தாம்மா..., உனக்கு காபி..., இதை அவனுக்கு கொடு..., நீ வந்த பிறகு சேர்ந்து குடிக்கறேன்னு சொல்லிட்டு, காபி குடிக்கவே இல்லை...” அவள் கையில் இரண்டு கப்பை திணித்தார்.

‘என்னோட சேர்ந்து குடிக்க வேண்டி, காபியே குடிக்கலையா...?’ மனதுக்குள் எழுந்த கேள்வியோடு அவனைத் தேடிச் சென்றாள்.

“என்னங்க..., காபி...” அவன் கையில் கொடுக்க, “என்ன ரொம்ப இளைச்சுட்ட...?” கேட்டவன் அதை பெற்றுக் கொண்டான்.

‘என்ன..., நானா...?’ ஒரு நொடி தன்னையே பார்த்துக் கொண்டவள், அவன் கேலி புரிய, சிறு கோபமாக அவனைப் பார்த்தாள்.

சட்டென இமை இரண்டையும் சிமிட்டி சிரித்தவன், காபியில் கவனமானான். “காபி சூப்பர்..., நீ போட்டியா...?” அவன் கேட்க, “உங்களுக்கு ரொம்பத்தான்...” ஒவ்வொரு நிமிடமும் அவளை சீண்டினால் அவளும் என்னதான் செய்ய?

பார்வையோ அவள்மீதே இருக்க..., துளித்துளியாய் காபியை பருகியவன், கூடவே அவளையும் பார்வையிட, ஒரு மாதிரி அவஸ்தையை உணர்ந்தாள்.

அங்கிருந்து விலகிச் செல்லவும் முடியாமல், அவன் பார்வை வீச்சையும் தாங்க முடியாமல் தடுமாறியவள், அங்கிருந்து விலகிச் செல்ல முயல, சட்டென அவளைத் தடுத்தவன்,

கப்பை கொடுக்கும் சாக்கில் அவள் கரத்தில் அழுத்தி அதைக் கொடுக்க, அவனிடமிருந்து பிடுங்கிக்கொண்டு கிச்சனுக்குள் ஓடி மறைந்தாள்.

இதயம் படபடவென அடித்துக் கொண்டது. ஒரு நொடி என்ன செய்யவென்று தடுமாற, “என்னம்மா..., ஏதாவது வேணுமா? என்ன யோசிக்கற?” அரசியின் குரல் அவளைக் கலைக்க,

“இல்லத்த..., சும்மாதான்...” எதையோ உளறியவள், இரவு உணவுக்கான ஆயத்தத்தை துவங்கினாள். சற்று நேரம் கழித்து..., கிச்சனுக்கு தண்ணீர் குடிக்க வந்தவன், காவியாவின் கைக்கருகில் இருந்த செம்பை எடுக்க, அவள் கரத்தில் அவன் கரம் சற்று உராய்ந்தது.

அவனை எதிர்பாராத காவியா..., “எ...என்ன... வேணும்...” வேகமாக பின்னடைந்தாள்.

“ம்ச்..., இப்போ எதுக்கு இப்படி பதறுற? வீட்டுக்குள் என்னையும் அம்மாவையும் தவிர யார் வரப்போறா...? தண்ணி குடிக்க வந்தேன்...” விளக்கம் கொடுத்தவன், அழுத்தமாக அவளைப் பார்த்துவிட்டு, நீரை குடித்துவிட்டு செம்பை அவள் கையில் கொடுத்தான்.

“ஒரு குரல் கொடுத்திருக்கலாமே...” தன் செய்கை அவளுக்கே அதிகமாகத் தோன்ற, தயங்கி உரைத்தாள்.

“இங்கே இருக்க கிச்சனுக்கு வந்து நானே தண்ணி குடிச்சுக்க மாட்டேனா? இதை வேற சொல்லி உனக்கு ஒரு வேலை வைக்கணுமா என்ன...?” கேட்டவன் சென்றுவிட, அமர்ந்த இடத்தில் இருந்து வேலை வாங்கும் பாஸ்கரின் செய்கை நினைவுக்கு வருவதை அவளால் தடுக்க முடியவில்லை.

முயன்று அதில் இருந்து வெளியேறியவள், இரவு உணவை முடித்து, உண்டு முடித்து அனைத்தையும் ஒதுக்கிய பிறகும், ஏதோ ஒரு சாக்கிட்டு கிச்சனுக்குள்ளேயே அவள் துழாவ, “வேலை இன்னும் முடியலையாம்மா...?” அரசி ஹாலில்

இருந்து வினவ, இதற்குமேல் இங்கே இருந்தால் அவரது சந்தேகத்துக்கு ஆளாக வேண்டும் என்பதால் கிச்சன் விளக்கை அணைத்துவிட்டு கிளம்பினாள்.

எவ்வளவுதான் மெதுவாக நடந்தாலும் நாலெட்டு தூரத்தில் இருக்கும் அறையை அவளால் அடைய எவ்வளவு நேரமாகிவிடும்? நகர மறுத்த கால்களை முயன்று நகர்த்தி, பெரும் தயக்கத்துக்கிடையில் அறைக்குள் நுழைந்தாள்.

இதயமோ துடிக்கும் வேகத்தில்..., நெஞ்சுக்கூட்டையும் பிளந்துகொண்டு வெளியே வந்து விழுந்துவிடும்போல் இருந்தது. அவன், அவளுக்காக எனப் பார்த்து இரண்டு நாட்களை கடத்திவிட்டான்..., ஆனாலும்..., ஒரு ஆண்மகனாக..., அவனது எதிர்பார்ப்பை தன்னால் பூர்த்தி செய்ய முடியுமா? கேள்வி அவளை வண்டாய் குடைந்தது.

அவன் தன்னை நெருங்கி..., தான் மறுத்தால்..., அவன் மனநிலை எப்படி இருக்கும்? அவனோடான நெருக்கத்தை நினைத்தாலே..., இதற்குமுன் தான் உணர்ந்த வலி மட்டுமே நினைவிற்கு வர, முத்து முத்தாக வியர்வை அரும்பியது.

அறைக்குள்., ப்ரதீப்பும், அர்ஜூனும் சேர்ந்து தாமஸ் டிரெயின் ட்ராக்கை செட் செய்து கொண்டிருக்க, அமைதியாகச் சென்று படுக்கையில் அமர்ந்து கொண்டாள்.

அவளைத் திரும்பி பார்த்தவன்..., “நீயும் வா காவியா..., அந்த டிராக்கை செட் பண்ணு..., ப்ரதீப் ரொம்ப கிரியேட்டிவா செய்யறான் தெரியுமா...?” மகனது கன்னம் கிள்ளி முத்தமிட்டவன், அவனுக்கு உதவுவதிலேயே குறியாக இருந்தான்.

அடுத்த ஒருமணிநேரத்துக்கும் மேலாக நேரம் எப்படிப் போனது என்றே தெரியவில்லை. ப்ரதீப் உறக்கத்துக்குச் செல்லத் துவங்கி தள்ளாடவே..., அவனை ரெஸ்ட் ரூம் போக வைத்துவிட்டு, படுக்கையை தயார் செய்தவன், அவனோடு சேர்ந்து தானும் படுத்துக் கொண்டான்.

ப்ரதீப் நொடியில் உறங்கிவிட, காவியாவுக்கோ படுக்கையில் படுக்க கூட முடியவில்லை. அவள் தயக்கம் உணர்ந்தவன், “காவியா..., உன் மனசுக்குள் என்னதான் ஓடிட்டு இருக்கு...? சொன்னால்தானே தெரியும்...” தனக்கு முதுகு காட்டி அமர்ந்திருந்தவளை நெருங்கினான்.

‘ஒன்றும் இல்லை...’ என்பதுபோல் தலையை அசைத்தவள், விரல்களை இறுக கோர்த்துக் கொண்டாள்.

“இந்த அறைக்குள் என்னோட பிரசன்ஸ் தவிர்க்கவே முடியாத ஒண்ணு. அது உனக்கு புரியுது தானே...” அவள் தோள் தொட்டு தன் பக்கமாக திருப்பினான்.

அவள் தேகம் நடுங்குவதை உணர்ந்தவனுக்கு..., அவளுக்கு எப்படி புரிய வைப்பது எனப் புரியவில்லை. ஒரு முடிவுக்கு வந்தவனாக..., படுக்கையில் இருந்து இறங்கியவன், கால்களை தொங்கப்போட்டு, அவள் அருகில் அமர்ந்தான்.

“இங்கே பார் காவியா..., ஒரு சாதாரண தொடுகை, மெல்லிய முத்தம்..., இயல்பான சிரிப்பு..., சாதாரணமான பேச்சு..., இதெல்லாம் இல்லாமல்..., இப்படி மொத்தமா ஒதுங்கிப் போனால்..., வீணா பதட்டம்தான் மிஞ்சும்.

“உன் சம்மதம் இல்லாமல்..., உனக்குப் பிடிக்காமல்..., உன் விருப்பம் இல்லாமல்..., உனக்கும் எனக்கும் நடுவில் எந்த நெருக்கமும் கிடையாது. அதை முதல்ல நீ புரிஞ்சுக்கோ..., என்ன புரியுதா...?” ஒற்றை விரலால் அவள் தாடையைப் பிடித்து தன்பக்கம் திருப்பி, அவளிடம் வினவ, மௌனமாக தலை அசைத்தாள்.

“ஓகே..., அடுத்தது..., உன் கையைத் தொடுவது..., கொஞ்சமா ஹக் பண்ணிக்கிறது..., பாசமா ஒரு இதழ் ஒற்றல்..., இதெல்லாம் ரொம்பவே இயல்பான ஒன்று..., அது கூட இல்லன்னா..., ரொம்ப சீக்கிரமே..., இதென்ன வாழ்க்கைன்னு நமக்கே சலிப்பு தட்டிடும்...

“கிச்சன்ல சாதாரணமா கை உரசினதுக்கே அப்படி துள்ளி விலகினாய்..., நான் ஒண்ணும் தீண்டத்தகாதவன்

இல்லையே...? இல்ல..., என்னோட இருப்பை உன்னால் ஏத்துக்க முடியலன்னு சொல்லு..., முடிந்த அளவு வெளியிலேயே என் வேலைகளை அமைத்துக் கொள்கிறேன்...” அவன் சொல்ல, அவனைக் காணாமலே இருப்பதா? என்ற நினைவில் அவள் கண்கள் பரிதவித்தது.

அதை உணர்ந்தவன்..., சற்று நிம்மதியாக உணர்ந்தான். அவன் இவ்வளவு பேசிய பிறகும் அவளிடம் பதில் இன்றிப் போக..., “ஏதாவது சொல் காவியா? இப்படி அமைதியா இருந்தால் நான் என்னன்னு புரிஞ்சுக்கறது...?” அவள் வாய் வார்த்தையாய் அறிய விரும்பினான்.

“இவ்வளவு சொன்ன பிறகும் நீ அமைதியா இருக்கன்னா...” அவன் கண்களில் மெல்லிய பயம் எட்டிப் பார்க்க, அதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

தன் தயக்கம் களைந்தவள்..., “பெ...பெ...பெட்ரூம்ல அவ்வளவா நான் பேசுவது கிடையாது...” திணறி, திண்டாடி..., வார்த்தைகளை தேடி, கோர்த்து அவள் உரைக்க, அதில் இருந்த உள்பொருள் புரிந்தவனுக்கு, பாஸ்கர்மேல் கட்டுக்கடங்காத கோபம் பெருகியது.

***

# பகுதி – 17

காவியா உரைத்த வார்த்தைகளை உள்வாங்கிவனுக்கு, மனதை பாரம் அழுத்தியது. இப்பொழுது அதைப்பற்றி பேசி, இருக்கும் மனநிலையை கெடுத்துக்கொள்ள முயலாமல்..., “பேசுறது கிடையாது ஓகே..., ஆனா..., உனக்கு பேசப் பிடிக்கும்தானே...” இப்பொழுது அவள் இரு கன்னங்களையும் தாங்கிக் கொண்டான்.

அவள் தலை அசைக்க..., “இப்போ சொல்றேன்..., உனக்கு என்ன தோணுதோ? அதை தைரியமா என்கிட்டே பேசலாம். சந்தோசம்..., துக்கம்..., அலுவலகத்தில் நடந்தது..., பிடித்தது..., பிடிக்காதது..., இப்படி எல்லாத்தையுமே..., என்கிட்டே ஷேர் பண்ணிக்கலாம்.

“நானே ஏதாவது செய்தாலோ..., சொன்னாலோ., உனக்குப் பிடிக்கலன்னா தைரியமா சொல்லிடு..., நான் என்ன நினைப்பேன்..., சொல்வேன் என தயங்காதே..., என்ன...” ஒரு குழந்தைக்கு சொல்வதுபோல் சொல்லி புரிய வைத்தான்.

“இன்னொரு விஷயம்..., என் பெயரைச் சொல்லி அழைப்பது உனக்கு அவ்வளவு கஷ்டமா இருக்கா என்ன...?” திடுமென அவன் கேட்க, வெகுவாக தடுமாறிப் போனாள்.

“அது..., அது என்னன்னா...” அவனிடம் சொல்லிவிட முயன்றாலும் அவளால் முடியவில்லை.

“ஓகே..., இப்போ சொல்ல முடியலன்னா பிறகு சொல்..., என் அருகாமை உன்னை டிஸ்டப் பண்ணுதா...?” வருடும் குரலில் கேட்க, தலையை மறுப்பாக அசைத்தாள்.

“குட்..., முக்கியமான விஷயம்..., நான் உன் அருகில் வந்தாலே..., நீ ஒரு மாதிரி நெர்வஸ் ஆகிடுற..., ஏன் அப்படி...?” அதற்கு அவள் மௌனத்தையே பதிலாக்க,

“நான் சொல்லவா..., நமக்கு ஒரு விஷயத்தைப் பற்றி தெரியாதப்போதான் அதன்மேல் பயம் வரும். இது இவ்வளவுதான்னு தெரிஞ்சுட்டா அந்த பயம் போய்டும்..., சோ...” அவன் நிறுத்த, அவன் என்ன சொல்லப் போகிறான் என விழி விரிய அவனையே வெறித்தாள்.

அவள் கன்னங்களைத் தாங்கிய கைகளை எடுத்தவன், அவள் மடியில் கோர்த்திருந்த கரத்தை அவள் கரத்தை பற்றியவன், அவள் உள்ளங்கை வியர்வையில் நனைந்திருக்க, “எதுக்கு இவ்வளவு பயம்...” கேட்டவன்..., அவள் கரத்தை தன் இரு கன்னத்திலும் அழுந்த வைத்துக் கொண்டான்.

அவன் தாடை ரோமம் முள்ளு முள்ளாக அவள் உள்ளங்கையைக் குத்த, அவள் புருவம் உயர்ந்து, வியப்பாக அவனைப் பார்த்தது. உள்ளங்கை வழியாக பாய்ந்த ஒருவித உணர்வு, அவளைத் தாக்க, அவனோ..., “இவ்வளவுதான்..., இதுதான் நான்..., நானும் உன்னை மாதிரி ஒரு சாதாரண மனிதன்தான்...” குறும்பு கொப்பளிக்க அவன் உரைக்க, அவனிடமிருந்து கரத்தை விலக்கிக்கொள்ள முயன்றாள்.

“இப்போதான் ஸ்டார்ட் பண்ணியிருக்கேன்..., அதற்குள் எப்படி...?” அவள் கரத்தை அழுத்தமாக பற்றிக் கொண்டவன், “இதுதான் என்னோட கண்..., மூக்கு..., வாய்...” தன் வாயில் அழுத்திய அவள் விரல்களில்..., பட்டும் படாமல் ஒரு முத்தம் பதிக்க, அவள் தேகத்தில் மின்சாரம் தாக்கிய உணர்வு.

“ஹாங்...” தன்னை மீறி திகைப்பாய் அவள் குரல் கொடுக்க, அதைக் கண்டுகொள்ளாதவன், அவள் கரத்தை தன் சிகைக்குள் நுழைக்க, அவள் தேகம் மொத்தமும் சிலிர்க்கும் உணர்வு. அதில் பிடித்தமின்மையோ, தவிர்க்கும் எண்ணமோ அவளுக்கு எழவில்லை என்பது மட்டும் அப்பட்டமான உண்மை.

அவனோ..., அவள் நிலையை உணராதவனாக..., “இதுதான் என்னோட டிஷர்ட்..., நீ ஹேப்பியா இருக்கும்போது இழுத்து என்னை கட்டிக்கலாம்..., கோபமா இருந்தால், காலரைப் பிடித்து கேள்வி கேட்கலாம்..., இதோ..., இங்கதான் நீ இருக்க..., உரைத்தவன், அவள் வலக்கரத்தை தன் இதயத்தின்மேல் வைத்து அழுத்த, அவன் துடிப்பை அவள் கரம் உணர்ந்தது.

ஏனோ..., அந்த நேரம்..., அவன் நெஞ்சில் சாய்ந்துகொள்ளச் சொல்லி அவள் மனம் உந்த..., அவள் விழிகள் இப்பொழுது மூடிக் கொண்டது. அவள் முகத்திலேயே தன் பார்வையை பதித்திருந்தவன், சட்டென அவளை இழுத்து தன் நெஞ்சோடு இறுக்கிக் கொண்டான்.

காவியாவுக்கோ..., நிம்மதி என்றால்..., அப்படி ஒரு நிம்மதி. இத்தனை நாள் காடு மேடெல்லாம் அலைந்து, இறுதியாக இளைப்பாற ஒரு நிழல் கிடைத்தால் வருமே..., அப்படி உணர்ந்தாள்.

அவனோ..., ஒரு தாய்..., தன் குழந்தையை ஆதரவாக தழுவிக் கொள்ளுமே..., அப்படி இருந்தது அவனது செய்கை. சற்று நேரம் அந்த மோன நிலையில் இருவரும் திளைத்திருக்க..., அவள் முதுகில் தன் கரம் கோர்த்து அணைத்துக் கொண்டான்.

அவள் உச்சந்தலையில் இதழ் பதித்தவன்..., “ஐ லவ் யூ காவியா...” முனகியவன், அவள் தலையில் தன் கன்னத்தை வைத்து அழுத்திக் கொண்டவன், அமைதியாக இருந்தான்.

அவள் கரமோ..., அவன் மடியில் இருக்க..., வலக்கையால் அவளை அணைத்திருந்தவன், இடக்கையால் அவள் கரத்தை எடுத்து, தன் கழுத்தில் போட்டுக் கொண்டான்.

எவ்வளவு நேரம் அது நீடித்ததோ..., சற்று நேரத்தில்..., தெளிந்தவள், சிறு சங்கடமாக அவனிடமிருந்து விலக..., “இப்போ ஓகேயா...” அவள் நெற்றியில் மெல்லியதாக முட்டினான்.

“காவியா…” அவன் குரல் மிகவும் மென்மையாக…, விழி திறந்து அவனைப் பார்த்தாள்.

“வித் யுவர் பெர்மிஷன்…” தன் மூக்கால் அவள் மூக்கை உரச, அவ்வளவு நேரமாக அவளிடம் இருந்த இளக்கம் மறைந்து, அவள் தேகம் விரைப்பதை உணர்ந்தவன்,

“ம்ச்…, இப்போ ஏன் டென்ஷன்…, உன் சம்மதம் இல்லாமல் எதையும் செய்ய மாட்டேன்னு சொல்லிட்டேனே…, இது வேற…” சிறு கண்டிப்பும், மெல்லிய குழைவுமாக உரைத்தான்.

அதில் நம்பிக்கையுற்றவள்…, அவனை ஏறிட…, “ஒரே ஒரு கிஸ்…, அதுவும் நீ கொடுக்க வேண்டாம்…, நான் கொடுக்கறேன். அதுவும் உன் கன்னத்தில்…, உனக்கு விருப்பம் இல்லன்னா தைரியமா சொல்லிடு…, நான் எதுவும் நினைக்கலை…” அவளை விட்டு விலகியவன், அவள் கண்களை ஊடுருவினான்.

“பெரிய நல்லவன் மாதிரி பேசிட்டு இப்போ இப்படி கேக்கறானேன்னு மட்டும் நினைச்சுடாதே…” ஒரு மாதிரி தயங்கினான்.

‘இப்படி கேட்டிருக்கக் கூடாது…’ என அவன் தவிப்பது புரிய, ஏனோ அதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

“உன்னால் சொல்ல முடியலன்னா…, எழுந்து கூட போய்டலாம்…, நான் புரிஞ்சுப்பேன்…” அவன் முதன்முதலில் தன்னிடம் கேட்பதை, ஒரு மனைவியாக அவள் எப்படி மறுப்பதாம்…?

அவள் அதற்கும் அமைதியாக இருக்கவே…, “இட்ஸ் ஓகே…, பரதீப்கிட்டே போய் படுத்துக்கோ…, நான் தண்ணி குடிச்சுட்டு வரேன்…” அவன் குரல் ஏமாற்றமாக ஒலித்ததோ என்னவோ…, ஆனால்…, அவளால் அவனை ஏமாற்ற முடியவில்லை.

அவ்வளவு நேரமாக அவன் விழி காண மறுத்தவள், சட்டென அவன் விழி நோக்கினாள். அதில் தேங்கியவன்..., “இந்த பார்வைக்கும், உன் மௌனத்துக்கும் அர்த்தம்...?” கேள்வியாக இழுத்து நிறுத்த, மௌனமாக தலை கவிழ்ந்தாள்.

அவள் எழுந்து செல்லாததே தைரியம் அளிக்க..., அவளை இன்னும் சற்று நெருங்கி அமர்ந்தவன்..., அவள் கன்னம் தாங்கி..., பெருவிரலால் அவள் காதுமடலை மெதுவாக வருட..., எதற்கோ தயாராவது போல், புருவம் சற்று நெரிய, நடுங்கும் இதழ்களை பற்களால் கடித்தவள், விழி மூடி இருந்தாள்.

“உன்னை இவ்வளவு கஷ்டப்படுத்தி..., எனக்கு அந்த முத்தத்தை கொடுக்க வேண்டாம் காவியா. எனக்கு எந்த வருத்தமும் இல்லை. உன்னை இப்படி சங்கடப்படுத்திவிட்டேனே என்று வருத்தமா இருக்கு..., சாரி...” அங்கிருந்து வெளியே சென்றுவிட்டான்.

***

# பகுதி – 18

காலையில் விழிப்பு வந்து எழுகையிலே..., ஜன்னல் வழியாக வந்த வெளிச்சம், நிச்சயம் தான் தாமதமாக எழுவதை அவளுக்கு உணர்த்த, அவசரமாக எழுந்தவள், காலைக் கடனை முடித்துவிட்டு வெளியே விரைந்தாள்.

கண்களை சுழற்றியவள் அர்ஜூனைத் தேட..., அவன் வீட்டுக்குள் இருக்கும் அறிகுறியே இருக்கவில்லை. அரசி கிச்சனுக்குள் சமைத்துக் கொண்டிருக்க..., “சாரித்த..., நல்லா தூங்கிட்டேன்...” சங்கடமாக உரைத்தவள், தேங்கி நின்றாள்.

“அதனால் என்னம்மா..., இங்கே அவசரமா முடிக்க வேண்டிய வேலை எதுவும் இல்ல..., டிபன் மட்டும்தான் செய்யணும்..., லஞ்சுக்கு எல்லாம் முடிச்சுட்டேன்...” அவளிடம் பேசியவாறே..., அவளுக்கு டீ கலந்து கொடுத்தார்.

‘இவையெல்லாம் தான் செய்ய வேண்டியது...’ நாளைக்கு சீக்கிரம் எழவேண்டும் என நினைத்துக் கொண்டாள்.

“அவர் டீ குடிச்சுட்டாரா...?”

“குடிச்சுட்டாம்மா..., வீட்ல தேங்காய் இல்லை..., அதை வாங்கப் போயிருக்கிறான்...”

“இப்போ கடை இருக்காதே...” உரைக்கையிலேயே..., இரவு நடந்தவை அனைத்தும் நினைவிற்கு வர, மனதுக்குள் பெரும் பாரம்.

‘ஒரே ஒரு முத்தம்..., அதுவும் கன்னத்தில்..., உன்னையா கொடுக்கச் சொன்னார்..., அவர்தானே கொடுக்கிறேன் என்றார்..., அதற்கு என்னவோ, கசப்பு மருந்தை குடிக்கப் போவதுபோல் முகத்தை வைத்திருந்தால்..., அவர் என்னதான் செய்வார்...?

‘அவராக இருக்கப்போய் உன்னை இத்தோடு விட்டார். இதுவே வேறு யாராவது இருந்திருந்தால்…’ அவள் சிந்தை அதிலேயே சுழல,

“காவியா…, என்னம்மா டீயை கையில் வச்சுட்டே ஏதோ யோசனைக்கு போய்ட்ட, அது ஆறிபோக முன்னாடி குடிச்சுடு…” அரசி அவள் தோளைத் தொட்டு உலுக்கவே, நடப்புக்குத் திரும்பினாள்.

“இதோ அத்த…” வேகமாக அதை உறிஞ்சியவள், “நீங்க போங்கத்த…, நான் இட்லி ஊத்தி, வேர்க்கடலை சட்னி பண்றேன்…” அவரை அனுப்பினாள்.

“சரிம்மா…, நான் மிஷின்ல துணி போட்டேன்…, என்ன ஆச்சுன்னு பாக்கறேன்…” அவர் வெளியேறினார்.

அவர் செல்லவே…, அர்ஜூன் வந்தால் எப்படி தன்னை எதிர்கொள்வான்? என நினைக்கையிலேயே ஒரு படபடப்பு நெஞ்சை ஆக்கிரமித்தது. அதே நேரம்…, கையில் தேங்காயோடு வந்தவன்…, அவள் கிச்சனுக்குள் இருப்பதைப் பார்த்துவிட்டு, “குட் மார்னிங் காவியா…, தேங்காய்…, உடைக்கணுமா…?” சாதாரணமாக உரையாட, அவளுக்கு நிம்மதியாக இருந்தது.

ஆனாலும்…, இப்படி செய்துவிட்டோமே…, என சங்கடத்திலும், தவிப்பிலும் அவள் நிற்க, “ஏய்…, நின்னுட்டே தூங்கறியா என்ன? தேங்காயை உடைக்கணுமான்னு கேட்டேன்…” அவளை உலுக்கினான்.

“இல்ல…, நானே உடைச்சுகறேன்…” அவள் உரைக்க,

“அப்போ உடைக்கணும்…, அதைச் சொல்வதை விட்டுட்டு…, நகரு…” கொடுவாளை எடுத்து தேங்காயை உடைத்தவன், தானே அதைத் துருவினான்.

“ஹையோ…, நீங்க ஏன் இதையெல்லாம் செய்யறீங்க…, நானே பாத்துக்கறேன்…” அவளது மறுப்பை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

“நான் தனியா இருக்கும்போது நான்தானே எல்லாவற்றையும் செய்தேன்..., இதில் சங்கடப்பட எதுவும் இல்லை...” அதை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு வெளியேற..., அவளுக்குள் சிலபல உணர்வுகள் தடம் மாறியது.

உதவி என்ற ஒன்றை வாய் வார்த்தையாகக் கூட சொல்லத் தயங்குபவன் பாஸ்கர்..., அதைவிட..., தான் அவனோடு இரவைக் கழிக்க மறுக்கையில், மறுநாள் அவனது நடத்தியே வேறு மாதிரி இருக்கும். எதைக் கேட்டாலும் ஒரு வெறுப்பு, தன்னை அமரக் கூட விடாமல் ஏதாவது வேலை சொல்வது..., இப்படி...,

ஆனால்..., அர்ஜூனோ..., அவனது முதல் கோரிக்கையை அவள் மறுத்த பிறகும் கூட அதைக் கண்டுகொள்ளாமல், அர்ஜூனின் செய்கை..., அவளை தாலாட்டியது. அவன் தடத்தை மனதுக்குள் அழுந்த பதியச் செய்தது.

அவனோ..., அவள் மனதுக்குள் தான் நுழைகிறோம் என்பதை அறியாமலேயே, தன் தாயோடு மாடிக்குச் சென்றவன், துணிகளை உலற வைத்துவிட்டு, வீட்டில் கலைந்து கிடக்கும் பொருட்களை அடுக்க, அவன்மீதே பார்வையைப் பதித்திருந்தவள், வேகமாக வந்து தடுத்தாள்.

“இதையெல்லாம் நான் பாத்துக்கறேன்..., நீங்க போய் குளிங்க...” அவன் கையில் இருந்து அந்த டாய் டிரெயினை வாங்க முயன்றாள். அவனோ..., அவள் கையில் அதைக் கொடுக்காமல்..., இருவருமாக இங்கேயும் அங்கேயும் இழுத்துக் கொண்டிருந்தனர்.

அவன் இப்படிப்பட்ட வேலைகளைச் செய்வதைப் பார்க்கையில் அவளுக்கு கஷ்டமாக இருந்தது.

ஆண்கள் வேலை செய்வதை பார்த்து வளர்ந்தவள் இல்லை. அவளது தந்தை இருந்த வரைக்கும் சரி, அண்ணனும் சரி..., குடிக்கும் டம்ளரை கூட எடுத்து கிச்சனில் வைத்து அவள் பார்த்தது கிடையாது. அப்படி

இருக்கையில்..., இதையெல்லாம் ஏற்றுக்கொள்ள அவளுக்கு பெரும் தயக்கமாக இருந்தது.

அவனுக்கே செய்ய தான் கடமைப் பட்டிருக்கையில்..., அவன் தனக்குச் செய்வதை அவள் பார்த்துக் கொண்டிருப்பதா? பெண்ணின் மனதில் வழக்கமாக விதைக்கப்படும் விஷயம்..., அவள் மனதில் ஊறிப்போன விஷயம்..., அதை தாண்ட அவளால் முடியவில்லை.

அவன் வேலையை அவன் பார்த்துக் கொள்வதே அவளுக்கு பெரும் உதவிதான் அப்படி இருக்கையில்..., இதையெல்லாம் அவன் செய்வது..., அரசி உடன் இருக்கையில், அவர் மனம் என்ன நினைக்கும்..., பாடுபடும்..., அவளுக்கு தவிப்பாக இருந்தது.

“உனக்கு என்னதான் பிரச்சனை காவியா? இது நம்ம வீட்டு வேலைதானே. இதை நீதான் செய்யணும்னு அப்படி என்ன கட்டாயம்? இதையெல்லாம் ஒதுக்கி வைத்தால், பெருக்க ஈசியா இருக்கும் தானே..., அதான் செய்தேன்...” அவனுக்குப் புரியவே இல்லை.

அவள் தவிப்பாய் அவனைப் பார்க்க..., “அம்மா..., உங்க மருமக என்னை படுத்தறா..., என்னன்னு கேளுங்க...” அங்கே வந்த அரசியிடம் அவன் புகார் வாசிக்க, சட்டென தன் கையை விடுவித்துக் கொண்டவள், சங்கடமாக அரசியை ஏறிட்டாள்.

அவளைப் பார்த்து புன்னகைத்தவர்..., “உன்னை பாடா படுத்ததானேடா கல்யாணம் பண்ணி வச்சதே..., அனுபவி...” அவர் குரலில் அவ்வளவு சந்தோசம்.

“அம்மா..., நீங்க எனக்குதான் அம்மா..., நீங்க எனக்குதான் சப்போட் பண்ணணும்...” போலியாக மிரட்டினான்.

“போடா படவா..., காவியாவை என்னடா சொன்ன? அவ முகமே சரியில்லை” அவளை ஏறிட்டார்.

“ஹையோ அத்த..., அவங்க எதுவும் சொல்லலை...” வேகமாக அவள் இடை புக...,

“அம்மா..., பாத்தீங்களா..., எனக்கு சப்போட் பண்ண என் பொண்டாட்டி இருக்கா...” அவளை சட்டென இடையில் கை கோர்க்க, மாமியாரின் முன்னிலையில் அவன் செய்கையில் விதிர்த்துதான் போனாள்.

“அவ உனக்கு சப்போட் பண்ணட்டும்..., ஆனா நான் என் மருமக கட்சிதான்...” உரைத்தவர், அவர்களுக்கு நடுவில் இருக்க விரும்பாமல், தன் அறைக்குச் சென்றார்.

“ஐயோ..., என்னங்க நீங்க..., அத்த முன்னாடி...” அவன் கரத்தை தன் இடையில் இருந்து விலக்க...,

“அதெல்லாம் அவங்க எதுவும் நினைக்க மாட்டாங்க. தேவையில்லாமல் நீ ஓரி பண்ணிக்காதே..., சரி கிச்சன்ல உன் வேலை முடிந்ததா? அதைப் போய் பார்..., நான் ப்ரதீப்பை எழுப்பறேன்...” ஹாலை ஒதுக்கத் துவங்கினான்.

மேலும் அங்கே சீன் செய்ய விரும்பாமல் கிச்சனுக்குள் நுழைந்தவள், அவன்மேல் ஒரு கண்ணை தொடர விட்டாள். ப்ரதீப்பை எழுப்பியவன், பல் துலக்க உதவி செய்துவிட்டு, பால் குடிக்க வைக்க, அவளிடம் தூக்கி வந்தான்.

அவள் பால் கலந்து கொடுக்கவே..., அவனது குட்டிச் சேரில் அவனை விட்டவன், அலுவலகம் செல்ல வேண்டி, தன் உடையை அயன் செய்யத் துவங்கினான்.

“காவியா...” அவன் குரலுக்கு அவள் விரைந்து வர, “உனக்கு பிளவுஸ் அயன் பண்ணனும்தானே..., எடுத்துட்டு வா...” சாதாரணமாக உரைக்க, வாய் பிளந்து அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“இவகிட்டே இது ஒண்ணு..., சரி..., இன்னைக்கு நான் செலக்ட் பண்ணுற பிளவுசுக்கான புடவையே கட்டு...” அவளைத் தாண்டிக் கொண்டு, அறைக்கு விரைந்தான்.

அவன் பின்னால் ஓடியவள்..., ‘ஒரே நாளில் எவ்வளவு அதிர்ச்சியைத்தான் நான் தாங்குவேன்...’ எண்ணிக் கொண்டாள். அவளது அலமாரியை அவன் குடைய..., ‘ஐயோ..., எதையெல்லாம் பார்ப்பாரோ...’ எண்ணியவள்..., அவனுக்கு முன்பாக வந்து நின்றாள்.

“இப்படி நின்னா நான் எப்படி துணியை எடுக்கறது..., விலகு...” அவளை அசால்ட்டாக நகர்த்தியவன்..., “இங்கேயா இருக்கு...” கேட்டவன், கைகளால் துழாவி..., ஒன்றை உருவியவன்..., “காவியா..., இதுவா..., ரொம்ப சின்னதா இருக்கே...” கேட்டவனது கரத்தில் இருந்ததையும், அவன் இதழில் இருந்த குறும்பு புன்னகையையும் பார்த்தவள்,

வெடுக்கென அவன் கையில் இருந்து அதை வாங்கியவள்..., “நானே எடுத்து தரேன்..., நீங்க விலகுங்க...” பீரோ பக்கம் திரும்பியவள், கண்கள் இரண்டையும் இறுக மூடி..., வெட்க புன்னகையில்..., “ச்சீ...” சன்னமாக முனகியவள், சில நொடிகள் தான் தேட வந்ததையே மறந்துவிட்டாள்.

அவன் காத்திருப்பது புரிய..., கைக்கு வந்த பிளவுஸ் ஒன்றை எடுத்தவள், “நானே அயன் பண்ணிக்கறேன்...” அவன் பக்கம் திரும்பவே இல்லை.

“இப்போ நீ கொடுக்கலன்னா..., அந்த சின்ன ஜாக்கெட்டை எடுத்துட்டு போய்டுவேன் பரவாயில்லையா...?” நான் செய்வேன் என அழுத்தமாக உரைக்க, வேகமாக அவன் கையில் கொடுத்தே விட்டாள்.

“குட்...” உரைத்தவன்..., அறையை விட்டு போகும் முன்னர்..., “உள்ளே போடுறதைக் கூட மேச்சாத்தான் போடுவியா...? பாயின்ட் நோட்டட்...” அவன் உரைத்துச் செல்ல..., காவியாவின் முகம் செவ்வானமாய் சிவந்து போனது.

‘ஒரு செக்கண்டில் எப்படி...?’ எண்ணியவள்..., தன் சிந்தை போகும் போக்கில், தன் தலையிலேயே அடித்துக் கொண்டு,

அலமாரியை பூட்டிவிட்டு திரும்ப, கைகளை குறுக்காக கட்டிக்கொண்டு, தலையை ஒரு பக்கம் சரித்து, குறும்புப் புன்னகையில் அங்கே நின்றவனை சத்தியமாக எதிர்பார்க்கவில்லை.

சிறு திகைப்பும்..., பெரும் வெட்கமும்..., சிறு சங்கடமும்..., அலாதியான நிம்மதியுமாக அவனை ஏறிட..., “ரொம்ப அழகா இருக்க...” அவள் உணர்வுகளை மொத்தமாக கொள்ளையிட்டவனாக அவன் உரைக்க, ‘இந்த அழுக்கு நைட்டியிலும்..., கலைந்த தலையிலும், நலுங்கிய தோற்றத்திலும் என்ன அழகைக் கண்டானாம்...?’ மனம் சிணுங்கினாலும்,

‘இதற்கு காரணமே நீதானே...’ அவள் மனதுக்குள் எழுந்த பெரும் நிம்மதியோடு..., தயக்கமாக அவனை நெருங்கியவள், தன் தயக்கத்தை உதறி, அவன் நெஞ்சில் மென்மையாக சாய்ந்து கொண்டாள்.

பெரும் நிம்மதியோடு அவளை அணைத்துக் கொண்டான் அர்ஜூன்.

***

# பகுதி – 19

திருமணம் முடிந்து இரண்டு வாரம் கடந்து விட்டது என்பதை அவளால் நம்பவே முடியவில்லை. அந்த இரவைத் தவிர, தொடர்ந்த இரவுகளில், மறந்தும் கூட அதைப்பற்றி அவன் பேசவே இல்லை.

காலையில் துவங்கி, இரவு உறங்கும்வரைக்கும், அவனது செல்ல சீண்டலோ..., தீண்டலோ இன்றி கழிந்தது கிடையாது. அனைத்திலும் ஒரு பாசம், அரவணைப்பு, பாதுகாப்பு, சீண்டல், பெரும் குறும்பு இருக்குமே தவிர, தூண்டல் என்ற விஷயம் இருக்கவில்லை.

ஆனால்..., வெகு இயல்பாக அவன் செய்யும் விஷயம்..., அவளைத் தீண்டி..., மனதைத் தூண்டி, ஒரு நெகிழ்வான மனநிலைக்கு அவளை இட்டுச் சென்றது. தேகத்தை தீண்டாமல்..., மனதைத் தீண்டும் அவன் செய்கை..., அவன் கைகளுக்குள்ளே ஒடுங்கும் வேட்கையை அவளுக்குள் விதைப்பதை அதிர்வாய் உள்வாங்கத் துவங்கி இருந்தாள்.

முதல் திருமண வாழ்க்கையில் இரண்டு மூன்று ஆண்டுகளில் ஒரு நாள் கூட உணராத ஒரு விஷயம்..., மனதில் தீண்டலை, வருடலை, நெகிழ்வை, சுகமான தவிப்பை..., இரண்டே வாரங்களில் அவன் ஏற்படுத்துவது என்றால்..., இதுதான் வாழ்க்கை..., தான் வாழ்க்கையை வாழத் துவங்கிவிட்டோம்..., மனதுக்குள் அப்படி ஒரு நிம்மதி நிறைவு.

பேசவே மறந்திருந்த அவளை..., ஒரு தும்மல் போட்டால் கூட, இத்தனை மணிக்கு தும்மினேன் என அவனோடு பகிர்ந்துகொள்ள வைத்த செய்கை, அவனோடு பகிர்ந்துகொள்ள முடியாத வரைக்கும், மனதுக்குள் பாரமாக உணர வைத்த விந்தை..., இந்த நொடி, அவனை இறுக கட்டிக்கொள்ள வேண்டும்போல் இருந்தது.

அவனது முதல் கோபத்தை உணர்ந்த நாள்..., அது இனிதாக முடிந்த விதம்..., ஒரு மெல்லிய குறுகுறுப்பு. கூடவே...,

முகத்தில் ஒரு வெட்கப் புன்னகை. ‘நானா அப்படி…?’ அவளால் இன்னும் கூட நினைக்க முடியவில்லை.

தன் மாமியார் அரசியை நினைக்கையில்…, இப்படி ஒரு பெண்மணியால் இருக்க முடியுமா? என வியப்பின் உச்சிக்கே சென்றாள்.

அர்ஜூன் வீட்டில் வேலைகளை பகிந்து கொள்வதும், அதை அவள் தடுப்பதும் தினமும் நடக்கும் வாடிக்கை. அன்று அப்படித்தான்…, இரண்டு நாட்களாக அரசிக்கு உடல்நிலை சரியில்லாமல் போகவே…, சோர்வாக அவர் படுத்திருந்தார்.

சமையற்கட்டு பக்கமே அவரை அவள் விடவில்லை. காலையில் டிபன், மதியம் லஞ்ச்…, என அவள் வேலையில் பிசியாக இருக்கவே…, வீடு சற்று குப்பையாக இருக்கிறது என அர்ஜூனே துடைப்பத்தை எடுத்துக்கொண்டு வீட்டை பெருக்கச் சென்றான்.

அதைப் பார்த்தவள்…, பதறித் தடுக்க…, “உனக்கு இதே வேலையா போச்சு…, நீ நகரு…” அவன் அவளை விலக்கிச் செல்ல, அவன் பின்னால் ஓடினாள்.

அவன் கையில் இருந்து விளக்கமாரை அவள் வாங்குவதிலேயே குறியாக இருக்க, அவன் கையில் இருந்து அதை வாங்கவே முடியவில்லை.

அதென்னவோ அவன் கையில் விளக்கமாரைப் பார்க்கவே அவளுக்கு அவ்வளவு தவிப்பாக இருந்தது. “ப்ளீஸ்…, இது மட்டும் வேண்டாமே…” கண்கள் கலங்கி அழுதே விட்டாள்.

“ஏய் காவியா…, அழறியா…?” அவன் பதறிவிட, அறைக்குள் இருந்த அரசி, எழுந்து வந்தே விட்டார்.

“டேய்…, அவளை என்னடா சொன்ன? ஏன் அழறா…? காவியா…, என்னம்மா., எதுவா இருந்தாலும் சொல்லு…” அவளை அணைத்துக் கொண்டார்.

“அம்மா…, இருந்தாலும் உங்க புள்ளை மேலே உங்களுக்கு ரொம்ப நம்பிக்கைம்மா…, நான் எதுவுமே சொல்லலை…” பரிதாபமாக உரைத்தான்.

“அத்த…, அவரை பெருக்க வேண்டாம்னு சொல்லுங்க. அவர் கையில்…, விளக்கமாரைப் பார்க்க என்னால் முடியலை. அவர் வேற என்ன செய்தாலும் இதை…, நீங்களாவது சொல்லுங்க…” தேம்பினாள்.

“உஃப்…, இதுக்கா…? ஏன்…?” அவன் எதையோ துவங்கவே…, அவனை கண்களால் அடக்கினார்.

“சரிம்மா…, நான் சொல்றேன். அர்ஜூன்…, விடு…, நாங்க பாத்துக்கறோம்…” அவனிடம் உரைத்தவர்…, அவளை சமாதானம் செய்து அனுப்பினார்.

அவன் அங்கிருந்து அகன்றுவிட, அவளது கண்ணீர் நிற்க சற்று நேரமானது. அடுத்தநாள் சனிக்கிழமை…, ப்ரதீப்பை அழைத்துக்கொண்டு அவன் பார்லர் செல்ல, காவியாவை அழைத்து அமர வைத்து, அவளுக்கு தலைக்கு எண்ணெய் தேய்த்து விட்டார்.

தனக்கு மகள் இல்லாத குறையை அவர் ஆற்ற…, அவர் அன்பில் மூழ்கினாள். அதே நேரம்…, “காவியா…, உன்கிட்டே நான் பேசணும்னு நினைத்தேன்…” அவர் துவங்க, கேள்வியாக அவரை ஏறிட்டாள்.

“அர்ஜூனோட அப்பா…, அவனுக்கு ரெண்டு வயசா இருக்கும்போது என்னை விட்டு போய்ட்டார். அவர் மளிகைக் கடை வைத்திருந்தார். சின்ன கடைதான் என்றாலும்…, அதை என்னால் நடத்த முடியாமல், அதை வித்துட்டு, சென்னைக்கு கொஞ்சம் அவுட்டர்ல ஒரு சின்ன வீட்டை வாங்கிட்டு அங்கேயே போயிட்டேன்.

“உக்காந்து சாப்ட்டா மலையே கரையும்னு சொல்லும்போது…, என்னோட சேமிப்பு எல்லாம் எம்மாத்திரம்…? எனக்குத் தெரிந்த ஒரே வேலை தையல் தான். அதை வச்சுட்டு…, அக்கம் பக்கம் துணி தைத்து

கொடுத்தேன். பிறகு, சின்னதா ஒரு கிளாஸ் ஆரம்பிச்சேன்...

“என்னோட பொழுது எல்லாமே அந்த கடையில்தான். அர்ஜூனை எந்த அளவு கவனித்தேன் என்பது கூட ஞாபகம் இல்லை. ஆனா..., அவன்..., தன்னோட பொறுப்பை உணர்ந்து வளர்ந்தான். அவன் ஆசைப்பட்டு எதையுமே கேட்டதில்லை.

“ஸ்கூல் முடிச்சு வந்த உடன்..., கடைக்கு வந்து அங்கே ஒரு ஓரமா உக்காந்து படிப்பான். கடையை மூடும்போது..., நீ ரெஸ்ட் எடும்மான்னு சொல்லி என்னை உக்கார வச்சு, கடையை சுத்தம் செய்வான். அந்த சின்ன வயசிலேயே அவ்வளவு புரிதல்.

“தீபாவளி பொங்கலுக்கு கூட புது ட்ரெஸ் வேணும்னு கேட்டது கிடையாது. எடுத்து கொடுத்தால் போட்டுப்பான். அம்மா அப்பாவோட கஷ்டம் தெரிஞ்சு, எதுக்குமே ஆசைப்படாத குழந்தை கிடைப்பது வரம்..., அப்படி ஒரு வரமா எனக்கு அவன் இருந்தான்.

“காலேஜ் கூட கவர்மென்ட் காலேஜ்ல படிச்சான். மேலே படிச்சப்பவும் அதேதான். காலேஜ்..., எல்லாம் போன பிறகு, நைட் சமையல் அவனே செஞ்சுடுவான். காலையில் கூட, என்னோடவே எழுந்து எல்லா வேலையும் செய்வான்...,

“இப்போ புரியுதா..., அவன் விளக்கமாறு பிடிப்பதை கேவலமாவோ, கௌரவ குறைச்சலாவோ நினைக்கலைன்னு...” அவளிடம் கேட்க, அமோதிப்பாக தலை அசைத்தாள்.

“காலேஜ் படிக்கும்போதே, கவர்மென்ட் வேலைக்குப் போகணும்னு ஒரு வெறி., முதல் அட்டம்ட்டிலேயே வேலை..., என்னைய அந்த கடையை விட்டுட்டு வந்துடும்மான்னு சொல்லி ரொம்ப கெஞ்சினான்.

“நீ ஒரு கல்யாணம் பண்ணிக்கோ..., எல்லாத்தையும் விட்டுட்டு ஓடி வந்துடுறேன்னு சொன்னேன். அப்படி

இருக்கும்போதுதான்…, ஒரு மூணு வருஷத்துக்கு முன்னாடி, அந்த ஆக்சிடண்ட்…, எனக்கு தலையில் நல்ல அடி. பிழைப்பேனா மாட்டேனா என்ற போராட்டம்…

“அந்த நேரம்தான்…, அவன் வாழ்க்கையில் அந்த விஷயம் நடந்தது…, உனக்கு எதைச் சொல்கிறேன் என்று புரியுதா?” அவர் வினவ, திகைப்பாய் அவரைப் பார்த்தவள், ஆமோதிப்பாக தலை அசைத்தாள். அதற்குமேல் அவர் எதையாவது சொல்வாரா என எதிர்பார்க்க, அந்த விஷயத்தை அத்தோடு விட்டவர்,

“ரெண்டு மாசத்தில் நான் வீட்டுக்கு வந்துட்டாலும், கிட்டத்தட்ட ஒரு வருஷம்…, நானே கதி என்ற அளவுக்கு இருந்தான். திடீர்ன்னு ஒரு நாள் வந்து ஒரே அழுகை…, என்னன்னு கேட்டதுக்கும் பதில் சொல்லவே இல்லை. என் பிள்ளை அழுது நான் பார்த்த நாள்…” அன்றைய நாளுக்கே அவர் சென்றுவிட்டது புரிந்தது.

“என்னால் ஒரு பொண்ணோட வாழ்க்கை அழிஞ்சு போச்சுன்னு ஒரே புலம்பல். அவனை சமாதானம் செய்து…, தேற்றவே எனக்கு ஒரு நாள் ஆச்சு…, அப்போதான்…, உன்னைப் பற்றியும், ப்ரதீப் பத்தியும் சொன்னான். அடுத்து நடந்தது என்னன்னு உனக்கு அவனே சொல்லுவான்.

“எது எப்படியோ…, உன்னை அவன் வாழ்க்கையில் கொண்டு வரணும்னு ஆசைபட்டப்போ…, எனக்கு மறுக்கவே தோணலை. அவன் வாழ்க்கையின் எல்லா முடிவையும் அவன் சரியாகத்தான் எடுத்தான் என்ற நம்பிக்கை. அதையும் மீறி…, என் மகனை நான் நல்லவனா வளர்த்திருக்கிறேன் என்பதை எண்ணி ரொம்ப சந்தோஷப்பட்ட நிமிஷம்…” அவர் முகத்தில் அப்படி ஒரு நிம்மதியையும் கனிவையும் அவள் கண்டாள்.

“இப்போ…, அவன் வாழ்க்கையில் நீயும் வந்துட்ட. எனக்கு ரொம்ப சந்தோசம். ஆனா ஒரே ஒரு விஷயம்…, அவன் வீட்டு வேலையில் உதவுவதை நீ தடுக்காதே. அது அவனோட

இயல்பு. அதே மாதிரி..., நான் என்ன நினைப்பேன் என்று நினைத்து குழப்பிக்காதே.

“என்னைப் பார்த்தால்..., எனக்கு மட்டும்தான் என் பையன் செய்யணும் என நினைக்கும் கொடுமைக்கார மாமியாராகவா தெரியுது...?” அவர் கேட்க, வேகமாக மறுப்பாக தலை அசைத்தாள்.

“சரி போம்மா..., எண்ணெய் ரொம்ப ஊறினால் ஒத்துக்காம சளி பிடிக்கப் போகுது..., போ...” அவளை அனுப்பினார்.

அரசி சொன்னவற்றைக் கேட்ட காவியாவுக்கு..., தான் எப்படி உணர்கிறோம் என்றே தெரியவில்லை. அவர் சொன்னதில்..., எதற்குமே ஆசைப்படாத அர்ஜூன்..., அந்த வார்த்தைகள் அவள் காதில் திரும்பத் திரும்ப ஒலித்தது.

அவன் ஆசைப்பட்டு கேட்ட ஒரு விஷயத்தை தான் கொடுக்காத..., அனுமதிக்காத விதம்..., இப்பொழுதே அவனுக்கு நூறு முத்தம் கொடுக்குத்துவிடும் வேகம்..., தன் மனதின் போக்கை எண்ணி அதிர்ந்து போனாள்.

தன் மனதுக்குள் அவன் முழுதாக நிறைந்துவிட்டான் என்பதை அந்த நிமிடம் அவள் உணர்ந்து கொண்டாள். ஆனாலும்..., தங்கள் வாழ்க்கை முழுமை அடையும் ‘அந்த’ விஷயத்தை இயல்பாக தன்னால் ஏற்க முடியுமா? மனம் குழம்பித் தவித்தது.

சிலிர்ப்பாக..., திருப்தியாக..., ஆசையாக..., உணர்ந்திராத விஷயம்..., வலியை மட்டுமே அறிமுகப்படுத்திய விதம்..., இதயம் கனத்துப் போனது. அதே நேரம்..., தன் சுயநலத்துக்காக..., அவனைத் தவிக்க விடுகிறோமோ? நினைக்கவே நெஞ்சம் கனத்தது.

அப்படி ஒரு தவிப்பை அவன் வெளிப்படுத்தவில்லை என்றாலும்..., ஒரு பெண்ணாக, மனைவியாக அவனுக்கு தான் நியாயம் செய்யவில்லை என்பது மட்டும் புரிந்தது. மாமியாரின் பேச்சை கேட்ட பிறகு, ஒரு மாதிரி

நெகிழ்ச்சியான மனநிலையில் இருந்தாள் என்றே சொல்லலாம்.

அவள் குளிக்கத் துவங்க..., பார்லர் சென்றிருந்தவர்கள் வந்துவிட்டது, அவர்கள் சத்தத்தின் மூலம் அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது. “அம்மா..., இங்க பாருங்க..., நானு...” தன் ஹெர் ஸ்டையிலை தாயிடம் காட்ட விரும்பினான் ப்ரதீப்.

“அம்மா குளிச்சுட்டு வரேன் ப்ரதீப்..., வெயிட் பண்ணு...” அவள் குரல் கொடுக்க, அவன் சென்றுவிட்டது தெரிந்தது.

சற்று நேரத்தில்..., குளியலறையின் கதவு மெதுவாக தட்டப்பட, ஒரு வேளை பிரம்மையோ என அவள் நினைக்க, சற்று நேரத்தில் மீண்டும் தட்டப்படவே, ஷவரை நிறுத்தியவள், படபடப்பாய் காத்திருந்தாள்.

கதவைத் தட்டுவது யாரென்று அவளுக்குத் தெரியாதா என்ன? இதயம் படபட்டத்தது. என்னவென்று கேட்கக் கூட நாக்கு எழாமல் அமைதியாக, “காவியா..., என்னோட ஷேவிங் கிட் உள்ளே இருக்கு..., அதைமட்டும் கொஞ்சம் எடுத்து கொடேன்...” அர்ஜூன் குரல் கொடுத்தான்.

அவன் கேட்டதை எடுத்துவிட்டாலும்..., கதவைத் திறக்க பெரும் தயக்கம். அவன் தவறாக எதுவும் நடந்துகொள்ள மாட்டான் என்றாலும்..., சில பகிரப்படாத ரகசியங்கள் இருக்கையில்..., அவள் அமைதியை புரிந்துகொண்டவன்,

“ஓகே..., நீ குளிச்சுட்டு வா..., நான் பிறகு பாத்துக்கறேன்...” அவன் விலகிச் செல்ல முயல்கையில், தாழ்ப்பாள் விலகும் ஓசை கேட்க, சற்று தாமதித்தான்.

கதவை லேசாகத் திறந்தவள், தன் இடக்கரத்தை மட்டும் வெளியே நீட்டி, அவனிடம் கொடுக்க முயன்றாள். ஈரத்தில் குளித்திருந்த அவள் விரல்களைப் பார்த்தவன், அவள் விரல்களை அழுத்தமாக பற்றிக்கொண்டு, தன் கிட்டை பெற்றுக் கொண்டான்.

அவள் கைகளை வெடுக்கென உருவிக்கொள்ளாதது சற்று தைரியமளிக்க, “காவியா…” மென்மையாக அழைத்தான்.

அவளுக்கோ…, அவன் தொடுகையும், அழைப்பும் ஒரு மாதிரி அவஸ்தைக்கு உள்ளாக்க, எங்கே கால்கள் தள்ளாடி விழுந்து விடுவோமோ என அஞ்சினாள். ஆனாலும்…, கதவை அவன் முகத்தில் அறைந்து சாற்ற முடியாமல்…, விழிகள் மட்டும் தெரிய, மெதுவாக, தயக்கமாக எட்டிப் பார்த்தாள்.

உயிர்கொண்ட ஓவியம் போன்ற அவள் தோற்றம்…, ஒரு கணவனாக, ஆண்மகனாக அவன் உணர்ச்சிவசப்படவில்லை என்றால்தான் ஆச்சரியம். தன்னை மீறி…, இதழ்வரை கொண்டுசென்ற அவள் கரத்தை…, அவள் முகத்தில் தெரிந்த மெல்லிய அதிர்ச்சியைக் கண்டு கைவிட்டவன், அவள் கரத்தை விடுவித்தான்.

அவன் செய்ய முயன்ற செய்கை…, அதை அவன் தவிர்த்த விதம்…, அவளுக்கு மனம் கலங்கிப் போனது. “தேங்க்ஸ்…” அவன் சென்றுவிட, கதவில் சாய்ந்து கொண்டவளுக்கு, அந்த உணர்வை தாங்கிகொள்ளவே சற்று நேரமானது.

காலை உணவு உண்ண தாமதமாவதை உணர்ந்து, வேகமாக குளித்து முடித்து வெளியே வந்தவள், அவன் ஷேவிங்கை முடித்துவிட்டு, ஹாலில் இருந்த ‘பேன்’னை சுத்தம் செய்வதைப் பார்த்து,

“சாப்ட்டுட்டு இதையெல்லாம் செய்யலாம் தானே…, முதல்ல சாப்பிட வாங்க…” அவனை அழைத்தாள்.

“ஒரு அரைமணி நேரம் காவியா…, நாலு ‘பேன்’னையும் துடைச்சுட்டு அப்புறமா வரேன்…” சொன்னதைப் போலவே செய்தான்.

சாப்பிட்டு முடித்தவன்…, ஹாலில் இருந்த ஷோக்கேசை சுத்தம் செய்ய, “அதென்ன…, உங்களுக்கு வேலை

செஞ்சுட்டே இருக்கணுமா...?” போலியாக அலுத்துக் கொண்டாள்.

“ம்ச்..., அப்படியே பழகிடுச்சு காவியா. இப்போ சும்மா இருக்கத்தான் ஒரு மாதிரி இருக்கு..., எங்க அம்மா துணி தைக்கும்போது..., காஜா பையனே நான்தான்..., அம்மா ஒரு நாளைக்கு நாலு சட்டை தைத்தால்..., நாலு சட்டைக்கும் காஜா போடாமல் தூங்க மாட்டேன். அதை அயன் பண்ணுறது, பார்சல் பண்ணி, நேம் எழுதி..., அப்படியே பம்பரமா இருந்துட்டு, ஆபீஸ் வேலையெல்லாம் ஒண்ணுமே இல்லை...” வெகு இயல்பாகச் சொல்ல, அதைக் கேட்டவளுக்கோ..., அவனது கஷ்டம் அனைத்தும் கண்முன் விரிந்தது.

அவள் பார்வை அதை அவனுக்கு வெளிப்படுத்த..., “இவ ஆரம்பிச்சுட்டா..., கண்ணுல தண்ணி விட்டுடாத தாயே..., சீக்கிரமே முடிச்சுடுறேன்...” தான் வேலை செய்வதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்னும் அளவுக்கு யூகித்தவன், அவள் மன மாற்றத்தை உணரவில்லை.

அன்று மீன் வாங்கி வந்தவன்..., தானே அதை சமைத்துக் கொடுக்க, அவன் செய்கைகளில் மொத்தமாக மூழ்கிக் கொண்டிருந்த அதே நேரம்..., அவன் கோரிக்கையை நிறைவேற்றும் வேட்கையும் அதிகரித்ததுதான் விந்தை.

ஒரு கட்டத்தில்..., தன்னை மீறி..., “அன்னைக்கு கொடுக்கறேன்னு சொன்னதை வேண்ணா...” அந்த வார்த்தைகளை முடிக்கக் கூட முடியாமல் நிறுத்திவிட்டாள்.

பெரும் வெட்கம் வந்து தடுத்ததே காரணம். ஆனால்..., அவனோ..., இயல்பாக நடக்க வேண்டிய ஒன்றை, இவ்வளவு கஷ்டப்பட்டு வர வைப்பானேன்..., அப்படியா நான் அவளிடம் நடந்து கொள்கிறேன்..., என்ற கோபம் முளைவிட,

“நான் அன்னைக்கே உன்கிட்டே சொல்லிட்டேன் காவியா. உன்னை கஷ்டப்படுத்தி..., எனக்கு எதுவும் வேண்டாம்னு. பிறகு ஏன்...? என்னைப் பார்த்தால்..., அப்படி அலையிறவன் மாதிரியா இருக்கு...?” இன்னும் என்ன சொல்லியிருப்பானோ..., தாயின் வருகை அவனைத் தேக்க, சட்டென அங்கிருந்து வெளியேறினான்.

அறைக்குள் சென்று சட்டையை எடுத்து மாட்டியவன், விருட்டென சென்று, வண்டியை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டான்.

கண்களில் நீர் தேங்க..., விக்கித்து நின்றுவிட்டாள் காவியா.

***

# பகுதி – 20

மதியம் ஒரு மணிக்கு வெளியே சென்றவன், மூன்றுமணியை எட்டியபிறகும் வராமல் போக..., அவனுக்காக சாப்பிடாமல் காத்துக் கொண்டிருந்த காவியா தவித்துப் போனாள்.

“அவன் எப்போ வேண்ணா வரட்டும்மா..., நீ சாப்பிடு...” நூறு முறையாவது அரசி சொல்லிவிட்டார்.

“இல்லத்த..., அவர் வரட்டும், சேர்ந்தே சாப்பிடுறேன்...” தன் கலக்கத்தை மறைக்கவே அவளுக்கு பெரும் பாடாக இருந்தது.

“முதல்ல அவனுக்கு போனைப் போடு..., ப்ரண்ட்ஸ் யாரையாவது பார்த்தால் கூட இப்படியா...? வீட்டில் ஒருத்தி காத்துட்டு இருப்பான்னு தெரிய வேண்டாம்...” மெல்லிய கோபம் அவரிடம்.

தன் அலைபேசியை எடுத்தவளுக்கு..., அவன் தன் அழைப்பை ஏற்பானா என்பதே பெரும் பயமாக இருக்க, அழைக்காமல் இருக்கவும் முடியாமல், அவன் அலைபேசிக்கு முயன்றாள்.

முதல் ரிங் முடியும் முன்பே எடுத்தவன்..., “நான் லைப்ரேரியில் தான் இருக்கிறேன்...” தான் இருக்கும் இடத்தை அவளுக்கு தெரிவித்தான்.

அவ்வளவு கோபத்திலும்..., அவன் அலைபேசியை எடுத்தது நிம்மதியளிக்க, கூடவே..., அவன் இருக்கும் இடத்தையும் உரைக்கவே..., அவன்மேல் நேசம் பொங்கியது.

“வீட்டுக்கு வாங்க..., சாப்பிடலாம்..., பசிக்குது...” அவன் எதைச் சொன்னால் மறுக்க மாட்டான் என்பதை உணர்ந்து, சரியாக அடித்தாள்.

“இன்னுமா நீ சாப்பிடலை...” கிட்டத்தட்ட கத்தியவன், “வரேன்...” உரைத்தவன், அடுத்த இரண்டே நிமிடத்தில்

வீட்டில் இருந்தான்.

ப்ரதீப்பும்..., அரசியும் தூங்கி விட்டிருக்க..., அறைக்குள் நுழைந்து சட்டையை மாற்றியவனது முன்னால் சென்று நின்றாள்.

அவன் அவளைக் கண்டுகொள்ளாமல் தன் வேலையிலேயே கவனமாக இருக்க..., “என்னங்க...” மெதுவாக அழைத்தாள்.

அவன் வார்த்தையில் திட்டிவிட்டால் கூட பரவாயில்லை..., அவனது பாராமுகம்..., அவளை வதைக்க, தவிப்பாய் அவனை ஏறிட்டாள்.

“வா சாப்பிடலாம்..., அதான் பசிக்குன்னு சொன்னியே...” அறையை விட்டு வெளியே செல்ல முயன்றான்.

“ஒரு நிமிஷம் நான் சொல்றதை கேட்டுட்டு கோபப்படுங்க...” அவள் குரலில் இருந்த கலக்கம், அவனை மீறிச் செல்ல விடவில்லை.

‘சொல்...’ என்பதுபோல் அழுத்தமாக அவன் நின்றுகொள்ள,

“எனக்கு..., நான்..., அது என்னன்னா...” அப்பொழுது சட்டென சொல்லிவிட முடிந்த விஷயம்..., இப்பொழுதோ பூதாகரமாக மிரட்டியது.

அவனது தாடையின் இறுக்கம் அதிகரிக்கவே..., நிச்சயமாக பயந்தே போனாள். தன் வெட்கம் இப்பொழுது எதற்கும் உதவப்போவதில்லை என்பதை உணர்ந்தவளுக்கு..., அதை எப்படி உடைக்க என்பதுதான் புரியவில்லை.

அவளது வெட்கத்தை உடைக்கவேண்டியவன் வேடிக்கை பார்க்கையில்..., அவள் என்ன செய்வதாம்...?

‘இது வேலைக்கே ஆகாது...’ அவன் திரும்ப முயல,

“சரியான விஷயத்தை..., தப்பான நேரத்தில் சொல்லிட்டேன்..., அதான் இந்த குழப்பம்...” படபடவென

வார்த்தைகளைக் கொட்டியவள், தான் சொன்னது அவனுக்கு கேட்டதா என அவன் முதுகையே வெறித்திருந்தாள்.

ஒரு நொடிதான்..., சட்டென அவள் பக்கம் திரும்பியவனது முகத்தில் ஆயிரம் மத்தாப்பூவின் ஒளி.

“என்ன சொன்ன..., என்ன சொன்ன..., காது சரியா கேக்கலை...” காதை ஒற்றை விரலால் குடைந்தவன், அவளை நெருங்கினான்.

“கேக்கலன்னா பரவாயில்லை..., பசிக்குது..., வாங்க போகலாம்...” இப்பொழுது அவள் மிஞ்சினாள்.

“அதெப்படி முடியும்...” ஒற்றைக் கையால் அவளை இடையோடு கட்டி இழுத்து அணைத்தவன், கட்டிலில் அவளை அமர்த்தினான்.

“என்ன பண்றீங்க...?” அவள் பதற, அவளது பதட்டத்தை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

“சரியான விஷயத்தை..., தப்பான நேரத்தில் சொன்ன உனக்கு தண்டனை வேண்டாமா...? ம்...” புருவம் உயர்த்தி அவன் வினவ, அவன் அணைப்பில்..., கோடி அலைகளின் ஆர்ப்பாட்டம் அவள் தேகத்தில்.

“அதுக்கு...?” கிசுகிசுப்பாக ஒலித்த அவள் குரல், கற்றாய் அவனைத் தீண்ட, அவள் பார்வையோ..., தயங்கித் தயங்கி அவன்மேல் தாவியது.

“அன்னைக்கு நான் கொடுக்கட்டுமான்னு கேட்டேன்..., இன்னைக்கு அது கிடையாது...?” அவள் மூக்கை உரசியவன்..., அவள் விழிகளின் கேள்விக்கு,

“இன்னைக்கு நீ கொடுக்கற...” அவள் காதுக்குள் உரைக்க, அவன் மீசைமுடி, அவள் செவி மடலைத் தீண்டி, தீப்பிழம்பாக்கியது.

“ஹாங்..., அதெல்லாம் முடியாது...” வேகமாக மறுக்க,

“அப்போ நீயும் இங்கே இருந்து போக முடியாது...” நிச்சயம் நான் சொன்னதைச் செய்வேன் என அமர்ந்திருந்தான்.

அவனே இதுவரைக்கும் கொடுக்காத ஒன்றை அவள் எப்படி கொடுப்பதாம்? ஒரு பெண்ணாக முதல் அடி வைக்க பெரும் தயக்கம்.

“ப்ளீஸ்...” அவன் கண்களும், குரலும் அவளிடம் கெஞ்சிற்று.

‘ஒரு முத்தத்துக்காக அவனைக் கெஞ்ச விடுவதா...?’ அவள் மனம் கேள்வி கேட்க, அவன் நெற்றி முடியை ஒதுக்கியவள், பட்டும் படாமல் இதழ் பதித்து விலகினாள்.

“ம்ச்..., இதை எங்க அம்மாகிட்டேயே நிறைய வாங்கி இருக்கிறேன்...” அவன் சொல்ல,

‘நெற்றி முடியை ஒதுக்கியபொழுதே ஏன் சொல்லாமல் இருந்தானாம்...’ சிணுங்கிய அவளது மனமோ..., அவன் கண்களில் வழிந்த எதிர்பார்ப்பில், அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள்.

“இதை ப்ரதீப்பே ஆயிரம் முறை கொடுத்துட்டான்...” தன் இதழ்களை நாவல் ஈரமாக்கியவன்..., அவள் இதழ்களை தயக்கமே இல்லாமல் மொய்த்தான்.

‘ஆ...’ அவள் விழிகள் வியப்பையும், எதிர்பார்ப்பையும், அதிர்ச்சியையும் வெளிப்படுத்த, “ஓகே..., நாம இதை ஷேர் பண்ணிக்கலாம்...” என்னவோ ஒரு மிட்டாயை பகிர்ந்துகொள்ளலாம் என்னும் தோரணையில் உரைக்க, அவள் இதயம் மத்தளம் கொட்டியது.

“ஓக்கேயா...?” அவன் கேட்க, விழிகளை மூடிக் கொண்டாள். தன் இதழின் அருகில்..., சில சென்டிமீட்டர் இடைவெளியில் இருந்த அவள் இதழ்களை பார்த்தவன்..., மௌனமான அவள் சம்மதம் உணர்ந்து..., அவள் கன்னம் தாங்கி..., மென்மையாக தன் இதழைப் பதித்தான்.

ஒரு நொடியில் விலகிவிடுவான் என அவள் எதிர்பார்க்க..., இன்னும் அழுத்தியவன்..., அவள் இதழ்களை மென்மையாக தனக்குள் உள்வாங்கிக் கொண்டான். ஒரு மாதிரி கதகதப்பாய்..., அடி நாக்கில் தித்திப்பாய்..., தேகம் முழுவதும் சிலிர்ப்பாய்..., அவன் இதழ் முத்தத்தில் மூழ்கிப் போனாள்.

அவன் வலக்கரம் அவள் காது மடலை வருட, இடக்கரமோ..., விரிந்திருந்த அவள் கூந்தலுக்குள் நுழைந்து..., அழுத்தமாக வருடியது. பிரிய மனமின்றி..., அவள் இதழ்களுக்குள் இன்னும் தன் தேடலை அதிகரிக்க, தன் கரத்தால்..., அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

சுற்றுப்புறம் உறைந்து போக..., தேகம் மொத்தமும் நெகிழ..., உருகிக் கரைந்தாள். மென்மையாக இருந்த அவனது இதழ் தீண்டல்..., அவள் உயிர்வரை தீண்டும் வகையில் முற்றுகையாக மாற, இதழ் தீண்டல் இப்படித்தான் இருக்குமா? உயிர்வரைத் தூண்டுமா...?

விலகவே வேண்டாம் என வதைக்குமா...? விலகிவிடக் கெஞ்சுமா...? ஒரு முத்தத்தில் அவளை துவழச் செய்தான். மூச்சுக்காற்றுக்கு அவள் திணற..., அவளைவிட்டு நிதானமாக விலகியவன்..., அவள் கொடுத்த முத்தங்களை, அவள் கன்னத்திலும் நெற்றியிலும் திருப்பிக் கொடுக்க மறக்கவில்லை.

அவளை தன்னோடு இறுக்கிக் கொண்டவன்..., “புடிச்சதா...?” அவள் காதில் கிசுகிசுக்க..., அவளுக்கோ..., உலகமே மறந்திருக்கையில், என்னதான் நினைவிற்கு வருமாம்.

“காவியா..., பீல் பண்ணியா...? புடிச்சதா...? புடிக்கலையா...? ஏய்..., ஏதாவது சொல்லு...” அவன் கேட்க, இன்னும் அழுத்தமாக அவன் கழுத்தில் புதைந்து கொண்டாள்.

“ம்...” மெல்லிய முனகல் மட்டுமே அவளிடம்.

தன் கழுத்தில் ஈரம் படிவதை உணர்ந்தவன், “காவியா…? ஹெர்ட் பண்ணிட்டனா…? என்னம்மா…, சொன்னால் தானே தெரியும்…” அவள் கன்னம் தடவினான்.

“நான் இந்த உலகத்திலேயே இல்லை…” இதற்குமேல் ஒரு ஆண்மகனாக அவனுக்கு என்ன வேண்டும். தன் மாய உலகத்துக்குள் அவளை இழுக்க முடிகிறது என்றால்…, அவள் நெற்றியில் இதழ் பதித்தவன், ஆதரவாக, அணைவாக அவளை அணைத்துக் கொண்டான்.

***

# பகுதி – 21

அலுவலகத்தில் முனைப்பாக வேலை செய்துகொண்டிருந்தாள் காவியா. அவர்கள் அலுவலகத்தில் இருந்த மீட்டிங் ஹாலில் மூட்டை மூட்டையாக ஃபயில்கள் குவிக்கப் பட்டிருக்க, அவற்றை அடுக்கிக் கொண்டிருந்தாள்.

அவளது உதவிக்கென மனோ மற்றும் இன்னும் சிலர் இருக்க..., பிரிக்க பிரிக்க வந்த மூட்டைகளைப் பார்த்தவளுக்கு மூச்சடைத்தது.

“இதென்ன இவ்வளவு ஃபயில்...” அவள் மனோவிடம் கேட்க, அவள் கேட்டது காதிலேயே விழவில்லை என்ற பாவனையில் அவள் வேலை செய்ய, அவளைத் தாண்டி நின்ற விஜி, மனோவை வித்தியாசமாகப் பார்த்தாள்.

விஜி அங்கே ஏஎஸ்ஐ என்பதால் அனைவரோடும் சரளமாக உரையாடவேண்டி இருந்தது.

காவியாவின் முகத்தில் பெரும் குழப்பமும், கேள்வியும் தொங்கி நிற்க, மனமோ..., ‘இவங்க என்னோட வேலையை, நான் இல்லாதப்போ பொறுப்பு வேலையா பாத்துகிட்டாங்க..., அதுக்கு நான் என்ன செய்ய முடியும்? அதற்கா என்மேல் இவ்வளவு கோபம்...?’ அவளுக்குப் புரியவே இல்லை.

மனோ வாயைத் திறக்காமல் போகவே..., “அது ஒண்ணுமில்லை காவியா..., நம்ம கவர்மென்ட் ஆபீஸ்க்கே ஒரு சாபக்கேடு உண்டே..., ஐம்பது ஃபயில் கேட்டால், ஐந்து ஃபயில் அனுப்புவாங்க. இங்கே அந்த நேரம் கிட்டத்தட்ட ஒரு அறநூறு ஃபயில் வேண்டி இருந்தது.

நம்ம ஆட்கள் புத்திசாலித்தனமா கேட்பதா நினைத்து, ஆறாயிரம் ஃபயில் வேண்டும்னு எழுதிட்டாங்க..., அந்த நேரம் டாப்பில் இருந்தவர் ரொம்ப நல்லவர் போல, மொத்தத்தையும் சேங்க்ஷன் பண்ணிட்டார். ஒரு லாரியில்

வந்து இறங்கிய லோடைப் பாத்து எல்லாரும் மிரண்டுட்டோம்.

அந்த நேரம் வேற வழியே இல்லாமல் இந்த மீட்டிங் ரூம்ல கொண்டுவந்து லோட் பண்ணிட்டாங்க. தேவைபட்டவங்க வந்து எடுத்துட்டு, தேவையில்லன்னா, அப்படியே வீசிட்டு போக, மாசம் போகவே..., எல்லாம் குப்பை மாதிரி சேர்ந்துடுச்சு.

எப்பவுமே நமக்கு மீடிங்க்னா ப்லாக்லதான் வைப்பாங்க. இப்போ என்னன்னா, இங்கேயே ஒரு ரூம் இருக்கே..., பிறகேன் அங்கே வைக்கணும்னு டிடி கேக்க..., இப்போ எல்லாத்தையும் நம்ம தலையில் கட்டிட்டாங்க.

“உனக்கு சைனஸ், அலர்ஜி தொல்லை எல்லாம் எதுவும் இல்லையே...” அவள் அக்கறையாகக் கேட்க, இல்லை என தலை அசைத்தாள்.

“இல்ல..., ஏன் கேட்டேன்னா அப்படி இருந்தால் கர்ச்சீப் எதையாவது மூக்கில் கட்டிக்க சொல்லலாம்னுதான்...” விஷமமாக அவள் உரைக்க,

“அடிப்பாவி..., நானும்..., என்னை அக்கறையா போகச் சொல்லப் போறியோன்னு நினைத்தேன்...” கிளுக்கிச் சிரிக்க, மனோ அவளை ஆத்திரமாக முறைப்பது பார்வையில் விழுந்தது.

“உங்க வேலையை எல்லாம் மத்தவங்களே பாப்பாங்களா...?” வெடுக்கென அவள் சொல்ல,

“மனோ..., இது ஒரு சாதாரண பன்..., இதுக்குப்போய்...” விஜி இடை புகுந்தாள்.

“பன் பண்ண இது நேரமில்லை..., வேலையைப் பாருங்க...” அவளிடமும் சிடுசிடுக்க, விஜி இரு புருவம் உயர்த்தி, காவியாவிடம் என்னவென்று கேட்க, தோளைக் குலுக்கியவள், வேலையைப் பார்ப்போம் என இதழ் அசைவில் உரைக்க, வேலையில் கவனமானார்கள்.

அன்றைக்கு அர்ஜூன் ரிபோர்ட் கொடுக்கும் நாள் என்பதால், அவளைத் தேடி வந்தவன், "எஸ்ஓ மேடம்..., எங்கே எஸ்ஐயை சீட்ல காணோம்...?" பார்வையை சுழற்றியவன், அவரிடம் கேட்டான்.

"பொண்டாட்டியை எங்கேன்னு கேக்க வேண்டியதுதானே..., அதென்ன எஸ்ஐ...".

"என் பொண்டாட்டியை தேடி வந்திருந்தால் அப்படி கேட்டிருப்பேன். ஆனா, நான் எஸ்ஐ மேடத்தை தானே தேடி வந்தேன் அதான்..." அவன் விளக்கம் கொடுக்க,

"அவங்க மீட்டிங் ரூமை கிளீன் பண்றாங்க..., அனேகமா இப்போ வந்துடுவாங்க. போய் ரொம்ப நேரமாச்சு..." அவர் உரைக்கவே..., அவள் மேஜைக்கு எதிரில் அமர்ந்தான்.

காவியாவின் மேசையைப் பார்க்க..., சில கட்டு பேப்பர்களை கீழே வைத்திருந்தவள், அவற்றை ஃபயில் பண்ண தைத்துக் கொண்டிருப்பது அவள் திறந்து வைத்திருந்த ஃபயிலை வைத்து யூகித்துக் கொண்டான்.

கூடவே..., அவள் இந்த வேலையை சில நாட்களாக தொடர்ந்து செய்கிறாள் என்பதற்கு அறிகுறியாக சில ஃபயில்கள் வலப்பக்கம் கட்டாக அடுக்கி வைக்கப் பட்டிருக்க..., 'அம்மாடியோ..., இத்தனை பேப்பரையும் தைக்க எப்படியும் மாசக்கணக்கா ஆகும் போல இருக்கே...' எண்ணியவன், இரண்டு மூன்று நாட்களாக தோள் வலிக்கிறது என அவள் சொல்வதற்கான காரணத்தை உணர்ந்து கொண்டான்.

அவன் வந்த ஐந்தாவது நிமிடம்..., பெண்கள் அனைவரும் அங்கே வர, காவியா மிகவும் களைத்துப் போயிருப்பது அவளைப் பார்க்கையிலேயே தெரிந்தது.

அவள் இருக்கையில் அமர, அவள் மேஜைமேல் இருந்த வாட்டி பாட்டிலை திறந்து அவள் கையில் கொடுத்தான். கர்ச்சீப்பால் முகத்தை துடைத்தவள், அவனிடமிருந்து பாட்டிலை வாங்கி, ஒரே மூச்சாக குடித்தாள்.

அதைப் பார்த்த மனோ..., “சிலருக்கு வந்த வாழ்வு...” அவளாக பேசுவதுபோல் அவர்களைக் குத்திக் காட்ட..., யாருக்கு புரிந்ததோ இல்லையோ..., காவியாவுக்கு, அவள் தன்னைத்தான் சொல்கிறாள் என்பது தெளிவாகப் புரிந்தது.

‘இது வேறு ஏதோ கோபம்போல் தெரிகிறதே...’ காவியா அவளை மேல்பார்வையாக நோக்க..., அவள் அர்ஜூனைப் பார்த்தவாறு இருப்பதைப் பார்த்தவள், திக்கென அதிர்ந்து போனாள்.

அவள் சாதாரணமாகப் பார்த்திருந்தால் பரவாயில்லை..., ஆனால்..., சிறு கோபமும், ஏக்கமுமான அந்த பார்வையைப் பார்த்தவளுக்கு, ‘இவள் எப்படி என் கணவனை அப்படிப் பார்க்கலாம்...’ பொசசிவ் குணம் தலை காட்டியது.

அர்ஜூனை அந்த பேச்சு எட்டினாலும், அதற்கு அவன் பெரிய முக்கியத்துவம் எதையும் கொடுக்கவில்லை. அன்றைய அரைமாத அறிக்கையைக் கொடுத்தவன், “காவியா..., இந்த ஃபயில் எல்லாம் தைக்க நான் வேண்ணா ஹெல்ப் பண்ணவா..., கை வலிக்குன்னு சொன்னியே..., வீட்டுக்கு எடுத்துட்டு வந்தா நானே பண்ணிக் கொடுத்துடுவேன்...” அக்கறை வழிந்தது.

“நீங்க எனக்கு வீட்டில் ஆயிரம் வேலை செய்து கொடுக்கலாம். ஆனா..., ஆபீஸ் வேலையில் ஒரு துரும்பைக் கூட எனக்காக என்றாலும் நீங்க செய்யக் கூடாது...” அவன் அவளுக்காக வீட்டில் செய்வது வேறு..., இது வேறாயிற்றே.

“ஓகே..., நோ கோபம்..., நான் வரேன்...” அவன் கிளம்புகையில், அவன் பின்னால் வந்தாள்.

“என்னம்மா..., எதையோ கேக்கணும் போல...” பைக்கில் அமர்ந்தவன், அவளிடம் கேட்டான்.

“மனோவுக்கு என்மேல் என்ன கோபம்னு தெரியலை..., ஆனா..., தேவையில்லாமல் என்மேல் காயறா...,

உங்களுக்கு அதைப்பற்றி ஏதாவது தெரியுமா...?” அவனையே வெறித்தாள்.

“ஓ..., அதையெல்லாம் நீ கண்டுக்காதே..., விடு...” வண்டியைக் கிளப்ப முயன்றான்.

“அப்போ ஏதோ இருக்கு அப்படித்தானே...” ஒரு அடம்பிடிக்கும் குழந்தையின் முகபாவம் அவளிடம்.

“போசசிவ்வா பொண்டாட்டி...” அவன் சீண்ட,

“ஏன் இருக்கக் கூடாதா...?” விட்டால் அவனை இங்கேயே இறுக்கிக் கொள்வேன் என்ற வேகம் அவளிடம்.

“கட்டாயம் இருக்கணும்...” சரண்டர் ஆனவன், “அவளுக்கு என்மேல் ஒரு கிரேஸ்..., மறைமுகமா என்கிட்டே சொல்லிப் பார்த்தா..., நானும் நாசூக்கவே முடியாதுன்னு சொல்லிட்டேன். இப்போ உன்னை கல்யாணம் பண்ணிகிட்டேன் தானே..., அவளுக்கு அந்த கோபம்..., கொஞ்ச நாளில், அவளுக்குன்னு ஒருத்தன் வந்து, அவ முந்தானையைப் பிடிச்சுட்டு சுத்தும்போது..., இதெல்லாம் மறந்துடும்...” மென்மையாக விளக்கினான்.

“இப்போ நீங்க என் புருஷன்..., இன்னும்...” மேலே என்ன சொல்லியிருப்பாளோ, அவனது புன்னகை முகம் அதைத் தடுக்க..., ‘என்ன சிரிப்பு...’ என்ற கோபத்தில் அவனை முறைத்தாள்.

“உன் புருஷனை ஆயிரம்பேர் பார்த்தாலும்..., அவனுக்கு உன்னை மட்டும்தான் புடிக்கும். அவன் உனக்கு மட்டும்தான் சொந்தம்..., அவன் ஆயிரம்பேரோட பேசினாலும்..., சில தனிப்பட்ட பேச்சுக்களை அவனால் உன்கிட்டே மட்டும்தான் பேச முடியும்...,

“சீண்ட முடியும்..., கொஞ்ச முடியும்..., கெஞ்ச முடியும்..., உருக முடியும்..., உருக வைக்க முடியும்..., இன்னும்...”அம்மம்மா..., அடுத்த அடுத்த வார்த்தைகள் அவள் செவியில் நுழைந்து, அவளை சிவக்கச் செய்ய..., “ஆண்டவா..., போதும்...,

முதல்ல கிளம்புங்க..., உங்ககிட்டே கேட்டே இருக்கக் கூடாது...” இருக்கும் சூழல் அவளை இவ்வாறுதான் சொல்லத் தூண்டியது.

“இல்ல..., உனக்கு இன்னும் கொஞ்சம் டவுட் இருக்குபோல..., எல்லாத்தையும் கிளியர் பண்ணிடுறேன்...” உள்ளடக்கிய சிரிப்பில் அவன் உரைக்க, அவனது சிரிப்பில் தானும் இணைந்து கொண்டாள்.

“சரி..., இன்னைக்கு ஈவினிங் வெளியே போகணும்..., சீக்கிரம் வா...” உரைத்தவன் வண்டியைக் கிளப்பிச் சென்றுவிட்டான்.

மாலையில் அவள் வீட்டுக்கு வர, அவள் எங்கே செல்கிறோம் எனக் கேட்டும் சொல்லாமல்..., ஒரு கணினி கடைக்குள் நுழைந்தான்.

‘இங்கே ஏன்...?’ அவள் கேள்வியாய் அவனை நோக்க...,

“ஒரு டெஸ்க்டாப் வேணும்னு சொன்னியே..., அதான்..., அன்னைக்கு ஏதோ மாடல் சொல்லி, அதோட பீச்சர்ஸ் எல்லாம் நல்லா இருக்குன்னு சொன்னியே..., அந்த மாடல் இருக்கான்னு கேள்..., செக் பண்ணு, நான் ஒரு போன் பேசிட்டு வரேன்...” அலைபேசியை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான்.

“சொல்லுங்க மேம்...” சேல்ஸ்மேன் அவளை நெருங்கி வினவ, வேறு வழியின்றி அர்ஜூன் சொன்னதைச் செய்தாள். அவள் அனைத்தையும் கேட்டு முடித்து, ஒரு மாடலை செலக்ட் செய்ய..., மறுப்பே இல்லாமல் அதை ஆர்டர் கொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினார்கள்.

அவன் செய்கையில் ஒரு மாதிரி பரவச மனநிலையில் இருந்தாள் காவியா. வாழ்க்கை மிகவும் அழகாகத்தான் அவளுக்குத் தோன்றியது. அதை அழகாக்கியவன் அர்ஜூன் என்பதில் அவளுக்கு மாற்றுக் கருத்தே இருக்கவில்லை.

***

# பகுதி – 22

அர்ஜூன் செய்யும் சின்னச் சின்ன செய்கைகள் கூட..., அவளை வாழ்க்கையை தைரியமாக எதிர்கொள்ளச் செய்தது. பேங்க் வேலை துவங்கி, கரண்ட் பில், டெலிபோன் பில், பர்ச்சேஸ்..., தெரியாத இடத்துக்குச் செல்ல வேண்டி வந்தால்..., அதைபற்றிய விசாரிப்பு என அவளையே முன்னிறுத்தினான்.

அவள் தயங்கினால் கூட அனுமதிப்பது இல்லை. “இதெயெல்லாம் நீ பழகிக்கணும்...” ஒரே வார்த்தையில் முடித்து விடுவான்.

அவளுக்கு பிடித்தது என, அவன் செய்யும் விஷயங்கள்..., ஒரு மெலடி பாடல் நன்றாக இருக்கிறது எனச் சொன்னால்..., மறுமுறை அது தொலைக்காட்சியில் வந்தால்..., அவளை அழைத்து காட்டுவது துவங்கி, அவள் புத்தகம் படிப்பாள் எனத் தெரிந்து, சினேகிதி, ஆனந்த விகடன் என வாராந்திர பத்திரிக்கைகளை நினைவில் வைத்து வாரம் தவறாமல் வாங்கி வந்து கொடுப்பது வரைக்கும் தொடர்ந்தது.

இரவுகளின் தனிமைகளில் கூட..., சிறு அணைப்பு..., இதழ்களுக்குள் தொலைந்துபோகும் சில முத்தங்களைத் தவிர..., அவன் தேவைக்கென அவளை நாடவில்லை.

அன்றைய இரவில்..., தயக்கமாக அவள் அதைப்பற்றி கேட்க, “இப்போ கூட என்னோட தேவை என சொல்கிறாயே தவிர..., நம்ம வாழ்க்கையை துவங்கிவிடலாம் நீ நினைக்கலை..., செக்ஸ்..., தேவையை தீர்த்துக்கொள்ளும் விஷயம் கிடையாது காவியா.

“அது..., ரெண்டுபேரும் ஆத்தமார்த்தமா இணைய வேண்டிய நிகழ்வு. அதற்காக..., நான் ஒண்ணும் அந்த ஆசையே இல்லாத ஜடம் கிடையாது. உன்னைத் தெரிந்துகொள்ளும் வேட்கையும், வேகமும் எனக்குள் கொட்டிக் கிடக்கு.

“ஆனா..., அதை தீர்த்துக்கொள்ள நான் விரும்பலை..., உன்னை உணர விரும்பறேன்..., அதே மாதிரி..., நீயும் என்னை உணரணும். என்னைக்கு அந்த நாள் வருதோ..., அது என்னைக்கு உன் கண்ணில் தெரியுதோ..., அன்னைக்கு, கொஞ்சம்கூட தயங்காமல் உன்னை நெருங்குவேன்...” அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அந்த அணைப்பில் நிச்சயம் கரைந்தாள் என்பது மிகையில்லை. அதைவிட, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது..., தான் இன்னும் மனதளவில் சிறு தயக்கத்தில் இருப்பதை அவன் உணர்ந்துகொண்ட விதம்..., மென்மையாக அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள்.

மறுநாள் காலையில்..., அலுவலகத்தில் மீட்டிங் இருக்க..., காவியாவின் வேலையை டிடி பாராட்ட..., அவனும் அங்கே இருந்த பிறகும், அவனிடம் சொல்லி..., அதை பகிர்ந்த பிறகே அது முழுமை அடைந்ததை உணர்ந்து, அவளுக்கே திகைப்பாக இருந்தது.

அன்று மாலையில், அவள் முகத்தில் தாண்டவமாடிய சந்தோஷத்தில், அவன் நிம்மதி அடைந்தான் என்பது உண்மை. “அர்ஜூன்..., அந்த நேரம் எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? எல்லார் முன்னாடியும்..., ஹையோ..., அவங்களுக்கு அதை சொல்ல வேண்டும் என்ற அவசியமே இல்லை. ஆனா கூட...,

“பாராட்ட கூட ஒரு மனசு வேணும் தெரியுமா...?” ஆயிரம் முறையாக அதைச் சொல்லும் மனைவியை, அவள் சொல்லும்பொழுதெல்லாம் கொஞ்சம்கூட சுணக்கமே இல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தான்.

அதே நேரம்..., அவள் தன்னை அர்ஜூன் என அழைத்ததை உணர்ந்தவன், “ஏய்..., என்னை எப்படி கூப்ட்ட..., ஞாபகம் இருக்கா...?” கண்களில் ஆர்வம் மின்ன கேட்க, சட்டென அமைதியானாள்.

அமைதியாக அவன் அருகில் அமர்ந்தவள்..., "எனக்கு..., உங்க நேம் ரொம்ப புடிக்கும். அதுவும்..., என்னோட டீனேஜ் வயசில் இருந்தே அந்த நேம் மேலே ஒரு கிரேஸ்..., பிறகு வாழ்க்கை எப்படியோ போன பிறகு, அதைப்பற்றி எனக்கு நினைவே இல்லை.

"ஆனா..., பஸ்ட் டே..., ஷீபா மேடம் உங்க பேரை சொன்னப்போ..., என்னை மீறி உங்களைப் பார்த்தேன்..." மென்மையாக இதழ் கடித்துக் கொண்டாள்.

"அப்போ என்னை சைட் அடிச்சிருக்க..., மேலே சொல்லு..." ஆர்வமானான்.

"பிறகு..., நீங்க உங்க நேம் சொல்லி கூப்பிடச் சொன்னப்போ..., மனசுக்குள் ஒரு காலத்தில் என்னை அறியாமலே நேசித்த ஒரு பெயர் கொண்ட உருவம் எதிரில் இருக்கையில், சாதாரணமா கூப்பிட முடியலை..., அதான்..." முகம் செவ்வானமாய் சிவக்க, செல்ல சிணுங்கலோடு அவன் தோளில் தன் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

"இப்போ..." அவன் துருவ...

"அர்ஜூன்..., அர்ஜூன்..." சிணுங்கலாக, சிலாகிப்பாக அவள் உரைக்க, மென்மையாக அவளை அணைத்தவன், "என்னைவிட என் நேம் அவ்வளவு புடிச்சிருக்கு போல..., எனக்கு பொறாமையா இருக்கு..." மெல்லிய சீண்டல் அவனிடம்.

"அந்த நேம் இல்லன்னாலும் என் அர்ஜூனை எனக்குப் புடிக்கும்..." ரோசமாக உரைத்தவள், "யூ ஆர் மை சோல்..." ஆத்மார்த்தமாக உரைக்க, "ஏய்..., என்னை ரொம்ப சீண்டுற பொண்டாட்டி..." ஒரு மாதிரி இறுக்கிக் கொண்டான்.

"அதுக்கெல்லாம் நீங்க மசியிற ஆளா என்ன...?" அவன் சிகையை அழுத்தமாக பற்றிக் கொள்ள, "ம்ஹூம்..., இது முடியாது..., திருட்டுப் பூனையா மாத்தாமல் விட மாட்ட போல..., காவியா..., ரியலி ஐ'ம் லூசிங் மை கண்ட்ரோல்..."

அவளை படுக்கையில் தள்ளியவன், அவள்மேல் படர்ந்தான்.

“ம்ஹும்…” கேள்வியா…, கேலியா…, அழைப்பா…, ஒரு மாதிரி குழைந்துபோய் அவள் குரல் ஒலிக்க, இந்த படுக்கையறை பேச்சு…, அவளுக்குள் கனலை மூட்டியது.

முகம் முழுக்க ஆயிரம் முத்தங்களால் அர்ச்சித்தவன்…, அவள் இதழ்களுக்குள் தொலைந்து போனான். அவன் கரங்கள் முதல் முறையாக அவள் மேனியில் இடம் மாறி, தடுமாற…, “அர்ஜூன்…” சிலிர்த்து அடங்கியது அவள் தேகம்.

“காவியா…, ஐ’ம் ஹெல்ப் லெஸ்…” அவள் மார்புக்கு மத்தியில் அவன் தொலைந்து போக…, அவனை தனக்குள் புதைத்துக்கொள்ள போராடினாள். வாழ்க்கையை வாழ்ந்துவிட அவள் முடிவெடுத்தாள்…, அதை அவனுக்கு தன் செய்கையால் உணர்த்தினாள்.

தன் தடைகளைக் கடந்து அவன் முன்னேற…, வெட்கமாய்…, கிறக்காமாய் மூடிக்கொண்டன அவள் விழிகள்…, ஒற்றை போர்வைக்குள்…, காற்றுக்கு கூட அனுமதி கொடுக்காமல் அவளை இறுக்கியவன்…, ஈர இதழ்களால் அவள் மேனியில் கோலமிட்டான்.

இதுவரை தான் கண்டிராத, உணர்ந்திராத புது உணர்வு அவள் தேகமெங்கும் பாய…, அவன் கரங்களின் வெம்மையும், அதில் உணரும் உரிமையும், அவள் தேகம் நெகிழ்வதை…, அவனுக்கு பதில் கொடுப்பதை திகைப்பாய், சிலிர்ப்பாய் உணர்ந்தாள்.

பகிர்தல் என அவன் உரைத்தபொழுது புரியாத விஷயம்…, அவன் உணர்த்துகையில்…, “அர்…ஜூ…ன்…” இந்த நிலையில், அவன் விலகினால், தாங்கவே மாட்டேன் என்பதான ஒரு நிலை…, தன்னை மொத்தமாக உருக வைக்கும் அவன் இதழ்கள்…, அவன் கரம் ஊர்ந்த

இடங்களில் இதழ்கள் பயணிக்க..., அவனை தடுக்க முயலாமல், முடியாமல் திளைத்திருந்தாள்.

“காவியா...” கொஞ்சலான அவன் அழைப்பு..., “உனக்கு ஓகே தானே...” இதழ்களை இதழ்களால் வருடி வினவ, முதல்முறையாக அவன் கற்றுக் கொடுத்த பாடத்தை, அவனுக்கு திருப்பிப் படித்தாள்.

அதுவே அவளது சம்மதத்தை அவனுக்கு உணர்த்த..., மொத்தமாக அவளைக் கொள்ளையிடத் துவங்கினான். கொள்ளை போவதில் இத்தனை ஆனந்தமா, அவன் நெருக்கம்..., அவன் வேகம்..., அனைத்தையும் சந்தோஷமாகவே தாங்கிக் கொண்டாள்.

அவன் களைத்து விலக, அவன் கன்னத்தில் ஆழப் பதிந்தது அவள் இதழ்கள். அவளைத் தூக்கி தன்மேல் போட்டுக் கொண்டவன், “நான் அவசரப்படலையே...” வேகம் அடங்கிய பிறகு, சிறு குற்ற உணர்வு.

தன்னைக் கொண்டாடியவன் வருத்தப்படுவதா...? எண்ணியவள், “இதுவே லேட்...” அவனைச் சீண்ட, அவள் தனக்காகத்தான் உரைக்கிறாள் என்பதை உணர்ந்தவன், அவளை விலக அனுமதிக்காமல் விழி மூடினான்.

அவள் உறங்கிய பிறகு, தன் அருகில் படுக்க வைத்தவன்..., மென்மையாக அவள் நெற்றியில் இதழ் ஒற்ற, “அர்ஜூன்...” தூக்கத்தில் அதை உணர்ந்தவள், அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

முதல்முறையாக வாழ்க்கையை வாழ்ந்த தருணம்..., நிம்மதி அவள் முகத்தில் பூக்க, அதை ஆசையாய் பார்த்திருந்தான்.

***

# பகுதி – 23

அன்று வெள்ளிக்கிழமை..., அரசாங்க விடுமுறை நாள் வந்திருக்கவே, விடுப்பில் இருந்தார்கள். அரசி தன் பேகை ஹாலில் கொண்டுவந்து வைக்க, அலுப்பாக அவரைப் பார்த்தான்.

“அம்மா..., நானும் கூட வரவா...?” அவன் கேட்க, அவனை முறைத்தவர், அறைக்குள் எதையோ எடுக்கச் சென்றார்.

“அம்மா..., நான் சொல்வதை கேக்கவே கூடாதுன்னு இருக்கீங்களா? அடுத்த வாரம் எனக்கு சென்னைக்கு போற வேலை இருக்கு..., அப்போ சேர்ந்து போகலாம்னு சொன்னால் கேக்கவே மாட்டேங்கறீங்க..., அதோட..., இன்னும் ரெண்டு வாரத்தில் பூஜை லீவ் ஐந்து நாள் சேர்த்தாப்புல வருது..., அதுக்கு குடும்பத்தோட போகலாம்னு சொன்னாலும் கேக்கலை..., என்னம்மா இது...?” தாயின் பின்னல் அலைந்துகொண்டிருந்தான் அர்ஜூன்.

தாயின் அருகில் குழந்தையான மாறிய அவன் செய்கையும், குரலும்..., அவனை விழிஎடுக்காமல் தொடர்ந்தது அவள் பார்வை.

“டிக்கெட் எல்லாம் புக் பண்ண பிறகு என்ன பேச்சு இது...?” அவனோ முகத்தை தூக்கி வைத்துக் கொண்டான்.

“அர்ஜூன்..., உனக்கே நீ சொல்வது சரியா படுதா? அங்கே கடையை மொத்தமா கொடுக்கறேன்னு பத்மாகிட்டே சொல்லிட்டு, என் பாட்டுக்கு கிளம்பி வந்துட்டேன். இங்கே வந்து கிட்டத்தட்ட ரெண்டு மாசம் முடிஞ்சு, மூணாவது மாசமும் துவங்கியாச்சு.

“இன்னுமே ப்ராப்பரா எதுவும் செய்யலன்னா..., பாவம் அவளுக்கும் மனசுக்குள் பயம் இருக்காதா? எங்கே அவளுக்குத் தெரியாமல் வேற யாருக்காவது

கொடுத்துடுவோமோன்னு தவிக்கிறா..., பத்தாதுக்கு அந்த டெயிலர் வேற அவளை மிரட்டுறான் போல...

“எல்லாத்துக்கும் ஒரு முடிவு கட்டத்தான் போறேன். இதுக்குமேலே இன்னும் ஒரு வாரம்னா..., எனக்கென்ன சென்னை புதுசா..., இல்ல அந்த சூழல் புதுசா..., மொத்தமா முடிச்சுட்டு இங்கேயே வந்துடுறேன். வீட்டை மட்டும் வாடகைக்கு விட முடியுமான்னு பாக்கணும்.

“எவ்வளவு நாள்தான் பூட்டியே வைக்க முடியும், மேல் போஷனை வேண்ணா நமக்காக ஒதுக்கிக்கலாம்..., போனா வந்தா நமக்கும் வேணுமே. சொன்னா கேளுப்பா...” அவனுக்கு குறையாமல் அவரும் கெஞ்சினார்.

“என்னவோ போங்கம்மா..., சரி பாத்துகோங்க..., ஏதாவது ஹெல்ப் வேணும்னா..., காவியாவோட அண்ணனையோ..., இல்லன்னா பரத்தையோ, சிவேஷையோ கேளுங்க..., அவங்க போன் நம்பர் இருக்கு தானே...” வேறு வழியின்றி அவன்தான் இறங்கிப் போக வேண்டி இருந்தது.

காவியாவோ..., பரத், சிவேஷ்... என்ற பெயர்களை எங்கேயோ கேட்டிருக்கிறேனே..., என்பதில் சுழன்றது. பாஸ்கரும் இந்த பெயரைச் சொல்லக் கேட்டிருக்கிறாள்..., அப்படியென்றால்..., அவளுக்கு குழப்பமாக இருந்தது.

அர்ஜூனிடம் பாஸ்கர் பற்றி கேட்க எத்தனையோ நாள் நினைத்திருக்கிறாள். ஆனால்..., நன்றாக செல்லும் வாழ்க்கையில் தேவையில்லாத பேச்சு ஏன் என தவிர்த்து வந்தாள். ஆனால்..., இன்று கேட்டே ஆகவேண்டும் என முடிவெடுத்தாள்.

“பாட்டி நானும்..., நானும்...” ப்ரதீப் தன் ஸ்கூல் பேகை தூக்கிக்கொண்டு அவரிடம் ஓடினான்.

“டேய்..., நீ எங்கடா போற...” அவனைத் தடுத்தான்.

“நான் அவனையும் அழைச்சுட்டுதான் போறேன். காவியாவோட அம்மா இவனைப் பாக்கணும்னு

ரொம்பநாளா கேட்டுட்டு இருக்காங்க. இவளோட தங்கச்சிக்கு இப்போ காலேஜ் ஸ்டைக்காம்..., அவ வீட்டில்தான் இருக்கா..., இவனை கூட்டி வாங்கன்னு சொன்னாங்க...” பேரனை தூக்கிக் கொண்டார்.

“காவியாகிட்டே கேட்டீங்களா...?” இதற்கு அவள் என்ன சொன்னாள் என அவனுக்கு தெரிய வேண்டி இருந்தது.

“அதெல்லாம் சொல்லிட்டேன்..., அவ ஓகே சொன்ன பிறகுதான் முடிவே எடுத்தேன்...” அசால்ட்டாக உரைத்தவர், என்னை பஸ்ஸ்டாப்ல டிராப் பண்ணு. வா...” பையை தூக்கிக் கொண்டார்.

“சொன்னாலும் கேக்கலை..., சரி வாங்க..., காவியா..., இவங்களை டிராப் பண்ணிட்டு வரேன்...” அவரிடமிருந்து பேகை வாங்கிக் கொண்டான்.

அவர்களை அனுப்பிவிட்டு வீட்டுக்கு வர..., காவியா தொலைகாட்சியில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் அருகில் வந்து அமர்ந்தவன், அவள் மடியில் படுத்துக் கொள்ள, அவன் தலை கோதியவள், “அம்மாகூட போக முடியலன்னு வருத்தமா இருக்கா...?” தன்மையாக கேட்டாள்.

“ம்கும்..., அவங்க என்னைக்காவது எல்லாத்துக்கும் என்னை துணைக்கு கூப்ட்டு இருக்காங்களா...? தெம்பா இருக்குற வரைக்கும் அவங்க வேலையை அவங்களே பாத்துக்கட்டும். இருந்தாலும் கேட்பது என் கடமை ஆச்சே...” இமைகளை மூடியவாறே பதில் கொடுத்தான்.

“என்னங்க..., நான் ஒண்ணு கேக்கவா...?” சில நிமிட மௌனத்துக்குப் பிறகு கேட்டாள்.

“ம்...” அவன் அனுமதி வழங்க..., “உங்களுக்கு பாஸ்கரைத் தெரியுமா...?” எங்கே கோபப்பட்டு விடுவானோ என்ற பயம் ஒரு மூலையில் இருக்கவே செய்தது.

“காலேஜ்ல ஒண்ணா படிச்சவனை தெரியுமான்னு கேட்டால் நான் என்ன சொல்லட்டும்...” அசால்ட்டாக வினவ,

திகைப்பது அவளது முறை ஆயிற்று.

அவள் அமைதியாக இருக்கவே..., விழி திறந்தவன், அவள் அருகில் எழுந்து அமர்ந்தான். “நாம இதை முதலும் கடைசியுமா பேசி முடிச்சுடலாம்...” ஒரு பெருமூச்சை வெளியிட்டான்.

“நான்..., பாஸ்கர்..., பிரபு..., பரத், சிவேஷ்..., கணேசன்..., எல்லாரும் ஒண்ணா யூஜி, பீஜி படிச்சோம்..., பரத் சிவேஷ் சென்னையில் இருக்காங்க..., பிரபு, ஆஸ்திரேலியா போய்ட்டான்..., கணேசன் டெல்லியில் இருக்கான்...” சிறு இடைவெளி விட்டான்.

“பாஸ்கரோட குணம் உனக்கு எந்த அளவு தெரியும்னு எனக்குத் தெரியலை. ஆனா எங்களுக்கு நல்லா தெரியும். அதாவது..., நாமெல்லாம்..., நமக்குப் பிடிச்சவங்களுக்கு ஒரு விஷயம் புடிக்கும்னா அதைச் செய்வோம்..., ஆனா பாஸ்கர்..., அதுக்கு எதிரா செய்வான்...” அர்ஜூன் சொல்ல, பாஸ்கர் தனக்குச் செய்த செயல்களுக்கு பின்னால் இருந்த காரணத்தை முதல் முறையாக அறிந்தாள்.

“எங்களுக்கு அவனோட ஆட்டிடியூட் பிடிக்கலன்னாலும்..., நம்மளோடவே இருக்கும் ஒருத்தனை சில நேரம் தவிர்க்க முடியாதே..., அப்படித்தான் அவனும்.

“உதாரணமா..., நமக்கு கேக் பிடிக்கும்னு சொன்னா..., அவன் சாக்லேட் கொடுப்பான்..., புளூ கலர் ட்ரெஸ் பிடிக்கும்னு சொன்னா..., ரெட் கொடுப்பான்..., அஜித் மூவி போகலாம்னா..., விஜய் மூவிக்கு டிக்கெட் வாங்கிட்டு வருவான்...

“நாங்க எத்தனையோ முறை சொல்லியும் அவன் மாறவே இல்லை. அப்போவே நாங்க பேசிப்போம்..., அவனுக்கு வர பொண்டாட்டி ரொம்ப பாவம்னு...” உரைத்தவன், காவியாவின் கரத்தை பற்றிக் கொண்டான்.

“எனக்கு ஒன்றுமில்லை..., நீங்க சொல்லுங்க...” அவள் சொல்ல..., தொடர்ந்தான்.

“இதையெல்லாம் விட பெரிய விஷயம்..., தன்னால் முடியாததை வேற யாரும் செய்யக் கூடாதுன்னு நினைப்பான். அதேபோல்..., அவனுக்காக யாராவது விட்டுக் கொடுத்தாங்கன்னு தெரிந்தால்..., சேடிச்ட்டாவே மாறிடுவான். அவன் ரொம்ப நல்ல அத்லட்...,

“இன்டர் காலேஜ் காம்பட்டிஷன்ல எல்லாம் கலந்துப்பான்..., ஜெயிப்பான்., சில நேரம் தோற்றுப் போவான். அதே நேரம்..., எங்க காலேஜ் போட்டிகள்ள தோத்துட்டா..., அவனை நார்மலா பாக்கவே நாலு நாளாகும். அதுவும் எங்க கூட்டத்தில் எவனாவது வின் பண்ணிட்டா..., வெறியாயிடுவான்.

“அவனுக்காக நாங்க விட்டுகொடுத்தா..., அதுக்கும் பிரச்சனை பண்ணுவான். கடைசியா..., அவனோட போட்டியில் கலந்துக்கறதையே நாங்க விட்டுட்டோம். அதே மாதிரி..., அப்போவே..., காதல் கல்யாணம்தான் பண்ணிப்பேன்னு சொல்வான்.

“அது பரவாயில்லை..., ஆனா..., அதற்கு அவன் சொல்லும் காரணம்..., அப்போதான் அவ அடங்கி இருப்பா..., கேள்வி கேட்க மாட்டா..., ப்ளா ப்ளா..., எனக்கு அதையெல்லாம் கேட்க கூட பிடிக்காது. எங்க யாருக்குமே அதில் உடன்பாடும் இருந்தது இல்லை.

“ஒரு வழியா எல்லோரும் காலேஜ் முடிச்சோம்..., நான் கவர்மெண்ட் எக்ஸாம்க்கு தயாராக..., அவனோட அப்பா அந்த நேரம் ஒரு விபத்தில் இறக்கவே, வாரிசு அடிப்படையில் அவனுக்கு ஜாப் கிடைத்தது. எல்லோரும் அவங்க பாதையில் போனாலும், அடிக்கடி பேசுவோம்...

“திடீர்ன்னு ஒரு நாள் தனக்கு கல்யாணம்னு மத்தவங்க கிட்டே சொன்னவன், என்கிட்டே மட்டும் சொல்லலை..., அப்போவே எனக்கு ஒரு சந்தேகம்..., அது என்னன்னு எனக்கு அப்போ புரியலை..., ஆனா..., அன்னைக்கு உனக்கு அர்ஜூன் என்ற பெயர் பிடிக்கும்னு சொன்னப்போ

புரிஞ்சது...” அவன் நிறுத்த, அதிர்ந்துபோய் அவனைப் பார்த்தாள்.

“இல்லையே..., நான் அவன்கிட்டே சொன்னதா எனக்கு ஞாபகம் இல்லையே...” அவள் படபடக்க...,

“உனக்கு தெரியாமலே நீ அவனுக்கு உணர்த்தி இருக்கலாம்...” அவன் நிறுத்த, வேகமாக சிந்தித்தவளுக்கு..., தோழிகளோடு தியேட்டர் போயிருந்தபொழுது, அர்ஜூன் என்ற ஒரு குழந்தையை கொஞ்சிய ஞாபகம் அவளுக்கு வந்தது.

அதை உரைக்க..., “அது போதுமே...” மெல்லியதாக சிரிக்க, அவனை செல்லமாக அடித்தாள்.

அந்த நிலையிலும் அவள் கண்கள் கலங்கியது. “ம்ச்..., அவன் அப்படித்தான். அவனை எல்லாம் திருத்த முடியாது...” அவன் உரைக்க,

“காலம் முழுக்க..., என்னால் இப்படி ஒருவனோடு வாழ்ந்திருக்க முடியுமா? அவள் கேட்டாள்.

“எனக்கு பதில் சொல்லத் தெரியலை. ஆனா..., உன் சுயத்தை இழந்து..., குழந்தைக்காக அவனை சகித்திருக்கலாம்...” நிறுத்தினான்.

“அவனோட கல்யாணத்துக்கு நாங்க யாருமே வரலை..., அதுக்குப் பிறகு அவனைப் பற்றி பேச கூட நாங்க ததயாரா இருக்கலை. வருஷம் போக..., ஒரு நாள்..., எங்க அம்மாவுக்கு ஆக்சிடன்ட்ன்னு போன் வந்தப்போ..., பதறிபோய் நான் ஹாஸ்பிடல் வந்தப்போதான் அவனைப் பார்த்தேன்.

“எங்க அம்மா உயிருக்குப் போராட..., பித்து பிடிச்சவன் மாதிரி அங்கே அலைந்த என்னை ஒரு கரம் தடுத்தது. யார்ன்னு பார்த்தால் பாஸ்கர். என்னை மீறி நான் விஷயத்தை அவன்கிட்டே சொல்லி அழ, அவனோ...,

அங்கே விந்தணு தானம் கொடுக்க வந்தேன்னு சொன்னான்.

“மற்ற நேரமா இருந்திருந்தால் நான் நிச்சயம் நம்பியிருக்க மாட்டேன். அந்த நேரம்..., நடப்பது, பேசுவது, செய்வது..., இப்படி எதுவுமே தெரியாமல் இருக்க, ‘நீயும் தானம் கொடு..., இதனால் உங்க அம்மா பிழைக்கலாம்னு’ அவன் சொன்ன வார்த்தை...,

“முட்டாள்..., முட்டாள்..., கொஞ்சம் கூட யோசிக்காமல்..., ஆராயாமல், அவன் சொன்னதைச் செய்தேன்...” தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

அவனை வேகமாகத் தடுத்தவள்..., “இதில் உங்க தப்பு எதுவும் இல்லை...” அணைத்துக் கொண்டாள்.

அடுத்து அதை நான் சுத்தமா மறந்தே போயிட்டேன். ஹாஸ்பிடல், அம்மா, வேலை..., எதையுமே யோசிக்க எனக்கு நேரம் இல்லை. ஒரு வருஷம் போனப்போதான்..., பரத் அதைச் சொன்னான்..., பாஸ்கர் தற்கொலை பண்ணிகிட்டான்..., அதுவும், அவனுக்கு குழந்தை பொறந்து ரெண்டு நாள்தான் ஆகுதுன்னு...

“அப்படியே..., இடியே என் தலையில் விழுந்த மாதிரி இருந்தது. அவனைப் பார்க்க முன்னாடி..., உன்னைத்தான் பார்க்க வந்தேன்..., அங்கே நான் கண்ட காட்சி..., குழந்தையை நெஞ்சோட அணைச்சுக்கிட்டு..., திக்ப்ரம்மை பிடிச்ச மாதிரி நீ உக்காந்து இருந்தியே...

“எல்லாம் என்னால்தான்னு ஒரு எண்ணம். அந்த ஹாஸ்பிடல்ல போய் விசாரித்தால்..., நீங்கதானே அன்னைக்கு சம்மதம்னு சைன் போட்டு எல்லாம் பண்ணீங்கன்னு சொல்ல..., என்னோட குழப்பத்தில், எவ்வளவு பெரிய முட்டாள்த்தனத்தை செய்துட்டேன்னு எனக்குப் புரிந்தது.

“சத்தியமா..., இப்படியெல்லாம் ஆகும்னு நான் நினைக்கவே இல்லை காவியா. அதுவும்..., உன்

வாழ்க்கை..., என்னால் பாழானது...” என்னை புரிந்துகொண்டாய் தானே..., என அவன் கண்கள் இறைஞ்சியது.

“நீங்க வருத்தப்படும் அளவுக்கு நான் பெருசா ஒண்ணும் வாழ்ந்துடலை...” விரக்தியாக ஒலித்தது அவள் குரல்.

“பிறகு எப்படி என் அண்ணனை பாத்தீங்க...?” அவள் கேட்க,

“எங்க அம்மாகிட்டே சொல்லி அழுதேன். அவங்கதான்..., வழியை காண்பித்தாங்க. அதுக்குப் பிறகு உன்னைப் பற்றி விசாரித்தேன்..., உன் வீடு, படிப்பு..., அவன் செஞ்சுட்டு போன செய்கை..., உன் வீட்டில் நடக்கும் போராட்டம், அவன் அம்மா வாணியோட பேச்சு...

“உன்னை இப்படியே விட்டால்..., நீயும் ஒன்றுமில்லாமல் போய்விடுவாயோ என்ற பயம்..., உன் அண்ணனைப் பார்த்து, பாஸ்கர் பத்தி, ப்ரதீப் பத்தி, எல்லாம் சொல்லி..., உன்னை வெளியே கொண்டுவர படிக்க வைத்து...,

“உன் அண்ணன் என்கிட்டே கேட்டான்..., ‘நீங்க இதையெல்லாம் எந்த அர்த்தத்தில் செய்யறீங்கன்னு...’ நான் சொன்னேன்..., என் மகனின் அம்மா என்ற உரிமையில் செய்யறேன்னு..., அவன் சமாதானம் ஆகிட்டான்.

“அதையே எங்க அம்மாகிட்டே சொன்னப்போ..., பயங்கரமா கோபப்பட்டாங்க. ஒரு பொண்ணோட மனசு, வாழ்க்கை என்றால் உனக்கு அவ்வளவு இளைப்பமா போச்சான்னு..., அவளை அவளுக்காக ஏத்துக்க முடியலன்னா..., இப்படியே விலகிடுன்னு சொன்னாங்க.

“ஆனா..., கையிலே குழந்தையோட..., வாழ்க்கைன்னா என்னன்னே தெரியாத மிரட்சியோட..., எதிர்காலம் என்ன என்ற பயத்தோட இருந்த அந்த காவியா..., என் மனசுக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதை என்னால் தவிர்க்க முடியலை.

“அதுவும்..., நீ இங்கே வேலைக்கு வந்து சேர்ந்த அன்னைக்கு..., உன் முன்னாடி வந்து நிக்கணும்னு தோணிச்சே தவிர..., பையனைப் பாக்கணும்னு தோணலை..., அப்போ புரிஞ்சுகிட்டேன்..., நான் காவியாவைத்தான் விரும்பறேன்..., பிள்ளை ஒரு சாக்குன்னு...” அவள் நெற்றியில் முட்ட, கண்ணில் நீரோடு அவன் தோள் சாய்ந்தாள்.

பாஸ்கரின் குணத்துக்கு..., அவன் இன்று இருந்திருந்தால், ப்ரதீப்பை எப்படி நடத்தியிருப்பான் என எண்ணுகையிலேயே அவள் தேகம் நடுங்க, “ம்ச்..., ஒண்ணும் இல்லை காவியா..., எல்லாம் கடவுள் கையில்தான் இருக்கு..., நம்ம கையில் இல்லை. சோ...” ஆதரவாக அணைத்துக் கொண்டான்.

அவளை விலக்கி அமர வைத்தவன், “வாழ்க்கை என்பது நான் முன்னாடி போறேன்..., நீ என் பின்னாடி வா என்ற பயணம் கிடையாது. ரெண்டுபேரும் கைகள் கோர்த்து நடக்க வேண்டிய முடிவற்ற பயணம்.

“அதைத் தெரிஞ்சுக்காத சிலர்தான்..., தேவையில்லாமல் நான் பெரியவன், நீ பெரியவன்னு சொல்லி, வாழ்க்கையை சிக்கல் ஆக்கிக்கறாங்க. இன்னைக்கு மாதிரி..., என்னைக்கும்..., உன்னோட கையை விடாமல் நான் புடிச்சுக்கணும்.

நிச்சயம் அவன் செய்வான் என்பதில் அவளுக்கு எந்த ஐயமும் இல்லை. வாழ்க்கைப் பாதை அவர்கள் முன்னால் நீண்டு கிடந்தது. அதில் எத்தனை தடைகள் வந்தாலும், கோர்த்திருக்கும் அவர்கள் கரங்கள், சேர்ந்தே அதைத் தாண்டும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

**நன்றி.**